# உதயன்

www.onlineuthayan.com

**34** பக்கங்கள் சுடர் 28 கதிர் 030 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 11 புதன்கிழமை (26/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00





# மாணவர் விடுதலை கோரி உயர்நீதிமன்றில் வழக்கு

## தாக்கல் செய்கிறது தமிழ்க் கூட்டமைப்பு

கொழும்பு, டிசெம்பர் 26

வெலிக்கந்த புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் விடுதலைக்காக உயர்நீதிமன்றத்தை நாடுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

தடுத்துவைக்கப்பட்டுள்ள மாணவர்களான வி.பவானந்தன், ப.தர்ஷானந்த், க.ஜெனமேஜெயந், எஸ்.சொலமன் ஆகிய நால்வரையும் விடுதலை செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றில் விரைவில் இந்த மனுத் தாக்கல் செய்யப்படும் என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சட்டத்துக்கு முரணான வகையிலேயே பல்கலைக்கழக மாணவர்கள் புனர்வாழ்வு முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்து அதற்கான சட்ட வியாக்கியானங்களையும் அந்த மனுவில் கூட்டமைப்பு சுட்டிக்காட்டவுள்ளது.

நாட்டில் நடைமுறையிலிருந்த அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளபோதிலும், அதிலுள்ள முக்கிய சில ஷரத்துகள் சட்டபூர்வமற்ற முறையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குள் புகுத்தப்பட்டுள்ளன.

அவ்வாறு புகுத்தப்பட்ட ஷரத்துகளுள் ஒன்றான 1721/5 விதியின் கீழேயே யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்ட நான்கு ஒழுங்குவிதிகளுள் 1721/5 ஒழுங்குவிதியானது சரணடைந்தவர்களைப் புனர்வாழ்வின் கீழ் வைத்திருக்க வழிவகுக்கும் வகையில் அமைந்துள்ளது.

ஒருவரைக் கைதுசெய்து

பார்க்க பக்கம் 4

## சுனாமி நினைவு இன்று

யாழ்ப்பாணம், டிசெ.26

ஆழிப்பேரலை ஏற்பட்டு இன்றுடன் 8 வருடங்கள் நிறைவடைகின்றது. 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி இலங்கை, இந்தியா உள்ளிட்ட தெற்காசிய நாடுகளின் கரையோரங்களை சுனாமி தாக்கியதில் பல்லாயிரக்

பார்க்க பக்கம் 4

## நத்தார் தினத்தில் கொன்ஸ்டபிள் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், டிசெ. 26

நத்தார் கடமைக்காக யாழ்ப்பாணம் பெரிய தேவா லயத்தில் பணியிலிருந்த பொலிஸ் கொன்ஸ்டபிள் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு குருநகர் புனித அந்தோணியார் தேவாலயப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நத்தார்தினத்தையொட்டி குறித்த கொன்ஸ்டபிள் தேவா

பார்க்க பக்கம் 4

## கல்வி அமைச்சர் உடன் பதவி விலக வேண்டும்

### ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, டிசெ.26

நாட்டின் கல்வித்துறையை இருளுக்குள் தள்ளிவிட முயற்சிக்கும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன உடனடியாகப் பதவி விலகவேண்டும் என வலியுறுத்தியுள்ளது இலங்கை ஆசிரியர் சங்கம். ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் விஞ்ஞானபாட வினாத்தாள் முன்கூட்டியே வெளியானமைக்கு அவரே முழுப்பொறுப்புக்கூறவேண்டும் என்றும் சங்கம் தெரிவித்தது.

''விஞ்ஞானபாட வினாத்தாள் முன்கூட்டியே வெளியானமை கையும்மெய்யுமாகப் பிடிபட்டமையாலேயே அவர் அது தொடர்பில் கருத்துக் கூறினார். ஆனால் ஏனைய பாட வினாத்தாள்களிலும் குளறு

பார்க்க பக்கம் 4



கிறிஸ்மஸ் பண்டிகை நேற்று உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. வத்திக்கானில் உள்ள புனித பீட்டர் தேவாலயத்தில் புனித பாப்பரசர் பிரார்த்தனையில் கலந்துகொண்டு மக்களுக்கு ஆசிர்வாதம் வழங்கினார்.

## 2013 இலும் தீர்வு இல்லை

### கூறுகிறது ஐ.தே.க.

கொழும்பு, டிசெ.26

''தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுக்காணும் செயற்பாடுகள் குறித்து அரசு உரிய வகையில் அக்கறை செலுத்துவதில்லை. இந்த விடயத்தில் அசமந்தப்போக்கிலேயே செயற்படுகின்றது. அத்துடன், இன ஒடுக்கல் இயந்திரத்தையும் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராகத் தற்போது கட்டவிழ்த்துவிட்டுள்ளது. அரசின் இவ்வாறான செயற்பாடுகள், தமிழர் பிரச்சினைகளுக்கு 2013ஆம் ஆண்டிலும் தீர்வு கிடைக்காது என்றும், அது சங்கிலித் தொடராகவே செல்லும் - தொடரும் என்பதையும் உணர்த்துகின்றன''

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தவிசாளரும், ஊவா மாகாணசபை உறுப்பினருமான கே.வேலாயுதம் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கைது மற்றும் அரசியல் தீர்வு விவகாரம் உட்பட சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- பார்க்க பக்கம் 4

## இலங்கைக்கு எதிராக ஆஸியில் இன்று மாபெரும் போராட்டம்

### பொலிஸார் தீவிர கண்காணிப்பு

கொழும்பு, டிசெ.26

இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு எதிராக ஆஸ்திரேலியாவின் மெல்போர்ண் கிரிக்கெட் மைதானத்துக்கு வெளியில் புலம்பெயர் தமிழர்களால் இன்று பெரும் ஆர்ப்பாட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் உன்னிப்பாக அவதானிக்கப்படவுள்ளது என ஆஸ்திரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை மற்றும் ஆஸ்திரேலிய கிரிக்கட் அணிகளுக்கு இடையில் இன்று புதன்கிழமை இரண்டாவது

பார்க்க பக்கம் 4

## நேற்று மட்டும் 382 விபத்துகள்; மூவர் இறப்பு

கொழும்பு, டிசெ.26

நாட்டின் பல பகுதிகளிலும் நேற்றுக்காலை 10 மணியுடன் முடிவடைந்த 12 மணித்தியாலங்களில் 382 விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இவற்றுள் பெண் ஊடகவியலாளர் ஒருவர் உட்பட

பார்க்க பக்கம் 4

## ஊடகவியலாளர்களுக்கு எமனாக விளங்கிய 2012

### கொலை 89, கடத்தல் 38, கைது 879

கொழும்பு, டிசெ.26

ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் 2012 ஆம் ஆண்டு மிக மோசமான ஆண்டாக அமைந்திருக்கிறது - என்று எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

1995 ஆம் ஆண்டிலிருந்து 2012 வரையான புள்ளி விவரங்களின் அடிப்படையில் பத்திரிகையாளர்களும் வலைப்பதிவாளர்களும் ஊடக செயற்பாட்டாளர்களும் அதிகம் பாதிப்புக்குள்ளான ஆண்டாக 2012ஆம் ஆண்டு காணப்படுகிறது.

2012 ஆம் ஆண்டில் கொல்லப்பட்ட பத்திரிகையாளர்கள் எண்ணிக்கை - 89, கைதுசெய்யப்பட்டோர் 879 பேர், தாக்குதல் அல்லது அச்சுறுத்தலுக்குள்ளானோர் எண்ணிக்கை - 1993, கடத்தப்பட்ட பத்திரிகையாளர்கள் எண்ணிக்கை 38, தாய்நாடுகளில் வாழ முடியாமல் அச்சுறுத்தப்பட்டு வெளிநாடுகளுக்கு தப்பி ஓடியவர்கள் எண்ணிக்கை 73, உயிரிழந்த இணைய ஊடகவியலாளர்கள் 47, கைது செய்யப்பட்டோர் 144.

பார்க்க பக்கம் 4

## முஸ்லிம்கள் மீதான பொறாமை வெளிப்பாடே பிக்குகளின் 'ஹலால்' எதிர்ப்புப் போராட்டம்

### உலமா சபை குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.26

''இலங்கையில் உள்ள அனைத்து முஸ்லிம்கள் மீதான - அவர்களின் இருப்பு மற்றும் வர்த்தகம் மீதான - பொறாமையின் வெளிப்பாடே பௌத்த பிக்குகள் சிலர் மேற்கொள்ளும் ஹலால் சான்றிதழுக்கு எதிரான போராட்டங்களாகும்.

ஹலால் சான்றிதழ் வழங்குவதென்பது ஒரு சமய நடவடிக்கையல்ல. உணவு உற்பத்தியில் அனைத்து மதங்களும் விரும்பும் சுகாதாரத்தை உறுதிப்படுத்தும் செயலே அது.''

-இவ்வாறு அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் பொதுச் செயலாளர் எம்.எம்.ஏ. முபாறக் மௌலவி நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உணவுப் பொருள்களை உட்கொள்ளும் எந்தவொரு மனிதனும் அவை சுகாதார ரீதியாகத் தயாரிக்கப்பட்டிருப்பதையே விரும்புகின்றான்.

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களும் ஆயுதம் ஏந்துவதை எதிர்பார்க்கின்றதா மஹிந்த அரசு?

## முஸ்லிம் - தமிழ்த் தேசிய முன்னணி கேள்வி

கொழும்பு, டிசெ.26

முஸ்லிம்களுக்கு எதிரான அடக்குமுறைகளையும், அராஜகங்களையும் அரசு தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்துவிடுவதனூடாக முஸ்லிம்கள் தமது உரிமைகளைப் பாதுகாக்க ஆயுதம் ஏந்தவேண்டும் என்பதையா அரசு எதிர்பார்க்கின்றது எனக் கேள்வி எழுப்பிய முஸ்லிம் - தமிழ்த் தேசிய முன்னணி, முஸ்லிம்களை அந்த நிலைக்கு ஆளாக்கவேண்டாம் என்றும் வேண்டுகோள் விடுத்தது.

'பொதுபல சேனா' என்ற சிங்கள அமைப்பினூடாகவும், ஏனைய சிங்கள இனவாதிகளினூடாகவும் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அராஜக நடவடிக்கைகளை அரசு ஏன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றது.

சிறிய பிரச்சினை எனக் கூறி அரசு இவற்றைத் தட்டிக்கழித்தால் அதன் எதிர் விளைவுகள் ஆபத்தானதாக அமையும் என்று முஸ்லிம் - தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவரும், கொழும்பு மாநகர முன்னாள் பிரதி மேயருமான அஸாத் ஸாலி அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

முஸ்லிம்களுக்கு எதிராக அரசு மேற்கொண்டுவரும் அடக்குமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

முஸ்லிம்களுக்கு எதிரான அடக்குமுறைகள் அண்மைக்காலமாக நாட்டில் அதிகரித்துவருகின்றன. இதற்கு ஆதாரமாகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை எம்பிலிப்பிட்டியவில் சிங்களக் குழுவினரால் முஸ்லிம் வர்த்தகர்கள் இருவர் தாக்கப்பட்ட சம்பவமும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

எம்பிலிப்பிட்டிய சந்தையில் இரண்டு முஸ்லிம் கடைகள் இருக்கின்றன. இந்த இரு கடைகளிலுள்ள வர்த்தகர்கள் சிங்களக் குழுவினரால் தாக்கப்பட்டுள்ளனர். ஏன் சிங்களக் குழுவினரால் அவர்கள் தாக்கப்பட்டனர்? எதற்காகத் தாக்கப்பட்டனர்?

'புதுபல சேனா' என்ற சிங்கள அமைப்பும், ஏனைள சிங்கள இனவாதிகளும் முஸ்லிம்களுக்கு எதிரான அடக்குமுறைகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், இவர்களுக்கு எதிராக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எம்பிலிப்பிட்டியவில் முஸ்லிம் வர்த்தகர்கள் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தெரியவில்லை.

தம்புள்ளை பள்ளிவாசல் தாக்குதலுக்கு முன்னின்று செயற்பட்ட பிக்குகளுக்கு எதிராக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்கள் கைதுசெய்யப்படுவதற்கான தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றன. ஆனால், அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

முஸ்லிம்களுக்கு எதிரான அடக்குமுறைகள் இடம்பெறுகின்ற சந்தர்ப்பங்களில் ஆளுந்தரப்பிலுள்ள முஸ்லிம் அமைச்சர்களும், எம்.பிமார்களும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் சென்று முறையிடுகின்றனர். அவரிடம் முறையிட்டு என்ன பயன்?

முஸ்லிம் பள்ளிவாசல் உடைப்பு, முஸ்லிம் வர்த்தகர்கள் தாக்கப்படுதல், முஸ்லிம்களின் ஹலால் உணவுகள் தடைசெய்யப்படவேண்டும் என சிங்கள இனவாதிகள் மேற்கொள்ளும் அராஜக செயல்கள் அனைத்தும் சிறிய செயல்கள் என்று பாதுகாப்புச் செயலாளர் கூறுகின்றார்.

எமது சமயத்துடனும், மக்களது வாழ்வுடனும் விளையாடுவது சிறிய செயலா?

இதுபோன்ற சிறிய செயல்களின் எதிர்விளைவுகள் நாட்டுக்கு ஆபத்தானதாக அமையும். எனவே, முஸ்லிம்களுக்கு எதிரான அடக்குமுறைகள் நாட்டில் இனிமேலும் தொடரக் கூடாது. அதற்கு அரசு உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அடக்குமுறைகளை மேற்கொள்பவர்களுக்கு எதிராகத் தண்டனை வழங்கப்படவேண்டும்.

முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்படும் அடக்குமுறைகளை அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதனூடாக முஸ்லிம்களும் தமது உரிமைகளைப் பாதுகாக்க ஆயுதம் ஏந்தவேண்டுமென்றா அது எதிர்பார்க்கிறது? வேண்டாம். எம்மை ஒரு போதும் அந்த நிலைக்குத் தள்ளிவிடவேண்டாம் - என்றார் அஸாத் ஸாலி.

'பொதுபல சேனா' என்ற சிங்கள அமைப்பினூடாகவும், ஏனைய சிங்கள இனவாதிகளினூடாகவும் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அராஜக நடவடிக்கைகளை அரசு ஏன் வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கின்றது

## சட்டத்தரணிகளுக்கான விசேட கருத்தமர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 26

வடமாகாண சட்டத்தரணிகளுக்கான விசேட கருத்தமர்வு ஒன்று யாழ்ப்பாணத்தில் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளதாக வடமாகாண சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள கிறீன்கிறாஸ் ஹோட்டலில் நாளை காலை 8.45 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை இந்தக் கருத்தமர்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் டி.என்.ஏ. பரிசோதனை பற்றிய விளக்கமும், பாலியல் செயற்பாடுகளால் மனரீதியான தாக்கம் குறித்தும் இவை தொடர்பான சட்டமருத்துவம் தொடர்பிலும் இந்தக் கருத்தமர்வில் விரிவான கருத்தாடல் இடம்பெறவுள்ளது.

வடமாகாண சட்டத்தரணிகள் சங்கத்தில் சுமார் 95 சட்டத்தரணிகள் அங்கத்தவர்களாக உள்ளனர். இவர்கள் அனைவரையும் நாளை நடைபெறவுள்ள இந்தக் கருத்தமர்வில் கலந்துகொள்ளுமாறு வடமாகாண சட்டத்தரணிகள் சங்க உறுப்பினரும் ஜனாதிபதியின் சட்டத்தரணியுமான செல்வி சாந்தா அபிமன்ன சிங்கம் கேட்டுள்ளார். (ஜ-4)

## விடைத்தாள் திருத்தப் பணிகள் 30 இல் யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.26

எதிர்வரும் 30ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து 10 நாள்கள் யாழ்ப்பாணத்தில் க.பொ.த. சாதாரண தர விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் ஆரம்பமாகவுள்ளன.

இதற்காக தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களை உரிய கடிதங்களுடன் யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு வருகைதருமாறு பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வேம்படி மகளிர் கல்லூரி, மத்திய கல்லூரி ஆகிய இரு நிலையங்களில் இந்தப் பணிகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-50)

## மழை காரணமாக செட்டிகுளத்தில் 1, 230 குடும்பங்கள் பாதிப்பு

### இடர்காலப் பணிகள் துரிதம்

வவுனியா, டிசெ. 26

தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 230 குடும்பங்களைச் சேர்ந்த 4ஆயிரத்து 400 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என செட்டிகுளம் பிரதேச செயலர் எஸ்.கமலநாதன் தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் சுமார் 15 இடைத்தங்கல் முகாம்களில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் இவர்களுக்கு சமைத்த உணவு மற்றும் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆண்டியா புளியங்குளம், பெரியகட்டு, கண்ணாட்டி, பிரமந்தன் குளம், கடுவெந்த புலவு, குருக்கள் புதுக்குளம், பாவற்குளம் யூனிற்2, பாவற்குளம் யூனிற் 4, முதலியார் குளம், செட்டிகுளம், முகத்தான்குளம், கிறிஸ்தோபர் குளம், நேரியகுளம், சின்னச் சிப்பிக் குளம், கந்தசாமி நகர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களே இவ்வாறு இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளனர்.

வெள்ளநீர் வடிந்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ள போதும் அவர்களுக்கு வேண்டிய சமைத்த உணவு வழங்கப்படுவதாகவும் தற்போது மழை பெய்து வ்ருவதால் மக்கள் மேலும் இடம்பெயரக்கூடிய சூழ்நிலை காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை பாதிக்கப்பட்ட மக்களை வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர நேரில் சென்று பார்வையிட்டு மக்களுக்கு வேண்டிய உதவிகளை மேற்கொண்டார். (ஐ-400)

## சந்தேக நபரின் இறப்பு தற்கொலை: பொலிஸ்

கொழும்பு, டிசெ.26

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ஒருவர் என்று பொலிஸார் கூறும் நபர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற இவரிடம் விசாரணை நடத்தச் சென்ற பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார் என்றும் பின்னர் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொண்டார் என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

மேற்படி சம்பவம் சிறிபுர, முதுன்கம கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர் என்று கூறப்படும் மேற்படி சந்தேகநபர், பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என்று அடையாளம் காணப்பட்ட நிலையிலேயே அவரிடம் விசாரணை நடத்துவதற்காக தாம் அவரது வீட்டுக்குச் சென்றனர் என்கிறது பொலிஸ்.

மறைத்து வைத்திருந்த துப்பாக்கியினால் பொலிஸார் மீது சூடு நடத்திய சந்தேகநபர், பின்னர் தன்னைத் தானே சுட்டுக் கொண்டும் தற்கொலை செய்துகொண்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெஹியத்தகண்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சி)

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற இவரிடம் விசாரணை நடத்தச் சென்ற பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, தற்கொலை செய்து கொண்டார்

## சிலோன் டுடே ஊடகவியலாளர் விபத்தில் சிக்கி பரிதாப மரணம்!

'சிலோன் டுடே' பத்திரிகையின் இளம் பெண் ஊடகவியலாளர் அமிலா மென்டிஸ் ஜயசிங்க (வயது - 21) வாகன விபத்தில் நேற்றுப் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இவரின் இழப்பு ஊடகத்துறையினரை ஆழ்ந்த கவலையில் ஆழத்தியுள்ளது.

'சிலோன் டுடே' பத்திரிகையில் பணிபுரிந்த மேற்படி இளம் ஊடகவியலாளர், தமது பணி நிமித்தம் நேற்றுக்முற்பகல் 10 மணியளவில் அலுவலகம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது கொழும்பு - ரொஸ்மிட் பிரதேசத்திலேயே விபத்து இடம் பெற்றுள்ளது. குறித்த பிரதேச வீதியில் பயணித்த லொறியொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிச் சென்று, வீதியோரத்தில் சென்ற அமிலா மெண்டிஸ் மீதும் மோதி, அருகிலுள்ள வீட்டின் மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்றவுடன், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னரே அவர் உயிரிழந்துள்ளார். சம்பவத்துடன் தொடர்புடைய லொறி சாரதியான 55 வயதுடைய நபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

உயிரிழந்த அமிலாவின் பூதவுடல் கிருலப்பனையிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

விபத்தில் உயிரிழந்த ஊடகவியலாளர் அமிலா மென்டிஸ் ஜயசிங்க பற்றிய சில தகவல்கள் வருமாறு -

கிருலபனையைச் சேர்ந்த 21 வயதுடைய இவர், சர்வதேசப் பாடசாலையொன்றில் கல்வி கற்றுள்ளார். அத்துடன், இவர் நாவல திறந்த பல்கலைக்கழகத்தின் மாணவியுமாவார்.

கடந்த ஐந்து மாதங்களிற்கு முன்னரே இவர் 'சிலோன் டுடே' பத்திரிகையில் பணிக்கு அமர்ந்துள்ளார். ஆங்கில பத்திரிகைத் துறையில் குறுகிய காலப் பகுதியில் ஒரு சிறந்த ஊடகவியலாளராக இவர் வலம் வந்தார் என்று அந்த பத்திரிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறந்த இளம் ஊடகவியலாளரான இவரின் மரணம் ஊடகவியலாளர்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

பத்திரிகைத் துறையில் குறுகிய காலப் பகுதியில் ஒரு சிறந்த ஊடகவியலாளராக இவர் வலம் வந்தார்

## 24 மணிநேரத்தில் குடாநாட்டில் 22.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி

யாழ்ப்பாணம், டிசெ.26

நீண்ட நாள்களின் பின்னர் யாழ். குடாநாட்டில் நேற்று பரவலாக மழைபெய்துள்ளது. இதன்படி கடந்த 24 மணி நேரத்தில் 22.3 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்றும் இன்றும் மழை தொடரும் எனவும் யாழ்.வளிமண்டலவியல் திணைக்கள கடமைநேர அதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் நேற்றுக்காலை 8.30 மணிவரை 6.9 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் நேற்றுக்காலை 8.30 மணி தொடக்கம் நேற்றுப் பிற்பகல் 5.30 மணிவரை 15.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது, இன்றும் பரவலாக மழை பெய்யும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-4)

## கொக்காவிலில் விபத்து 6 பேர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், டிசெ.26

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுக்காலை கண்டி நோக்கிச் சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் கொக்காவிலில் விபத்துக்குள்ளானதில் பஸ்ஸில் பயணித்த லண்டன் பிரஜை உட்பட 6 பேர் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பஸ்ஸும் இராணுவ ட்ரக்கும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பஸ்ஸை மோதிய ட்ரக் வீதியை விட்டு விலகி குடைசாய்ந்துள்ளது. அதில் பயணித்த இராணுவத்தினரும் காயமடைந்தனர்.

நேற்று முற்பகல் 9.40 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இரண்டு வாகனங்களும் பலத்த சேதமடைந்துள்ளன.

விபத்தில் பஸ்ஸின் சாரதியான ஏழாலை மேற்கைச் சேர்ந்த எம்.மதிஹசன், நடத்துநரான கொக்குவில் மத்தியைச் சேர்ந்த வை.கமலதாசன் ஆகியோரே காயமடைந்தனர் என்று யாழ். சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஏனையவர்கள் நான்கு பேரும் பயணிகளாவர். லண்டன் பிரஜையான பெண் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரில் இருந்து இறுதி பஸ்சேவை இரவு 9 மணிக்கு நடத்தக் கோரிக்கை

## போக்குவரத்துத்துறை அதிகாரிகள் கவனத்துக்கு விடயம்

*வலிவடக்கு, டிசெ. 26*

*யாழ். நகரில் இருந்து இரவு 9 மணிக்கு கடைசி பஸ்சேவை இடம்பெறக்கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இலங்கை ஜனநாயக தொழிலாளர் கட்சியின் தலைவர் எஸ். சத்தியேந்திரா இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.*

இரவு நேர பஸ் சேவைகள் மேலும் சில மணி நேரங்களுக்கு நீடிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது போக்குவரத்து துறை அமைச்சரதும், அதிகாரிகளதும் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இச்சேவைகள், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், இரவு 9 மணிவரை நீடிக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ள அவர் இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தில் தற்போது ஒரு அமைதியான சூழ்நிலை காணப்படுகின்றது. இதனால் பொது மக்கள் இரவு நேரங்களில் தமது தேவைகளுக்காக யாழ். குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வந்து செல்லும் நிலைமை காணப்படுகின்றது.

ஆனால் இரவு நேரத்தில் நேரகாலத்துடன் நிறுத்தப்படும் போக்குவரத்துச் சேவைகளால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர்.

இந்தக் குறைபாடு குறித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டப்பட்டும் அது குறித்து எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்சேவை இரவு 8 மணியுடனும் தனியார் பஸ் சேவை இரவு 7 மணியுடனும் நிறுத்திக் கொள்ளப்படுகின்றன.

இதுவரை காலமும் தங்களின் பல்வேறுபட்ட தேவைகளுக்காக கொழும்புக்குச் சென்றுவந்த யாழ்ப்பாணத்தின் பல்வேறுபட்ட பகுதிகளையும் சேர்ந்த மக்கள், தற்போது அவற்றை யாழ்ப்பாணத்திலேயே நிறைவேற்றக்கூடிய சூழல் தோன்றியுள்ளது.

அவ்வாறு வர்த்தக நோக்கங்களுக்காகவும் மருத்துவ மற்றும் ஏனைய தேவைகளுக்காகவும் யாழ்ப்பாணம் வரும் மக்கள், இரவு 8 மணியோடு நிறுத்தப்படும் பஸ் சேவைகளால் மிகவும் அல்லலுறுகின்றனர்.

எனவே இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் அவதானம் எடுத்துச் செயற்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-86)

## ஆழிப்பேரலை நினைவு பிரார்த்தனை உடுத்துறையில்

வடமராட்சி, டிசெ.26

ஆழிப்பேரலை இடரால் வடமராட்சி கிழக்கு, வடமராட்சிப் பிரதேசத்தில் மரணமான ஆயிரக் கணக்கானோரின் எட்டாம் ஆண்டு நினைவு இன்றாகும்.

யாழ். மாவட்டத்தில் ஆழிப்பேரலை இடரால் வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி தொடக்கம் கட்டைக்காடு வரையான பகுதிகளில் ஆயிரத்து 200 பேருக்கு அதிகமானோரும் மணற்காட்டில் 72 பேரும் வடமராட்சி கிழக்கில் 17 பேரும் மாதகலில் 2 பேரும் காவு கொள்ளப்பட்டிருந்தனர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் மரணமானோரை நினைவுகூரும் பிரதான நிகழ்வு ஆயிரக் கணக்கானோரை அடக்கம் செய்த உடுத்துறையில் இன்று புதன் கிழமை காலை 9.07 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பொதுச் சுடர் ஏற்றல், மாலை அணிவித்து மலர் அஞ்சலி செய்தல் தொடர்ந்து ஒவ்வொரு நினைவிடங்களிலும் உறவினர்கள் பட்சணங்களைப் படைத்து இழந்த தமது உறவுகளை நினைவு கூரும் நிகழ்வு நடைபெறும்.

மணற்காட்டில் 72 பேரையும் ஒரே இடத்தில் அடக்கம் செய்த சவச்சாலை வளாகத்தில் மணற்காடு பங்குத் தந்தையால் ஆன்ம ஈடேற்ற வழிபாடு மேற்கொள்ளப்படும்.

அதேபோல் கட்டைக்காட்டிலும் அடக்கம் செய்யப்பட்ட ஒரு சிலரையும் நினைவு கூரப்படும்.

பருத்தித்துறைப் பகுதியிலும் கோயில்கள், தேவாலயங்களில் விசேட பூசைகள் நடத்தப்பட்டு பேரலையால் உயிர்களை பறிகொடுத்தோரை உறவினர்கள் நினைவு கூருவர். (ம-8-253)

## நடமாடும் சேவையால் நன்மை


யாழ்ப்பாணம், டிசெ.26

வலி.மேற்குப் பிரதேச செயலகத்தினால் கடந்த 20 ஆம் திகதி நடத்தப்பட்ட நடமாடும் சேவையால் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பயன் பெற்றனர்.

25 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியதாக நடத்தப்பட்ட இந்த நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்குவதற்கான பதிவு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

யாழ்.மாவட்ட மேலதிக பதிவாளர் உட்பட சமாதான நீதிவான்கள் மற்றும் கிராம அலுவலர்கள் முன்னிலையில் நடத்தப்பட்ட இந்த நடமாடும் சேவையில் 200 இற்கும் மேற்பட்டவர்களுக்கு அன்றைய தினமே பிறப்பு, இறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் புதிதாக வழங்கப்பட்டன.(ம-14-29)

## கந்தப்பசேகரம் வீதியில் கவனிப்பாரின்றி மதகு



*யாழ். நகரில் முனீஸ்வரன் வீதிக்குக் குறுக்கே செல்லும் கந்தப்பசேகரம் வீதியில் உள்ள மதகு பெரும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. சேதப்பட்ட இந்த மதகால் இந்த வீதியூடாக பயணிக்கும் வாகனங்கள் சிரமப்பட்டே செல்கின்றன. போக்குவரத்துக்கு ஆபத்தான நிலையில் காணப்படும் இந்த மதகின் ஊடாக கழிவு நீர் செல்வதும் தடைப்பட்டுள்ளது. இந்த மதகைப் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-17)*

## மாற்றுவலுவுள்ளோருக்கு வசதியாக புதிய அரச கட்டடங்களை அமைக்குக

### சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.26

புதிய அரச கட்டடங்கள் அமைக்கப்படும் போது மாற்றுவலுவுள்ளோரும் இலகுவாக பயன்படுத்தக் கூடிய வகையில் கட்டடத்தில் ஏற்பாடுகள் வசதிகள், கட்டாயம் மேற்கொள்ளப்படவேண்டும்.

இருக்கும் அரச கட்டடத்தில் மாற்று வலுவுள்ளோருக்குரிய வசதிகள் ஏற்படுத்தும் வகையில் மாற்றம் ஏதாவது செய்தால் சமூக சேவை அமைச்சால் அதற்குரிய நிதிக்கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

இவ்வாறு சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மாற்று வலுவுள்ளோர் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக அரச திணைக்களங்களுக்கு செல்லும் போது அங்கு அவர்களுக்குரிய வசதிகள் செய்துகொடுக்கப்படுவதில்லை. குறிப்பாகச் சக்கர நாற்காலியில் வரும் மாற்றுவலுவுள்ளோர் மேல் மாடிகளில் ஏறுவதற்குரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படுவதில்லை.

எனவே, புதிதாக அமைக்கப்படும் சகல அரச திணைக்களங்களிலும் மாற்றுவலுவுள்ளோர் குறித்த திணைக்களத்தை இலகுவாகப் பயன்படுத்தும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

### இருக்கும் கட்டடத்தில் மாற்றங்கள் செய்தால் நிதி உதவிகள் வழங்கவும் ஏற்பாடு

இதனை கட்டாயம் நடைமுறைப்படுத்துமாறும் சகல அமைச்சுகளின் செயலாளருக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இதேபோன்று அரசதிணைக்களங்களில் மாற்றுவலுவுள்ளோருக்கு உரிய வகையில் கட்டடத்தில் மாற்றம் செய்தால் அதற்குத் தேவையான நிதி சமூக சேவைகள் அமைச்சால் வழங்கப்படும்.

மாற்றுவலுவுள்ளோர் உள்ள வீடுகளிலும் அவர்களுக்குரிய வகையில் மலசல கூடம் உட்பட வசதிகள் ஏதாவது ஏற்படுத்தினால் சமூக சேவைகள் அமைச்சால் 25 ஆயிரம் ரூபா வரையில் உதவி வழங்கப்படும் -என்றார். (ம-5)

## முற்றவெளி பஸ் தரிப்பிடத்தில் பயணிகள் கொட்டகை இல்லை



யாழ்.முற்றவெளியில் அமைந்துள்ள வெளிமாவட்டங்களுக்கான பஸ்தரிப்பு நிலையத்தில் பயணிகளுக்கான கொட்டகை வசதி எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.

இதனால் பயணிகள் மழையில் நனைந்தே பஸ்களுக்கு காத்து நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதனைவிட இந்த பஸ் தரிப்பிடம் நேற்று பெய்த மழையால் சேறும் சகதியுமாகக் காணப்பட்டது.

இந்த பஸ்தரிப்பிடம் குளத்தில் இருந்து அகற்றப்பட்ட மண்ணைக் கொண்டு நிரவி சீர்செய்யப்பட்டமையே இந்தச் சகதி ஏற்படக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது. பயணிகளும் இந்தச் சகதியால் சிரமப்பட்டு வருகின்றனர். (ம-17)

## அமைதியான முறையில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.26

கிறிஸ்மஸ் கொண்டாட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் அமைதியாகக் கொண்டாடப்பட்டது. சில இடங்களில் வெடிகள் கொழுத்தப்பட்டாலும் அமைதியான முறையில் கிறிஸ்மஸ் கொண்டாடப்பட்டது.

யாழ். மரியன்னை தேவாலயத்தில் நேற்று அதிகாலை கிறிஸ்மஸ்ஸை முன்னிட்டு விசேட திருப்பலி பூசை இடம்பெற்றது. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

அதேபோன்று குடாநாட்டின் பல பாகங்களிலுமுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் நேற்றுக் காலை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

பல பிரதேசங்களிலும் நேற்று இரவில் இருந்து அதிகாலை வரையில் தொடர்ந்த மழை காரணமாக பூசைகளுக்குச் சென்ற மக்கள் சிரமங்களை எதிர்கொண்டனர்.

யாழ். குடாநாட்டின் சில பகுதிகளில் மாத்திரம் நேற்று அதிகாலையில் இருந்து தொடர்ந்து பட்டாசுகள் வெடித்துக்கொண்டிருந்தன.

கிறிஸ்தவ மக்கள் [illegible] அணிந்து மிகவும் அமைதியான முறையில் நேற்றைய நத்தார் தின நிகழ்வுகளைக் கொண்டாடினர். (ம-5-86-17)

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு இணைக்கப்பட்டோருக்கு இன்று நியமனம்

யாழ்ப்பாணம், டிசெ.26

பட்டதாரிப் பயிலுநர்களில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கான நியமனங்கள் இன்று வழங்கப்படவுள்ளன என்று யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

இந்த வருடம் ஜூலை மாதம் பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்கப்பட்டது. மாவட்ட செயலகம், பிரதேச செயலகத்துக்கு இணைக்கப்பட்ட பட்டதாரிகள் தற்போது ஒவ்வொரு அமைச்சுக்கும் இணைக்கப்பட்டு வருகின்றனர்.

இதனடிப்படையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கான இணைப்புக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவுக்கும் ஒருவர் வீதமும் பிரதேச செயலகங்களுக்கு மூவருமாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் மொத்தமாக 514 பேருக்கு இன்றைய தினம் இணைப்புக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை கமநல வனவள பாதுகாப்பு அமைச்சின் பிரதி அமைச்சர் எஸ்.என். சந்திரசேன நேரில் சென்று பார்வையிட்டார். நேற்று வவுனியாவுக்கு வருகை தந்த அமைச்சர் அடங்கிய குழுவினர் உடைப்பெடுத்த பிரமந்தன்குளத்தை பார்வையிடுவதை படத்தில் காணலாம். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணம் மற்றும் மானிய வசதிகள் செய்து கொடுக்கப்படும் எனவும் இதன்போது பிரதி அமைச்சர் உறுதியளித்தார். (ஐ-400)

# யாழ். வைத்தியர்கள் நேற்றும் புறக்கணிப்பு காத்திருந்து சிகிச்சை பெற்ற நோயாளர்கள்

யாழ்ப்பாணம், டிசெ.26

யாழ்.மாவட்ட வைத்திய அதிகாரி நேற்று ஒரு மணிநேர பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டனர். இதனால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் காது, மூக்கு, தொண்டை சிகிச்சை நிபுணர் வைத்தியர் சி.திருமாறன் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டதை கண்டித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனால் குடாநாட்டில் உள்ள வைத்திய சாலைகளில் சிகிச்சைபெறச் சென்ற நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர்.

வைத்தியர் ஒருவர் தாக்கப்பட்டதைக் கண்டிக்கும் முகமாக வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் புறக்கணிப்பில் ஈடுபடுவதால் உயிர்காக்கும் பணி கூட கேள்விக்குறியாக உள்ளது. குடாநாட்டில் ஏதோவொரு வகையில் பொது மக்கள் மீதும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இதற்கும் அனைவரும் போராட்டம் நடத்தினால் எல்லாத் துறைகளும் போராட்டத்துறைகளாக மாறிவிடும் என்று நேற்று வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சைக்காக காத்திருந்த நோயாளி ஒருவர் தெரிவித்தார். (ஐ-9)

## கல்வி அமைச்சர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

படிகள் இடம்பெறவில்லை என்பதற்கு என்ன அத்தாட்சி'' என்று சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இவ்வருடம் நடந்து முடிந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் விஞ்ஞானபாட வினாத்தாள் பரீட்சைக்கு முன்கூட்டியே வெளியிடப்பட்டது உண்மை என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன ஒப்புக்கொண்டுள்ளார்.

அத்துடன், பரீட்சைக்குத் தோற்றிய அனைவருக்கும் விஞ்ஞானபாட வினாத்தாளில் வெளியான 19 வினாக்களுக்கும் புள்ளிகள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். பரீட்சை வினாத்தாள் வெளியானமையை சீர்செய்ய இது ஒரு மாற்றுவழிதான். இருப்பினும், அது மாணவர்களுக்குச் செய்யும் அசாதாரண செயலாகும்.

விஞ்ஞானபாட வினாத்தாள் வெளியானமைக்கு பரீட்சை வினாத்தாள்களை அச்சிட்ட நிறுவன உரிமையாளர் மீதும், ஏனைய அதிகாரிகள் மீதும் கல்வி அமைச்சர் பழிபோட்டுத் தப்பிக்க முடியாது. பரீட்சையிலும் நாட்டின் கல்விக் கட்டமைப்பிலும் குளறுபடிகளும் பிரச்சினைகளும் நடைபெற்றமையானது இது முதல்தடவையல்ல. எனவே, நாட்டின் கல்வித்துறையை இருளுக்குள் தள்ளிவிடும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன இனிமேலும் அப்பதவியில் இருப்பது பொருத்தமல்ல. அவர் உடனடியாகப் பதவியை இராஜிநாமாச் செய்யவேண்டும்.

அத்துடன், விஞ்ஞானபாட வினாத்தாள், பரீட்சைக்கு முன்னதாகவே வெளியானமைக்கு அவர் பொறுப்புக்கூறியே ஆகவேண்டும் - என்றார். (சி-4)

## நத்தார்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

லயப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்தார். அப்போது அங்கு இடம்பெற்ற குழு மோதல் ஒன்றை அவர் தடுக்க முற்பட்டார். இதன் போதே அவர் தாக்குதலுக்கு இலக்கானார் என்று பொலிஸார் கூறினர்.

தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றார் என்ற சந்தேகத்தில் குருநகரைச் சேர்ந்த இளைஞர் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அந்த இளைஞரை இன்று நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-16-4)

## இலங்கைக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டெஸ்ட் போட்டி ஆரம்பமாகவுள்ளது.

இதனை ஒட்டியே ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இலங்கை அரசுக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டு தொடர்பில் சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று தாம் வலியுறுத்த உள்ளனர் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறினர். இலங்கை கிரிக்கெட்டை புறக்கணிக்கக் கோரியும் தமிழர் அகதிகள் சபை இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிலையில் குறித்த குழுவினரை சந்தித்த விக்டோரியாப் பொலிஸார் ஆர்ப்பாட்டம் குறித்து கலந்துரையாடியுள்ளனர். ஆர்ப்பாட்டத்தை அமைதியான முறையில் மேற்கொள்ள அவர்கள் இணங்கினர் என விக்டோரியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இன்றைய இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் முதல்நாள் ஆட்டத்தை பார்க்க சுமார் 70 ஆயிரம் பேர் வரை வருவர் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் மதிப்பிட்டுள்ளனர். (சி)

## மாணவர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அவரிடம் பலவந்தமாக ஆவணத்தில் கையொப்பம் பெற்று, சரணடைந்தவர் எனக் கூறி புனர்வாழ்வு என்ற பெயரில் புனர்வாழ்வு முகாமுக்கு மாற்ற இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் முடியும் என்று சட்டவல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஜனவரி மாத முற்பகுதியில் மனுவைக் கூட்டமைப்பு தாக்கல் செய்யும் என அக்கட்சி வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் விடுதலையை வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகள் தொடர் போராட்டங்களை நடத்தி இருந்தன. ஆனால், புனர்வாழ்வின் பின்னரே மாணவர்கள் விடுவிக்கப்படுவர் என படைத்தரப்பு திட்டவட்டமாகக் கூறிவருகின்றது.

கடந்த நவம்பர் மாத இறுதி வாரத்தில் இந்த மாணவர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நேற்று...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மூவர் உயிரிழந்துள்ளனர்.

விபத்துகளில் காயமடைந்தவர்கள் ராகமை, களுபோவில மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலை ஆகியவற்றில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தரப்பு மேலும் தெரிவித்தது.

## சுனாமி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கணக்கானோர் உயிரிழந்திருந்தனர்.

இலங்கையின் வடபகுதியில் சுனாமியில் மரணித்தோர் நினைவாக முல்லைத்தீவு, மணற்காடு, தாளையடி போன்ற பகுதிகளில் விசேட நினைவு நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன. (ங)

## 2013 இலும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

2012ஆம் ஆண்டில் இலங்கை அரசு பலவிதமான பிரச்சினைகளைத் தோற்றுவித்தது. அவற்றுக்கு இன்னும் உரிய முறையில் தீர்வுகள் காணப்படவில்லை. மாறாக இன ஒடுக்கல் செயற்பாடுகளையும், அராஜகங்களையுமே அது கட்டவிழ்த்துவிட்டு நாட்டை நிர்வகிக்கின்றது.

கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்களை விடுதலைசெய்யுமாறு நாட்டிலுள்ள அனைத்து இன மக்களும் வலியுறுத்தியிருந்தாலும் அது குறித்து அரசு உரியவகையில் இன்னும் கவனம் செலுத்தவில்லை.

ஜனாதிபதியோ அல்லது சம்பந்தப்பட்ட தரப்பினரோ எவ்வித கருத்துகளையும் வெளியிடாத நிலையில், வடக்கிலுள்ள இராணுவத் தளபதியொருவர் மாணவர்களை விடுதலை செய்ய முடியாது என்ற தொனியில் கருத்து வெளியிடுகின்றார்.

நாடு இராணுவமயமாக்கலை நோக்கி நகர்கின்றது என்பதையே இவ்வாறான சம்பவங்கள் வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றன.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் செயற்பாடுகள் குறித்தும் அரசு அக்கறை செலுத்துவதில்லை. அசமந்தப் போக்கிலேயே செயற்படுகின்றது.

அத்துடன், இன ஒடுக்கல் இயந்திரமும் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராகத் தற்போது பயன்படுத்தப்படுகின்றது. அரசின் இவ்வாறான செயற்பாடுகள், தமிழர் பிரச்சினைகளுக்கு 2013ஆம் ஆண்டிலும் தீர்வுகிடைக்காது என்றும், அது சங்கிலித் தொடராகவே இருக்கும் என்பதையும் உணர்த்தும் வகையிலேயே அமைந்துள்ளன.

தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்ட இனப் பாகுபாடு உள்ளிட்ட ஒடுக்குமுறைச் செயற்பாடுகள் இன்று முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. தம்புள்ளையில் பிள்ளையார் சுழி போடப்பட்டு கட்டவிழ்த்துவிடப்பட்ட இந்த அடக்குமுறைச் செயற்பாடுகள் கொடிபோல் படர்ந்தவண்ணமுள்ளன. தற்போது எம்பிலிப்பிட்டிய வரையில் அது வியாபித்துள்ளது. எம்பிலிப்பிட்டியவில் அரங்கேறிய இன ஒடுக்கல் செயற்பாட்டை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன் - என்றார். (சி)

## முஸ்லிம்கள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அவை சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படுவதை உறுதிப்படுத்தியே நாம் ஹலால் சான்றிதழ் வழங்குகின்றோம். இது முஸ்லிம்களுக்கு மட்டும் உரித்தான சமய ரீதியான ஏற்பாடு என்றும், இது தமக்குத் தேவையில்லை என்றும் பௌத்த பிக்குகள் கூறுகின்றனர்.

இதனை மதம் சார்ந்ததாகப் பார்க்கவேண்டாம். இது சுகாதாரத்தை உறுதிப்படுத்தும் ஏற்பாடு. அனைத்து மதத்தவர்களும் சுகாதாரத்தையே விரும்புவர் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது.

நாம் எந்தவொரு நிறுவனத்துக்கும் கட்டாயப்படுத்தி ஹலால் சான்றிதழைக் கொடுக்கவில்லை. அந்நிறுவனங்கள்தான் எம்மிடம் தாமாகக் கேட்டு வாங்குகின்றன.

எமது ஹலால் சான்றிதழைக் குறிப்பிட்ட நிறுவனம் வைத்திருக்கும் காலமெல்லாம் நாம் எமது பிரதிநிதியை நியமித்து அந்நிறுவனத்தின் உற்பத்தியை அவதானித்துக் கொண்டே இருக்கிறோம். அவை சுகாதார ரீதியாக உற்பத்திசெய்யப்படுவதைக் கண்காணித்துக்கொண்டே இருக்கின்றோம்.

அநேகமான நிறுவனங்கள் ஹலால் சான்றிதழ் இல்லாமல் உள்ளன. அவ்வாறு ஹலால் சான்றிதழ் பெறாத நிறுவனங்களின் வர்த்தகம் வீழ்ச்சியடைவதால் அவர்கள் திரும்ப வந்து சான்றிதழைப் பெறுகின்றனர்.

உணவுப் பொருள்கள் சுகாதார முறையிலேயே உற்பத்தி செய்யப்படவேண்டும் என்பதை முஸ்லிம் அல்லாத சகோதரர்களும் விரும்புகின்றமையே இதற்குக் காரணம்.

உண்மை நிலைமை இப்படி இருக்கின்றபோது, ஹலால் சான்றிதழைப் பிக்குகள் கண்மூடித்தனமாக எதிர்க்கின்றனர்.

அவர்கள் ஹலால் சான்றிதழை மாத்திரம் எதிர்க்கவில்லை. முஸ்லிம்களின் ஒட்டுமொத்த வர்த்தகத்தையும் வீழ்ச்சியடையச் செய்ய முயற்சிக்கின்றனர். முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களில் சிங்களவர்கள் வேலைசெய்யக்கூடாது, முஸ்லிம்களின் கடைகளில் பொருள்களைக் கொள்வனவு செய்யக்கூடாது என்று பிக்குகள் கூறுகின்றனர்.

இது உண்மையில் ஒட்டுமொத்த முஸ்லிம்களின் இருப்புக்கு எதிரான செயற்பாடாகும். முஸ்லிம்கள் மீதான பொறாமையின் வெளிப்பாடாகும்.

இது தொடர்பில் நாம் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்துப் பேசியபோது, இது சிறு குழுவொன்றின் செயற்பாடு. இதனால் பெரும் விளைவுகள் ஏற்படாது என்றும் இதனைப் பெரிதாக அலட்டிக்கொள்ள வேண்டாம் என்றும் கூறினர்.

முஸ்லிம்கள் இந்த விடயத்தில் அமைதி காக்கவேண்டும். பொறுமையுடன் மிகவும் சுலபமாக இப்பிரச்சினையைத் தீர்க்க ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

அதேவேளை, அனைத்து சிங்கள மக்களும், அனைத்து பௌத்த பிக்குகளும் முஸ்லிம்களுக்கெதிரான இந்த செயற்பாட்டில் ஈடுபடவில்லை. ஒரு சிறு குழு மாத்திரமே இந்தச் செயலில் ஈடுபடுகின்றது என்பதை நாம் விளங்கிக்கொள்ளவேண்டும் - என்றார். (சி)

## ஊடகவியலா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அச்சு, மின்னியல் ஊடகங்களில் பணியாற்றுகின்ற செய்தியாளர்கள் செய்தி சேகரிக்கக் கூடிய இடங்களிலேயே மிகவும் ஆபத்தானது போர் முனைதான். போர்க் களத்தில் நின்று செய்திகளைச் சேகரிப்பது என்பதும் ஒரு வகை. போர்க் களத்தில் போராளியாக நின்று கொண்டு செய்திகளை வெளியிடுவது என்பது இன்னொரு வகை.

முன்னைய வகைக்கு - இலங்கையின் போர்க்குற்றங்களுக்கான நேரடி சாட்சியாக திகழ்ந்த மேரி கொல்வின் இவ்வாண்டு உயிரிழந்தனர்.

இரண்டாவது வகைக்கு சாட்சி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியாக இருந்தாலும் 2009 இல் தாம் குண்டுவைத்து தம்மையே சாகடித்துக் கொண்ட கடைசி நிமிடம் வரை புலிகளின் குரல் வானொலி மூலம் செய்திகளை கள நிலைமையை உலகுக்கு சொன்ன ஊடகவியலாளர் தி.தவபாலன். இந்த 2 ஆம் வகை என்பது மிகவும் அரிதானது.

குறிப்பாக 2012 ஆம் ஆண்டில் கொத்துக் கொத்தாக நூறு நூறாக மனித உயிர்கள் பறிக்கப்பட்ட சிரியா, சோமாலியா, பாகிஸ்தான் நாடுகளில்தான் அதிகளவிலான பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர்.

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இணையத்தள செய்தியாளர்கள், இணைய வலையமைப்புக்கள் நடத்துவோரும் 2012 ஆம் ஆண்டு கடுமையான அளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

பத்திரிகையாளர்களின் உயிரைக் குடிக்கின்ற ஐந்து ஆபத்தான நாடுகள் இருக்கின்றன. சிரியாவில் 2012 இல் 17 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர். 4 ஊடக உதவியாளர்களும் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

சோமாலியாவில் 18 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அதுவும் செப்ரெம்பருக்கு பிந்தைய மாதங்களில் மட்டும் சோமாலியாவில் 7 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் இருவர் 24 மணி நேரத்தினுள் கொல்லப்பட்டிருக்கின்றனர். ஒருவர் துப்பாக்கியால் சுட்டும் மற்றொருவர் தலை துண்டிக்கப்பட்டும் கொல்லப்பட்டுள்ளனர். சோமாலியாவில் 18, பாகிஸ்தானில் 10, மெக்ஸிக்கோவில் 6, பிரேஸிலில் 5 பேர்கள் எனக் கொல்லப்பட்டுள்ளனர்.

உலகில் அதிகளவில் பத்திரிகையாளர்கள் சிறைவைக்கப்பட்ட நாடுகளில் முதலிடத்தை துருக்கி பெற்றுள்ளது. இந்தப் பட்டியலில் 2 ஆவது இடம் சீனாவுக்கு.

மூன்றாவது இடத்தை எரித்திரியா பெற்றுள்ளது. இந்த நாட்டில் 28 பேர் சிறைவைக்கப்பட்டிருக்கின்றனர். ஈரானில் 26 பேர் சிறைவைக்கப்பட்டுள்ளனர். சிரியாவில் 21 பேர் சிறை வைக்கப்பட்டிருக்கின்றனர். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் - நாளிதழ்



# தமிழ் மாணவர் கல்வியை தறுக்கணிக்கும் சூட்சுமங்களா?

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான விஞ்ஞான பாடத்தின் முதலாவது பகுதி, பரீட்சைக்கு முன்னதாகவே வெளியாகியதை கல்வி அமைச்சர் ஏற்றுக்கொண்டு, அந்தப் பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கு 'சலுகை' வழங்குவதற்கு முன்வந்திருக்கிறார்!

அதேபோல, பரீட்சைக்கு முன்னர் வெளியான வினாக்கள் பத்தொன்பதிற்கும் சரியான விடை எழுதியதாகப் புள்ளிகள் வழங்கப்படும் என்பதே அந்தச் சலுகை!!

அரச மட்டத்தில் நடைபெறும், அதுவும் கல்வித்துறையில் இடம்பெறும் ஊழல்களை அமைச்சர்- அரசினர்- உறுதிப்படுத்தியுள்ளனர்.

குதிரைகள் வெளியேறிய பின்னர் லாயத்தை மூடும் எத்தனம், எதிர்காலச் சந்ததியினரின் கல்வித்துறையிலும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுவது இந்த நாட்டைப் பிடித்த சாபக் கேடுகளுக்கு மிகவும் வெளிப்படையான ஓர் உதாரணமே.

கல்வி மக்களின், ஏன் நாட்டினதும் கண்கள் போன்றது. எதிர்காலப் பிரஜைகளான மாணவர்களின் கல்வித்துறை சீராகவும் நேராகவும் இருக்க வேண்டும் என்பதில் அரசு அக்கறை காட்டியிருந்தால் இத்தகைய நிலை ஏற்பட்டிருக்காது. வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னரே வெளியானமை குறித்து இரகசியப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருவதாகவும், கைதுசெய்யப்பட்டவர்களூடாக உண்மை நிரூபிக்கப்படின் கடும் தண்டனை வழங்கப்படுமெனவும் இப்போது அப்பைக் கட்டு கட்டுவதால் அரசு தனது பலவீனத்தை மூடி மறைத்துவிட முடியாதே!

இந்த விவகாரத்தை நாம் இலேசானவையாகக் கருதிவிட முடியாது. இலவசக்கல்வி என்ற போர்வையில் மாணவர்களின் எதிர்காலத்துக்கான தன்னம்பிக்கையை இலவசமாக சூறையாடும் ஒரு முயற்சியே இது.

இந்த மோசமான சூழ்நிலையில், கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன அமைச்சர் பதவியிலிருந்து தாமாக விலகிக் கொள்ள வேண்டுமென ஆசிரியர் தொழிற்சங்கங்களின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்திருக்கிறார். ஆனாலும் அமைச்சரின் பதவி விலகல் இத்தகைய மாணவர்கள்- மக்கள் விரோதச் செயல்களுக்கு எந்தவிதமான நெடுங்காலத் தீர்வையும் தரப்போவதில்லை.

இந்த வினாத்தாள் வெளியானதன் பின்னணியில் சில சக்திகள் இருந்திருக்கவேண்டும். அந்தச் சக்திகளை அடையாளம் காணவேண்டியதே இன்றுள்ள தேவை. இத்தகைய ஒரு மோசடி தென்னிலங்கையில் நடைபெற்றிருந்திருக்கிறது என்றால், மூன்று தசாப்த போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குத் தமிழ் மாணவர்கள் கல்வித்துறையும் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

இந்த வினாத்தாள் வெளியான விவகாரம் அம்பலத்துக்கு வராமல் விட்டிருந்தால், தென்னிலங்கையில் மாணவர்களின் பெறுபேறுகளின் வீதம் நிச்சயமாக வடக்கு, கிழக்கைவிட அதிகரித்துத்தான் இருந்திருக்கும். இதனை வெறும் சாதாரணமான ஒன்றாகக் கருதமுடியாது. நிச்சயமாகத் திட்டமிடப்பட்ட ஒன்றாகத்தான் இருக்கும்.

ஆண்டாண்டு காலமாகக் கல்வித்துறையில் முன்னேற்றம் கண்டிருந்த வடக்கு, கிழக்கின் முக்கிய பிரதேசங்கள் இன்று பின்னடைவைக் கண்டிருப்பது தென்னிலங்கையின் இவ்வாறான செயற்பாடுகளால்தானா என்ற நியாயமான சந்தேகத்தை உண்டாக்கி உள்ளது.

சட்டக்கல்லூரிக்கான நுழைவுப் பரீட்சையில் முஸ்லிம் மாணவர்கள் அதிகமாக உள்வாங்கப்பட்டு விட்டனரெனக் கூக்குரலிடும் காவியுடை தரித்தோரும், இனவாதச் சிந்தனையாளர்களும் இன்று இந்த வினாத்தாள் வெளியான பாரதூரமான செயற்பாட்டுக்கு எதிராக வீதியில் இறங்காமலிருப்பது ஏன்?

போரினால் பாதிக்கப்பட்டதாலேயே வடக்கு, கிழக்கு தமிழ் மாணவர்கள் கல்வியில் பின்னடைவைச் சந்தித்திருக்கிறார்கள் என்று நியாயப்படுத்திகொண்ட சிங்களச் சிந்தனையாளர்கள் கூறுவதன் பின்னணியில், வினாத்தாள் வியாபாரமும் இருந்திருக்கின்றது என்பது இப்போது அம்பலமாகி உள்ளது எனலாம்; அதில் தப்பில்லை.

சாதாரண ஒரு பரீட்சையையே திறம்பட நடத்தி முடிக்கத் தெரியாத ஓர் அரசு, முக்கியமான பிரச்சினைகளுக்கு எப்படித் தீர்வைத் தரப்போகின்றது என்பதுதான் இன்றுள்ள மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வி. வினாத்தாள்கள் வெளியான விவகாரமானது, எத்தனையோ மாணவர்களின் தன்னம்பிக்கைக்கு உலை வைத்திருக்கிறது. அரசு இப்போது எடுக்கும் எந்த நடவடிக்கையும் அந்தத் தன்னம்பிக்கையை மீள்விக்கும் என்று கொள்ள இயலாது.

கல்வித்துறையில் இப்போது ஏற்பட்டுள்ள நிலைமையை விதியென்றோ அல்லது சதியென்றோ இலகுவில் ஒதுக்கிவிட முடியாது.

தமிழ் மாணவர்களின் கல்வி நிலையைப் பாழடிக்கும் முயற்சிகளுக்கு மேற்போந்த விவகாரம் ஒரு துளி உதாரணம் என்று கருதினால் -

வருங்காலத் தமிழ் பிரஜைகளின் முன்னேற்றத்தைத் தறுக்கணிக்க அரசாங்கத்தால் இன்னும் எத்தனை சதிகள் தோற்றுவிக்கப்படுமோ யார் அறிவார்? யாழ். பல்கலைக்கழகத்துக்குள் படையினரும் பொலிஸாரும் நடத்திய அத்துமீறல், பல்கலைக்கழக மாணவர்களின் கைது என்பன தமிழர் கல்வியைக் கெடுக்கும், தறுக்கணிக்கச் செய்யும் சதியின் ஒரு சூட்சுமத்தின் அங்கம் என்று ஏன் கொள்ள முடியாது...?

# பல்கலை விரிவுரையாளர் கொடுப்பனவு ஜனவரி மாதம் தொடக்கம் அதிகரிப்பு

கொழும்பு,டிசெ.26

பல்கலைக்கழக விரிவுரையாளருக்கான கற்பித்தல் செயற்பாடுகளுக்கான கொடுப்பனவு மற்றும் ஆய்வுகளுக்கான கொடுப்பனவு எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் விதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பல்கலைக்கழக ஆசிரியர்களது கற்பித்தல் கொடுப்பனவு 15 வீதத்தில் இருந்து 20 வீதம் வரையிலும் ஆய்வுகள் கொடுப்பனவு 10 வீதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

பயிலுநர் விரிவுரையாளர் ஒருவரது கற்பித்தல் கொடுப்பனவு அவர்களது அடிப்படைச் சம்பளத்தின் 39.75 ஆக இருப்பதோடு, அது நூற்றுக்கு 60 வீதமாகவும் விரிவுரையாளர் ஒருவரது கற்பித்தல் கொடுப்பனவு 64 இல் இருந்து 80 வீதம் வரையிலும் பேராசிரியர்களது கொடுப்பனவு 65 இல் இருந்து 85 வீதம் வரையிலும் மற்றும் சிரேஷ்ட பேராசிரியர் ஒருவரது கற்பித்தல் கொடுப்பனவு 66.25 வீதத்தில் இருந்து 85 வீதம் வரையிலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதிகரிக்கப்பட்டுள்ள கற்பித்தல் கொடுப்பனவின் 50 வீதம் ஜனவரி மாதத்தில் இருந்தும் ஏனைய 50 வீதம் எதிர்வரும் ஜூன் மாதத்தில் இருந்தும் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு இதுவரையில் வழங்கப்பட்டு வந்துள்ள அடிப்படைச் சம்பளத்தின் 25 வீதமான ஆய்வுகளுக்கான கொடுப்பனவு அனைத்து ஆசிரியர்கள் தொடர்பாக 35 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர்களது ஊழியர் சேமலாபநிதி கணிப்பிடப்படும் போது அவர்களுக்கு வழங்கப்படும் கற்பித்தல் கொடுப்பனவையும் வழங்க திறைசேரி இணக்கம் தெரிவித்துள்ளது.


ஆசிரியர்களது ஊழியர் சேமலாப நிதி கணிப்பிடப்படும் போது அவர்களுக்கு வழங்கப்படும் கற்பித்தல் கொடுப்பனவு இது வரையிலும் கணிப்பில் கொள்ளப்படவில்லை.

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இருந்து அந்தக் கொடுப்பனவும் கூட கணிப்பில் கொள்ளப்படுவதற்கு உரிய சுற்றறிக்கை வெளியிடப்படும் எனவும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவிக்கிறது.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் கொடுப்பனவுகளை அதிகரிக்கும் திறைசேரியின் பரிந்துரைகள் உள்ளடங்கியுள்ள அறிக்கை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் உயர் கல்வி அமைச்சிடமும், பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்திடமும் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

### பரீட்சை விடைத்தாளில்

## தமிழின் வீழ்ச்சியும் சிங்களத்தின் எழுச்சியும்


இத்தாளைப் பர்ட்சை மண்டபத்திலருந்து வெளியே எடுத்துச் செல்லல், அனுமதியன்றி அனிப்பட்டோர் வைத்திருத்தல், வேறு தேவைக்குப் பயன்படுத்தல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும் - பர்ட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பர்டசைத் திணைக்களம்.

யாழ்ப்பாணம், டிசெ. 26

அரச சேவையின் கனிஷ்ட ஊழியர்களை அரச முகாமை சேவையில் வகுப்பு III இற்கு தரமுயர்த்துவதற்காக கடந்த சனிக்கிழமை யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின்போது விடைகளை எழுதுவதற்காக வழங்கப்பட்ட தாளில் அறிவுறுத்தல் என்ற பெயரில் தமிழ்க் கொலைகள் பல இடம்பெற்றிருந்ததை அவதானிக்க முடிந்தது.

விடை எழுதும் முன்பக்கத் தாளின் கீழ்ப்பக்கத்தில் 'இத்தாளைப் பர்ட்சை மண்டபத்திலருந்து வெளியே எடுத்துச் செல்லல், அனுமதியன்றித் அனிப்பட்டோர் வைத்திருத்தல், வேறு தேவைக்குப் பயன்படுத்தல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும். பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பர்ட்சைத் திணைக்களம்' என்ற பந்தியிலேயே இவ்வாறு தமிழ்ச் சொற்கள் கொலை செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, அத்தாளில் உள்ள சிங்களச் சொற்கள் மிகச் சரியாக அச்சிடப்பட்டுள்ளன. ஆனால் தமிழில் மட்டும் இந்த நிலை ஏனோ என்று பரீட்சார்த்திகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான பிழைகளைத் திருத்த வேண்டிய கல்வித் திணைக்கள உயரதிகாரிகள் இது சின்னப்பிழைதானே எனக் கூறி கண்டுங் காணாமலும் இருப்பதனாலேயே இந்த நிலை மிக நீண்ட காலமாக தொடர்வதாகக் கூறப்பட்டது.

எனவே, இந்த விடயத்தில் இனியாவது தமிழ் அரச அதிகாரிகள் உடனடிக் கவனமெடுத்து இப்படியான தமிழ்க் கொலைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனப் பலராலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-288)

## இடர்களில் உயிரிழந்தோருக்காக இன்று 2 நிமிடங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 26

இடர்களின் போது உயிரிழந்தவர்களை நினைகூரும் முகமாக இன்று காலை 9.25 முதல் 9.27 வரையான இரண்டு நிமிடங்கள் சகலரும் அஞ்சலி செலுத்துவீர்கள் என்று யாழ்.மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை 2004 ஆம் ஆண்டு ஆழிப்பேரலை தாக்கியதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர் 26 ஆம் திகதி தேசிய பாதுகாப்புத் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்த வருடம் தேசிய பாதுகாப்புத் தினத்தின் தேசிய ரீதியான நிகழ்வு புதுவையில் இடம்பெறுகின்றது. அதே வேளை, ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட செயலகங்களில் தேசிய பாதுகாப்புத் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்காக காலை 9.25 மணி முதல் 9.27 வரையில் இரண்டு நிமிட நேர அஞ்சலி இடம்பெறவுள்ளது. இதன் போது வீதிகளில் பயணிப்போர் மற்றும் அலுவலகங்களில் பணிபுரிவோர் என்று அனைவரும் இரண்டு நிமிடம் தமது வேலைகளை நிறுத்தி எழுந்துநின்று அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்.மாவட்ட செயலகத்தில் ஆழிப்பேரலை தொடர்பான கண்காட்சி ஒன்றும் இடம்பெறவுள்ளது.

மணற்காடு தேவாலய முன்றிலிலும், தெல்லிப்பழை, உடுத்துறை போன்ற இடங்களிலும் சுனாமி நினைவு தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-5-8)

# காணிச் சட்டத் திருத்தத்தின் படி இடம்பெறாத பதிவுகள் அனைத்தும் நிராகரிக்கப்படும்

## மேலதிக பதிவாளர் நாயகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 26

காணிச் சட்டத் திருத்தத்தின்படி ஜனவரி மாதம் தொடக்கம் காணிப் பதிவுகளின் போது பிரதேச செயலக, உள்ளூராட்சி சபை, கிராம அலுவலர் பிரிவுகள் பதிவுசெய்யப் படவுள்ளன.

குறிப்பிட்ட காணிப் பதிவாளர்கள் இதனைப் பின்பற்றுவதில்லை. 'அவ்வாறு பின்பற்றப் படாது பதிவுசெய்யப்படும் காணிகளது பதிவுகள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.

மேலதிக பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை முழுவதும் நடைமுறையில் இருந்த காணிப் பதிவு அதிகார எல்லைகள் தற்போது இலகுவான பதிவு முறைக்கு மாற்றும் பொருட்டு புதிய முறையில் மீளமைப்புச் செய்யப்பட்ட பிரதேச செயலக எல்லைகளாக மாற்றப்படவுள்ளன.

இதுவரை காலமும் கோறளை பற்று எனப் பெரிய அளவில் வகுக்கப்பட்டிருந்த பதிவுப் பிரிவுகள் யாவும் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் பிரதேச செயலக பிரிவு அடிப்படையிலான பதிவுப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அதற்கமைய பதியப்படவுள்ளன.

இந்த முறையில் பதிவு செய்யும் நடவடிக்கையைச் சீராகச் செய்வதற்காக நொத்தாரிசு கட்டளைச் சட்டம், ஆவணப்பதிவு கட்டளைச் சட்டம் என்பவற்றில் கடந்த ஜூன் மாதம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி உறுதி ஒன்றை அத்தாட்சிப்படுத்தும் பிரசித்த நொத்தாரிசு ஆவண அட்டவணையில் வழமையான விவரங்களுக்கு மேலதிகமாக காணி அமைந்துள்ள பிரதேச செயலர் பிரிவு, உள்ளூராட்சிசபைப் பிரிவு, கிராம அலுவலர் பிரிவு, வீதி, வரி மதிப்பிலக்கம் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும்.

காணிப் பதிவுச் சட்டம் திருத்தம் செய்து 6 மாதங்கள் கடந்து விட்ட போதும், அந்தச் சட்டத் திருத்தத்தை குறிப்பிட்ட நொத்தாரிசுகள் பின்பற்றாது உறுதிகளை அத்தாட்சிப்படுத்துகின்றனர்.

அவ்வாறான உறுதிகள் அனைத்துமே நிராகரிக்கப்படும். எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னரே இவ்வாறு பதிவாகும் உறுதிகளது பதிவுகள் நிராகரிக்கப்படும்.- என்று சதாசிவ ஐயர் மேலும் தெரிவித்தார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரி கல்விக் கோட்டத்தின் பின்தங்கிய

# கிராமப் புறப் பாடசாலைகளில் பெரும் ஆசிரியர் பற்றாக்குறை

கிளிநொச்சி, டிசெ.26

கிளிநொச்சி பூநகரி கல்விக் கோட்டத்தின் பின்தங்கிய கிராமப் புறப் பாடசாலைகளில் ஆசிரியர் வளப்பற்றாக்குறை அதிகளவில் காணப்படும் அதேவேளை போக்குவரத்து வசதியுடைய பாடசாலைகளில் ஆசிரியர்கள் அளவுக்கு அதிகமாகக் காணப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட வேரவில், இந்து ம.வி., வலைப்பாடு அ.த.க.போன்ற பூநகரி தெற்குப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் பெரும் ஆசிரியர் வளப்பற்றாக்குறை காணப்படுகின்றது.

குறிப்பாக கிராஞ்சி அ.த.க. பாடசாலைக்கு 18 ஆசிரியர்கள் தேவையான போதும் 09 ஆசிரியர்களே தற்போது சேவையாற்றுகின்றனர். வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் விஞ்ஞானப் பாடத்துக்கு ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. இதைவிட ஏனைய பாடங்களுக்கும் ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது.

இந்த நிலையில் பூநகரி வடக்குப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் 32 ஆசிரியர்கள் தேவையான போதும் அங்கு 48 ஆசிரியர்கள் கடமைபுரிகின்றனர். அதாவது 12 ஆசிரியர்கள் மேலதிகமாகவுள்ளனர்.

குறித்த ஆசிரியவளம் சரியாகப் பகிரப்படும் சந்தர்ப்பத்தில் பின்தங்கிய பிரதேச ஆசிரியர் பற்றாக்குறையை ஓரளவு தீர்க்க முடியுமென பூநகரி கோட்டக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார். (த-6)

# போக்குவரத்தில் சிரமம்

கிளிநொச்சி, டிசெ.26

கிளிநொச்சி பூநகரி விநாசியோடை பிரதேச மக்கள் போக்குவரத்தில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்துக்கு உட்பட்ட பின் தங்கிய கிராமங்களுக்கான போக்குவரத்து வசதிகள் இன்மையால் அந்தப் பிரதேசத்து மக்கள் தொடர்ந்து பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பாக பூநகரிப் பிரதேசத்துக்கு உட்பட்ட விநாசியோடை, கௌதாரிமுனை, மண்ணித்தலை ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்து வசதிகள் எவையும் இல்லையென்றும் இந்தக் கிராமங்களுக்குச் செல்லும் பிரதான வீதி எந்தவித புனரமைப்புப் பணிகளும் இன்றிக் காணப்படுவதால் வாகனங்கள் எதுவும் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதாயின் சுமார் 15 கிலோ மீற்றர் தூரம் வரை சிரமப்பட்டுப் பயணிக்கின்றனர்.

எனவே இந்த வீதியை விரைவில் புனரமைத்து உதவுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-6)

## முல்லை. மாவட்டத்தில் மரமுந்திரிகைச் செய்கை

முல்லைத்தீவு, டிசெ. 26

முல்லைத்தீவு மாவட்டத்தின் 60 ஏக்கர் காணியில் மரமுந்திரிகைச் செய்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தச் செய்கைக்கென மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தால் தெரிவு செய்யப்பட்ட 20 விவசாயிகளுக்கு உயர்ரக மரமுந்திரிகைக் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட இந்த விவசாயிகளுக்கு மரமுந்திரிகைச் செய்கைக்கான பயிற்சி கடந்த மாதம் முழுவதும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட

## புதுக்குளம், மூனாமடு மக்களுக்கு வவுனியா பிரதேச செயலகம் உதவி

வவுனியா, டிசெ. 26

புதுக்குளம், மூனாமடு ஆகிய பகுதிகளிலிருந்து வெள்ளத்தால் இடம் பெயர்ந்த மக்களுக்கு வேண்டிய உதவிகளை வவுனியா பிரதேச செயலகம் வழங்கி வருகிறது.

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக புதுக்குளம் மேவிப்பாய்வதால் புதுக்குளத்தைச் சேர்ந்த மக்கள் புதுக்குளம் பொது நோக்கு மண்டபத்திலும், மூனாமடுக் கிராம மக்கள் மூனாமடு பொது நோக்கு மண்டபத்திலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த இரு இடங்களிலும் தங்கியுள்ள 35 குடும்பங்களுக்கும் இடர் முகாமைத்துவ திணைக்களத்தின் மூலமாகச் சமைத்த உணவு வழங்கப்படுகின்றது என்று வவுனியா பிரதேச செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

செக்கட்டிப்புலவு குளம் உடைப்பெடுத்துள்ளதால் மண் அணை இட்டு அது தடுக்கப்பட்டுள்ளது. மேலும் பல குளங்கள் மேவிப் பாய்வதால் மேலும் பல கிராமங்கள் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது எனவும் கூறப்பட்டது.

நவ்விக்குளம் வான்பாய்வதால் பாலமோட்டை - குஞ்சுக்குளத்துக்கான போக்குவரத்தும், வவுனியாக்குளம் பாய்வதால் மகாறம்பைக்குளம், பூந்தோட்டம், காத்தார் சின்னக்குளம் ஆகிய இடங்களுக்குமான போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளன.

**குடிசை வீடுகளுக்குள் வெள்ளநீர் கசிவுகள் ஏற்படுவதால் மக்கள் மேலும் இடம்பெயரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.**

இதேவேளை, குடிசை வீடுகளுக்குள் வெள்ளநீர் கசிவுகள் ஏற்படுவதால் மக்கள் மேலும் இடம்பெயரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய இதர தேவைகளுக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது. (ம-400)

# ஆயிரத்து 369 மி.மீ.மழை வவுனியாவில் இதுவரை பதிவு

## மாகாண நீர்ப்பாசனப் பொறியியலாளர் தகவல்

வவுனியா, டிசெ.26

வவுனியாவில் 2012 ஆம் ஆண்டு மழை வீழ்ச்சி இதுவரை ஆயிரத்து 369 மில்லிமீற்றரைத் தாண்டியுள்ளது என்று மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் த.ராஜகோபு தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் தொடர் மழையால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குறுகிய நேரத்தில் கூடிய மழை பெய்தமையால் "மாமடுவ" குளத்தின் வான் கதவுகளில் இருந்து பாய்ந்த நீரின் கனஅளவே ஏ-9 வீதியின் ஊடாகப் பாய்ந்து போக்குவரத்தைத் தடைசெய்தது. 20 ஆம் திகதி 49 மி.மீ. மழையும், 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 165 மி.மீ. மழையும் பெய்தமையை அடுத்து வவுனியா தெற்கில் - ஈரபொத்தான, மகா பச்சைக் கொடிய, மாமடுவ, மடுகந்த ஆகிய குளங்களும் -

**வவுனியா மாவட்டத்தில் 650 ஏக்கருக்குக் கூடிய வயல் நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.**

வவுனியா நகரப்பகுதியில் - வவுனியாக்குளம், மகாறம்பைக்குளம், மூனாய்மடு குளம், நாம்பன்குளம், சேமமடுக்குளம், மாளிகைக்குளம், கொம்புவைத்த குளம், பம்பைமடுக்குளம், வேலவன் குளம் ஆகியனவும்-

வவுனியா வடக்கில் - கனகராயன்குளமும்-

செட்டிகுளத்தில் - பெரிய தம்பனைக்குளமும் சடுதியாக நீர்மட்ட உயர்வை எட்டின

வவுனியா மாவட்டத்தில் 684 கமநல சேவைத் திணைக்களத்தின் நிர்வாகத்தில் உள்ள குளங்களிலும், மத்திய நீர்ப்பாசனத் திணைக்கள நிர்வாகத்தில் உள்ள குளங்களிலும் நீர்மட்டம் உயர்வடைந்தது.

இவற்றில் செட்டிகுளம், பாவற்குளம், வவுனியாக் குளம், மாமடுக்குளம், பம்பைமடுக் குளங்களில் நீரின் மட்டம் உயர்ந்து காணப்படுகின்றது. வவுனியாவில் உள்ள குளங்களின் நீர் மாமடுவ குளத்தில் கலந்து, பின்னர் பேராறு நீரில் கலந்து, மன்னார்க் கடலைச் சென்றடையும்.

மாமடுவ குளத்தின் வான் கதவுகள் ஊடாக 3 அடி தண்ணீர் பாய்ந்ததே நெற்பயிர் பாதிப்புக்குக் காரணம். தற்போது குளத்தை வெட்டிவிட ஆலோசிக்கப்படுகிறது.

மாமடுவ குளத்தின் ஊடாக பாய்ந்த நீரால் 100 ஏக்கர் வயல் நிலமும், பம்பைமடுக் குளத்தின் ஊடாகப் பாய்ந்த நீரால் 100 ஏக்கர் வயல் நிலமும், வவுனியாக் குளத்தின் ஊடாகப் பாய்ந்த நீரால் 50 ஏக்கர் வயல் நிலமும், வவுனியா மாவட்டத்தில் 650 ஏக்கருக்கு மேல் வயல்நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் நெல் உற்பத்தி மோசமாகப் பாதிக்கப்படும்.

வான்வழிந்து ஓடும் இடங்களில் வயல்கள் அமைக்கப்பட்டமை மற்றும் வீடுகள் கட்டப்பட்டமை போன்றன வெள்ளப் பெருக்கு அபாயம் வவுனியாவில் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தன.

2008 ஆம் ஆண்டு 1,348 மி.மீ. மழையும், 2009 ஆம் ஆண்டு 1,439 மி.மீ. மழையும், 2010 ஆம் ஆண்டு 1,542 மி.மீ. மழையும், 2011 ஆம் ஆண்டு 1,944 மி.மீ. மழையும், 2012 ஆம் ஆண்டு இதுவரை 1,369 மி.மீ. மழையும் வவுனியாவில் பதிவாகி உள்ளன. (ம-402)

# மரக்கறிப் பயிர்களில் நோய்த் தாக்கம்

## முழங்காவில் விவசாயிகள் பாதிப்பு

*கிளிநொச்சி, டிசெ.26*

*கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் மரக்கறிப் பயிர்களில் நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.*

*முழங்காவிலிருந்து வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் மரக்கறி வகைகளில் கத்தரி முதன்மையானது. தற்போது இந்தப் பயிர் உட்பட ஏனைய மரக்கறிப் பயிர்களும் நோய்த் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.*

*இதேவேளை முழங்காவில் கதிராவில்குளம், பிள்ளையார் கோயில்குளம் என்பவற்றின் நீர் மட்டம் உயர்வடையாததால், கிணறுகளின் நீர் மட்டமும் உயரவில்லை எனவும் தெரிய வருகின்றது.*

*கிளிநொச்சி மாவட்டத்திலேயே ஆழமான கிணறுகளைக் கொண்ட இடமாக முழங்காவில் விளங்குகின்றது. இங்கு மரக்கறிப் பயிர்கள், புகையிலை, வாழை ஆகியன பெருமளவில் உற்பத்தியாகின்றன.*

*ஆனால் முழங்காவிலில் தற்போது விவசாய முயற்சிகள் குறைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க 18)*

## நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் பதிவாளர் திணைக்கள சேவை

நெடுங்கேணி, டிசெ. 26

நெடுங்கேணி பிரதேசத்திலுள்ள மக்கள் தங்களுடைய பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவு போன்ற ஆவணங்களைப் பெறுவதற்கு வசதியாக நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் பிறப்பு, இறப்பு பதிவுத் திணைக்கள சேவைகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

இதுவரை காலமும் இம்மக்கள் வவுனியா மாவட்டச் செயலகத்திலேயே தமது குறிப்பிட்டதேவைகளை நிறைவு செய்து வந்தனர்.

தற்போது அந்தப் பகுதி மக்களின் நலன் கருதி நெடுங்கேணி பிரதேச செயலர் க.பரந்தாமனால் நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் இப்பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவு போன்ற சான்றிதழ்களை தவற விட்டவர்கள், அவற்றை நெடுங்கேணி பிரதேச செயலகத்திலேயே இனிமேல் பெற்றுக்கொள்ளலாம் என பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ம-435)

# 713 பேருக்கு விதை நெல்

வவுனியா, டிசெ. 26

கடந்த சிறுபோக நெற்செய்கையின்போது பாதிப்புக்களை எதிர்கொண்ட வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 713 விவசாயிகளுக்கான விதைநெல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

[illegible] கள் திணைக்களத்தி உதவி ஆணையாளர் திருமதி குகன் குலோஜினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து பாதிப்படைந்த விவசாயிகளுக்கு இரண்டு புசல் நெல் வீதம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர மற்றும் [illegible] திணைக்கள உயர் அதிகாரிகள், விவசாயிகள் பலரும் கலந்து கொண்டனர். (ம-8)

# அரச காணிகளில் இந்திய வீடுகள்

புதுக்குடியிருப்பு,டிசெ.26

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரக் காணிகள் இல்லாத குடும்பங்களுக்கு அரச காணிகளை வழங்கி இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகளை அமைப்பதற்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற போர் இடர்களால் இடம் பெயர்ந்த வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்லாது புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் தங்கி இருக்கின்றனர். இவர்களுக்கு அரச காணிகளில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

**புதுக்குடியிருப்பு மேற்கு கிராம சேவகர் பிரிவில் 700 இந்திய வீடுகள் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

புதுக்குடியிருப்பு மேற்கு கிராம சேவகர் பிரிவில் 700 இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகள் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் அந்தப் பகுதி மக்களிடம் சொந்தமான காணிகள் இல்லை. இதனால் இவர்களுக்கு இந்திய வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாத சூழ்நிலை காணப்படுகிறது. இதனால் அத்திட்டம் இடைநடுவில் நிற்கும் சூழ்நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து இந்தப் பகுதியில் வசிக்கும் குடும்பங்களுக்கு அரச காணியில் கால் ஏக்கர் நிலப்பரப்பை வழங்கி வீடுகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலக வட்டாரங்கள்தெரிவித்தன. (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட்டி, நயினாதீவுக்கு படையெடுக்கும் தென்பகுதியினர்

யாழ்ப்பாணம்,டிசெ.26

தென்பகுதியில் இருந்து பெருந்திரளான மக்கள் வேலணை சாட்டி கடற்கரை, நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்துக்கு படையெடுத்து வருகின்றனர்.

சாட்டி கடற்கரையில் நவீன வடிவிலான கப்பல் தளத்தில் உடுபுடைவை மாற்றும், குளியலறை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

கடலில் குளிக்கும் சுற்றுலாப் பயணிகள் பின் கப்பல் தளகுளியலறையில் நீராடுவதற்கு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, நயினாதீவை நோக்கி நகரும் பயணிகள் நாகதீப விகாரை மற்றும் நாகபூசணி அம்மன் ஆலயம் ஆகியவற்றைத் தரிசித்து வருகின்றனர். அத்துடன் நயினாதீவில் உள்ள ஆடம்பர பொருள் களையும் கொள்வனவு செய் வதில் சுற்றுலாப் பயணிகள் ஆர்வம் காட்டி வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. (ம-50)

# குடத்தனை நன்னீரைப் பேண உவர்நீர் தடுப்பணை அவசியம்

## அமைக்கக் கோருகிறது வலிக்கண்டி கிராம அபிவிருத்திச் சங்கம்

வடமராட்சி, டிசெ.26

குடத்தனைப் பிரதேசத்தில் உள்ள நன்னீர் வளத்தைப் பேண குடத்தனை தொடக்கம் துன்னாலை வரையான பகுதிக்கு உவர் நீர்த் தடுப்பணையை அமைக்க வேண்டும்.

வலிக்கண்டி கிராம அபிவிருத்திச் சங்கம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் பிரதேசத்தின் இரு மருங்கிலும் ஆழ் கடலும் நீரேரியும் உள்ளன. இந்தப் பிரதேச மண்ணில் நன்னீர் வளத்தையும், விவசாய வளத்தையும் பேணிப் பாதுகாக்க வேண்டுமாயின், நிலத்தில் விழும் மழை நீர் கடலினுள் போவதைத்


**நன்னீர் வளத்தையும், விவசாய வளத்தையும் பேணிப் பாதுகாக்க வேண்டுமாயின், நிலத்தில் விழும் மழை நீர் கடலினுள் போவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் மழைகாலங்களிலும் மற்றும் வெள்ளப் பெருக்கு ஏற்படும் நேரங்களிலும் கடல் நீரேரியில் இருந்து நீர் நிலப்பரப்புக்குள் வருவதைத் தடுக்கும் முகமாக குடத்தனையில் இருந்து துன்னாலை வரைக்கும் உவர் நீர்த்தடுப்பணை அமைக்க வேண்டும்.

இந்த மண் அணையை அமைப்பதற்கு கிராம மக்கள் ஐ.ஏ.எம் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு ஒழுங்கு செய்தும், இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அக்கறை காட்டாத நிலைமை உள்ளது.

திட்டம் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. இந்தத் திட்டத்தை நடை முறைப் படுத்த சம்பந்தப்பட்டோர் முன்வரவேண்டும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)



சுண்டுக்குளி சந்திப் பகுதியில் புனித பரியோவான் சேமக்காலைக்கு அருகில் காணப்படும் புராதன மரபுரிமைச் சின்னம் ஒன்று அழிவுறும் நிலையில் காணப்படுகிறது.

முதலாம் உலகப்போர்க் காலத்தில் போர் எச்சரிக்கை அறிவிப்பை மக்களுக்கு குழல் ஊதி தெரியப்படுத்த பயன்படுத்திய உயரமான முருகைக்கல் தூணில் ஆலமரம் வளர்ந்து வருகிறது. இதனால் அந்தக் கல் அழிவடையும் நிலையில் உள்ளது. வருங்கால சந்ததிகள் நாட்டு நடப்பு வரலாறுகளை அறிந்து கொள்ளும் வகையில் இவ்வாறான வரலாற்று நினைவுச் சின்னங்களை பாதுகாக்க உள்ளூராட்சி சபைகள், தொல்லியல் திணைக்களம் என்பன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆர்வலர்கள் கேட்கின்றனர். (ம-135)

# தெல்லிப்பழை வைத்தியசாலை வீதிக்கு மின்குமிழ்கள் பொருத்தல்

யாழ்ப்பாணம்,டிசெ.26

தெல்லிப்பழை, வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள் நலன்கருதி, வைத்தியசாலை வீதியில் மின்குமிழ்கள் பொருத்தப் பட்டுள்ளன என்று வலி. வடக்கு பிரதேச சபையின் தலைவர் சோ.சுகிர் தன் தெரிவித்தார்.

தெல்லிப்பழை சந்தியில் இருந்து வைத்தியசாலை வரையிலான பகுதிக்கும், வைத்தியசாலையில் இருந்து பாதுகாப்பு வலயம் வரையிலான பகுதி வரையிலுமே இந்த மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை வைத்தியசாலை வரையிலான வீதிக்கு அண்மையிலேயே மின் விநியோகம் செய்யப் பட்டிருந்தது. இந்த நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலை நோயாளர் நலன் புரி சங்கத்தினால், குறித்த வீதிக்கு மின்குமிழ்கள் பொருத்தித் தருமாறு வலி.வடக்கு பிரதேச சபைக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக பிரதேச சபையின் நிதியில் இந்த மின் விளக்குகள் பொருத்தப் பட்டுள்ளன என்று பிரதேச சபை யின் தலைவர் மேலும் கூறினார். (ம-5)

# நடைபாதை வியாபாரியின் ஒரு தொகைப் பணம் அபேஸ்

குருநகர் பகுதியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட நடைபாதை வியாபாரி ஒருவரின் ஒருதொகைப் பணத்தைத் திருடர்கள் மிகவும் தந்திரமாகத் திருடிச் சென்றுள்ளனர்.

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டுத் தென்பகுதியில் இருந்து வந்திருந்த நடைபாதை வியாபாரி ஒருவர் உடுபுடைவைகளை வீதியோரம் வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தார். அந்தச் சமயம் மக்களின் நெரிசலைப் பயன்படுத்தி குறித்த வியாபாரியின் பணப் பெட்டிக்குள் இருந்து ஒரு தொகைப் பணத்தைத் திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த வருடங்களை விட இந்த முறை பெரும்பாலான நடைபாதை வியாபாரிகள் குருநகர் பகுதியில் தமது நடைபாதை வியாபார நிலையங்களை அமைத்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-17)



வங்கியியல் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்தவர்களுக்கான பட்டமளிப்பும் சான்றிதழ் வழங்கலும் ஞாயிற்றுக்கிழமை யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண பிராந்திய முகாமையாளர் எஸ்.கௌரிசங்கர் மாணவி ஒருவருக்குப் பதக்கம் அணிவித்து சான்றிதழ் வழங்கி கௌரவிக்கிறார். (ம-7)

# நகரசபையின் அனுமதிபெறாத விளம்பரப் பலகைகள் அகற்றல்

## சாவகச்சேரி நகர சபை அதிரடி

தென்மராட்சி,டிசெ.26

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் காணப்பட்ட நகரசபைகள் அனுமதி பெறாத விளம்பரப் பலகைகள், பதாகைகள் அனைத்தும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அகற்றப்பட்டன.

நகரசபைத் தலைவரின் பணிப்பின் பேரில் சபையின் வருமானப் பரிசோதகர்கள் வாகன உதவியுடன் சென்று நுணாவில் சந்தி தொடக்கம் மீசாலை வரை ஏ-9 வீதியில் கட்டப்பட்டிருந்த தொங்கு பதாகைகளுடன் வியாபார நிலையங்களில் அனுமதியின்றி வைக்கப்பட்டிருந்த விளம்பரப் பதாகைகளையும் பிடுங்கி எடுத்து நகரசபையில் ஒப்படைத்தனர்.

கடந்த வருடம் சாவகச்சேரி நகர்ப் பகுதி வர்த்தக நிலையங்களில் அனுமதியின்றி பொருத்தப்பட்டிருந்த விளம்பரப் பலகைகள் நகரசபைத் தலைவர் , செயலாளர் ஆகியோர் முன்னிலையில் அகற்றப்பட்டன.

இதனை அடுத்து ஒரே நாளில் 9 இலட்சம் ரூபா விளம்பரப் பலகைகளுக்கான கட்டணமாக வர்த்தக நிலையங்களாலும் விளம்பரதாரர்களாலும் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலமாக நகருக்கு வெளியே பல இடங்களில் அனுமதி பெறாமல் விளம்பரப் பலகைகளும் விளம்பரப் பதாகைகளும் காட்சிப்படுத்துவது அதிகரிக்கப்பட்டு வந்ததையடுத்து நேற்று அவை பிடுங்கி அகற்ற வேண்டி ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# காணி விவரங்கள் கணினி மயமாகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.26

காணி தொடர்பான விவரங்கள் அனைத்தும் எதிர் வரும் ஜனவரி மாதம் தொடக்கம் கணினி மயப் படுத்தப்படவுள்ளன.

இதன்மூலமாக காணி பற்றிய விவரங்களை கணினியில் பார்த்துத் தெரிந்து கொள்ளும் வகையில் இலகுபடுத்தப்படும் என்று மேலதிக பதிவாளர்நாயகம் ந.சதாசிவ ஐயர் தெரிவித்தார்.

காணிக்கு உரித்துடையவரது பெயர்விவரங்களைத் தெரிந்து கொள்ளும் வகையில் இலகுபடுத்தப் படும் என்று மேலதிக பதிவாளர் நாயகம் ந.சதாசிவ ஐயர் தெரிவித்தார்.

**காணிக்கு உரித்துடைய வரது பெயர் விவரங்கள், பிரதேச செயலர் பிரிவு, கிராம அலுவலர் பிரிவு, காணியின் எல்லைகள், பரப்பு, காணிப் பதிவு இலக்கம் உட்பட சகல விடயங்களும் கணினியில் பதிவேற்றம் செய்யப் படவுள்ளன.**

காணிக்கு உரித்துடையவரது பெயர் விவரங்கள், பிரதேச செயலர் பிரிவு, கிராம அலுவலர் பிரிவு, காணியின் எல்லைகள், பரப்பு, காணிப் பதிவு இலக்கம் உட்பட சகல விடயங்களும் கணினியில் பதிவேற்றம் செய்யப்படவுள் ளன.

ஒருவர் தனது காணி பற்றி விவரங்களைப் பார்வையிடுவதாயின் அதற்குரிய படிவத்தை நிரப்பிக் கொடுத்துப் பார்வையிட முடியும். காணி உரித்துடையவரும், நொத்தாரிசும் தவிர்ந்த வேறு எவரும் பார்வையிட முடியாது என்றும் கூறினார். (ம-4)

# நெடுந்தீவில் பேரீச்சை செய்கை

யாழ்ப்பாணம், டிசெ.26

நெடுந்தீவில் பேரீச்சம்பழச் செய்கையை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தியா, சவூதி அரேபியா ஆகிய நாடுகளில் இருந்து பேரீச்சை நாற்றுகளைத் தருவித்து அவற்றை நெடுந்தீவு விவசாயிகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை விவசாயத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டத்துக்கென முதலில் 100 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பரீட்சார்த்தமாக பேரீச்சை நாற்றுகள் வழங்கப்படவுள்ளன. இந்தப் பேரீச்சைச் செய்கை வெற்றியளிக்கும் பட்சத்தில் இந்தப் பிரதேசத்தில் அதனை மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-17)

# மக்கள் பங்களிப்புடன் அபிவிருத்தியை முன்னெடுங்கள்

## உள்ளூராட்சி சபைகளின் கலந்துரையாடலில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.25

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளால் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் அனைத்தும் மக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

சபை எல்லைக்குட்பட்ட பிரிவில் வேலைத் திட்டத்தை மேற்கொள்வதாயின் அந்தப்பகுதிக்கு உள்ளூராட்சி சபையின் உயர் அதிகாரிகள் நேரில் சென்று மக்களுடன் கலந்துரையாடி அவர்களால் ஏகோபித்த நிலையில் முன்னுரிமைப்படுத்தும் வேலைத்திட்டத்தை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

இவ்வாறு மேற்கொள்வதன் மூலம் அபிவிருத்தி திட்டங்களுக்கு மக்களின் பங்களிப்புக் கிடைப்பதுடன் சபை வளர்ச்சிக்கு உரிய பங்களிப்பையும் மேற்கொள்வர்.

இவ்வாறு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் ஆசிய பவுண்டேசன் நிறுவனத்தினரால் உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கு நடத்தப்பட்ட கலந்துரையாடலில் தெரிவிக்கப் பட்டது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா– ரஷ்யா ஆயுத ஒப்பந்தம் 300 கோடி டொலர்கள் மதிப்பீட்டில்

## இரு நாட்டுத் தலைவர்களும் கைச்சாத்து



டில்லி, டிசெ.26

இந்தியாவும் ரஷ்யாவும் முன்னூறு கோடி டொலர்கள் மதிப்புடைய ஆயுத விற்பனை ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்தியா வந்துள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், பிரதமர் மன்மோகன் சிங்கை டில்லியில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்துப் பேசினார்.

இரு தலைவர்களும் கையெழுத்திட்ட பின் ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

**சிஸ்டமா விவகாரம்**

சந்திப்பின்போது ரஷ்ய தொலைத்தொடர்பு நிறுவனமான சிஸ்டமாவின் 2ஜி உரிமங்கள் இந்தியாவில் ரத்துச் செய்யப்பட்டமை குறித்து புடின் தனது கவலையை மன்மோகன் சிங்கிடம் பகிர்ந்து கொண்டதாகத் தெரிகிறது. இந்தியாவில் ஷியாம் சிஸ்டமா 'டெலி சர்வீசஸ்' என்ற பெயரில் செயற்படும் அந்த நிறுவனத்துக்கு 22 உரிமங்களில் 21 உரிமங்கள் உச்ச நீதி மன்ற உத்தரவின்படி ரத்துச் செய்யப்பட்டன. ஒதுக்கீட்டில் முறைகேடு நடைபெற்றதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சிஸ்டமா குறித்து விவாதிக்கப்பட்டது என்று மட்டும் அதிகாரபூர்வமாக தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு, விண்வெளி ஆராய்ச்சி, வர்த்தகம், முதலீடு, அறிவியல் தொழில் நுட்பம், கல்வி, கலாசாரம், சுற்றுலா உள்ளிட்ட துறைகளின் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் பேச்சு நடத்தினர்.

**71 ஹெலிகொப்டர்கள்**

பாதுகாப்புத்துறை ஒப்பந்தத்தின்படி 71 நவீன ரக இராணுவ ஹெலிகொப்டர்கள், மேலும் 42 சுகோய் போர் விமானங்களை இந்தியாவுக்கு ரஷ்யா வழங்க உள்ளது. இதன் மூலம் இந்தியாவில் இராணுவத்துக்குத் தேவையான விமானங்கள், ஆயுதங்கள் உள்ளிட்ட தளபாடங்களை அதிகம் அளிக்கும் நாடுகளின் பட்டியலில் ரஷ்யா மீண்டும் முதலிடம் பிடித்துள்ளது.

சந்திப்புக்குப் பின் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்ததாவது:-

இரு தரப்பு ஒப்பந்தங்கள் மட்டுமின்றி சர்வதேச விவகாரங்கள் குறித்தும் இருவரும் விவாதித்தோம். சர்வதேச பிரச்சினைகளில் இந்தியாவும் ரஷ்யாவும் ஒரே கருத்தைக் கொண்டுள்ளன. அணுசக்தித் திட்டச் செயற்பாடுகள் இருதரப்பு உறவில் முக்கிய அம்சமாகும்.

**கூடங்குளத்தில் மேலும் அணு உலைகள்**


ரஷ்ய உதவியுடன் கூடங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள அணுமின் திட்டம் நிறைவுபெற்று விட்டது. விரைவில் அங்கு மின் உற்பத்தி ஆரம்பிக்கும். அடுத்த ஆண்டில் இரண்டாவது அணு உலைத் திட்டம் நிறைவு பெறும்.

கூடங்குளத்தில் 3,4 ஆவது அணு உலைத் திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பான பேச்சு சாதகமான முறையில் நடைபெற்று வருகிறது.

எமது இராணுவத்தை நவீனமயப்படுத்துவதில் ரஷ்யாவின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. நவீன தொழில்நுட்ப ரீதியில் எமது பாதுகாப்புத் துறையை மேம்படுத்துவதில் ரஷ்யா பல்வேறு வகைகளில் உதவி வருகிறது. இது எதிர்காலத்திலும் தொடர ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுகிறது எனவும் தெரிவித்தார். (வ)

---

### சங்கீத நாடக அகடமி விருதை பெறுகிறார் இளையராஜா



டில்லி, டிசெ.26

இசையமைப்பாளர் இளையராஜாவுக்கு சங்கீத நாடக அகடமி விருது வழங்கப்படவுள்ளது. இதுகுறித்து சங்கீத நாடக அகடமி அமைப்பு, இந்த வருடத்துக்கான விருது பெறுவோர் மற்றும் நிதி உதவி பெறுவோர் பட்டியலை நேற்று முன்தினம் வெளியிட்டது.

அதில், இளையராஜாவுக்கு சங்கீத நாடக அகடமி விருது வழங் கப்படுவதாக அறிவித் துள்ளது. விருதுடன் ஒரு லட்ச ரூபா ரொக்கப் பரிசு, தாமிரப் பத்திரம் மற்றும் பொன்னாடை வழங்கப் படவுள்ளன. கிராமி விருது பெற்ற இசைக்கலைஞர் விநாயக்ராம் உட்பட 36 பேருக்கு நிதி உதவி (பெலோஷிப்) தலா 3 லட்ச ரூபா வழங்கப்படவுள்ளது. நந்தி ரமணி மற்றும் அருண் காகடாவுக்கு இந்த வருடத்தின் சிறந்த பங்களிப்புக் கான விருது வழங்கப்படுகிறது.

---

### சி.ஆர்.பி.எப். முகாமில் சூடு; ஜவான்கள் 4பேர் சாவு



ராய்ப்பூர், டிசெ.26

சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள மத்திய துணைப் படைப் பொலிஸ் (சி.ஆர்.பி.எப்) முகாமில் நித்திரையில் இருந்த படை ஜவான்கள் மீது சக வீரர் திடீர் துப்பாக்கி சூடு நடத்தினார். இதில் 4 பேர் உயிரிழந்தனர். ஒருவர் படு காயம் அடைந்தார்.

சத்தீஸ்கர் மாநிலம், தன்டேவடா மாவட்டத்தில் 111 ஆவது மத்திய துணைப் படைப் பொலிஸ் படை (சி.ஆர்.பி.எப்) பட்டாலியன் முகாம் உள்ளது. இங்கு நேற்றுமுன்தினம் நள்ளிரவு படையினர் தூங்கிக் கொண்டிருந்தனர். அப்போது தீப் குமார் திவாரி என்ற வீரர், நித்திரையில் இருந்த சக வீரர்கள் மீது திடீரென துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டார். இதில் குண்டுகள் பாய்ந்து 3 ஜவான்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 2 பேர் படுகாயங்களுடன் உயிருக்குப் போராடினர். அவர்கள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். வழியில் ஒருவர் இறந்தார். மற்றொருவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (வ)

---



டில்லியில் மருத்துவ மாணவி ஒருவர் வன்புணர்வு கொடுமைக்குள்ளானதை அடுத்து டில்லியில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை தொடர்பாக, பாரதிய ஜனதா மூத்த தலைவர்கள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியைச் சந்தித்துப் பேசினர்.

---

# மாணவி மீதான வன்புணர்வை கண்டித்து மாணவர்கள் போராட்டம்

## மூடப்பட்டது 'இந்தியா நுழைவாயில்' பகுதி




டில்லி, டிசெ.26

மாணவி மீதான வன்புணர்வுச் சம்பவத்தை கண்டித்து நடைபெறும் போராட்டத்தை கட்டுப்படுத்த இந்தியா நுழைவாயில் பகுதியில் அனைத்து வீதிகளும் மூடப்பட்டு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

டில்லியில் பாலியல் வன்முறைக்கு ஆளான மாணவிக்கு நீதிகோரி திங்கட்கிழமை நான்காவது நாளாக மாணவர்கள், இளைஞர், மகளிர் அமைப்பினர் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

அதையடுத்து ஜனாதிபதி மாளிகை தொடக்கம் இந்தியா நுழைவாயில் பகுதி வரை போக்குவரத்து தடை செய்யப்பட்டு அங்கு பகுதி சீல்வைக்கப்பட்டது. முக்கிய வீதி சந்திப்புகளில் மத்திய [illegible] பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

இந்தியா நுழைவாயில் பகுதி நோக்கி வந்த போராட்டக்காரர்களை பொலிஸார் இடை வழியிலேயே தடுத்து நிறுத்தி ஜந்தர்மந்திருக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். 'பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி வேண்டும்; பாலியல் குற்றவாளிகளைத் தண்டிக்க கடும் சட்டம் வேண்டும்' என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் கோஷமிட்டனர். எனினும் போராட்டம் அமைதியாக முடிந்தது.

போராட்டத்தின் நிறைவாக, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள மாணவி நலம் பெற வேண்டி, மெழுகுவர்த்தி ஏந்தி நூற்றுக்கணக்கான மாணவர்கள் பிரார்த்தனை செய்தனர்.

இதனிடையே தொலைக்காட்சியில் பேசிய பிரதமர் மன்மோகன் சிங், பொது மக்கள் அமைதி காக்க வேண்டும். மாணவி பலாத்காரம் தொடர்பாக விசாரணை துரிதப்படுத்தப்படும். இந்த விவகாரத்தில் போராட்டத்தின் மூலம் பொது மக்கள் தங்கள் கோபத்தை வெளிப் படுத்தியது நியாயமானது. ஆனால், வன்முறையில் ஈடுபடுவதால் எந்த பயனும் ஏற்படாது. உங்களைப் போலவே 3 மகள்களைப் பெற்றுள்ள என்னையும் இந்த விவகாரம் பாதித்துள்ளது. பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்தினருக்கு என் சார்பாகவும், என் குடும்பத்தார் சார்பாகவும் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறேன் -என்றார்.

டில்லியில் கடந்த 16 ஆம் திகதி பஸ் ஒன்றில் மருத்துவக் கல்லூரி மாணவி ஒருவரை 4 பேர்கொண்ட குழுவொன்று பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியது. இதனையடுத்து நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. (வ)

---

### உத்தரப்பிரதேசத்தில் வாட்டும் குளிர் 10 பேர் சாவு

உத்தரப்பிரதேசத்தில் நிலவி வரும்கடும் குளிரால் இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளனர். உத்தரப்பிரதேச மாநிலத்தின் பலபகுதிகளில், கடந்த மூன்று தினங்களாக கடும் குளிர் வாட்டுகிறது. குளிரினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்று முன்தினம் திங்கட்கிழமை 10 பேராக அதிகரித்துள்ளது.

பாஹ்ரெய்ச் மாவட்டத்தில் 2 பேரும், கோண்டா, கன்னோஜ், ஃபருக்காபாத் ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவரும் நேற்று முன்தினம் உயிரிழந்தனர்.

---

## கர்நாடக துணைமுதல்வர் வீட்டில் சிக்கிய ஒரு கிலோ தங்கம், வெள்ளி

கர்நாடக மாநில துணை முதல்வரும் மாநில பா.ஜ.க. தலைவருமான ஈஸ்வரப்பாவின் சொந்தமான இடங்களில் லோகாயுக்தா பொலிஸார் அதிரடி சோதனைகளை நடத்தி தங்கம், வெள்ளி போன்றவற்றை பறிமுதல் செய்துள்ளனர்.

சொத்துக் குவிப்பு குற்றம் சாட்டி சட்டத்தரணி ஒருவர் லோகாயுக்தாவிடம் முறையிட்டதை அடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்தநிலையில் பெங்களூரிலும் ஷிமோ வாவிலும் ஈஸ்வரப்பாவுக்குச் சொந்தமான ஏழு இடங்களில் லோகாயுக்தா பொலிஸார் அதிரடிச் சோதனைகளை நடத்தினர்.

ஒரு கிலோவுக்கும் அதிகமான தங்கமும், சுமார் 37 கிலோ வெள்ளியும் பறி முதல் செய்யப்பட்டுள்ளன. விலை மதிப்புமிக்க பொருள்கள் கிடைக்கப்பெற்ற ஆதாரத்தை காட்டும் ஆவணங்கள் உள்ளனவா என்பதை ஆராய்ந்துவருவதாக லோகாயுக்தா பொலிஸார் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்கல்லை நகர்த்த நாஸா திட்டம்

லண்டன், டிசெ.26

விண்வெளியில் உள்ள 5 இலட்சம் கிலோ எடையுள்ள விண்கல்லை சிறிது நகர்த்தி அமைக்க அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான ''நாசா'' திட்டமிட்டுள்ளது.

இந்த முயற்சி வெற்றி பெற்றால் விண்வெளியில் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் முதல் மாற்றம் இதுவாக இருக்கும்.

செவ்வாய்க் கிரகத்துக்குப் பயணம் செல்லும் விண்வெளி வீரர்கள், விண்கலத்தில் எரிபொருள்களை நிரப்புவது போன்ற பணிகளை மேற்கொள்ளும் விண்வெளி மையமாகவும் இதனைப் பயன்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. பூமிக்கும் நிலவுக்கும் நடுவே இந்தப் பிரமாண்டமான விண்கல் அமைந்துள்ளது.

அட்லஸ் வி ரொக்கெட் மூலம் அந்த விண்கல்லைச் சுற்றி உறை அமைக்கப்பட்டு அது இயல்பான இடத்தில் இருந்து சிறிது நகர்த்தப்படும்.

விண்வெளியில் உள்ள இதுபோன்ற பிரமாண்டமான விண்கற்கள், குறுங்கோள்களை நகர்த்தும் முயற்சி வெற்றியடைந்தால், அங்குள்ள உலோகங்கள், தாதுப் பொருள்கள் உள்ளிட்டவற்றை பூமிக்கு எடுத்து வரும் வாய்ப்பு ஏற்படும் என்று நம்பப்படுகிறது.

எனினும் இந்த தொழில்நுட்பம் முழுமையாக வெற்றியடைய 10 முதல் 12 ஆண்டுகள் வரை ஆகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குளத்தில் பாய்ந்தது பாடசாலை வான்

## 11 குழந்தைகள் பரிதாபமாகச் சாவு



பீஜிங், டிசெ.26

சீனாவில் குழந்தைகளை ஏற்றிச் சென்ற பாடசாலை வான் கட்டுப்பாட்டை இழந்து குளத்துக்குள் பாய்ந்தது. இதில் 11 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்தனர். அவர்கள் அனைவரும் 4 முதல் 6 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜியாங்சி மாகாணத்தில் கிக்ஸி நகருக்கு அருகே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. பாடசாலைக்குக் குழந்தைகளை ஏற்றிச் சென்ற வான் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் வான் வீதியின் அருகே இருந்த குளத்தினுள் பாய்ந்தது.

4 குழந்தைகள், ஓர் ஆசிரியர் மற்றும் ஓட்டுநர் மட்டுமே பலத்த காயங்களுடன் உயிர் தப்பினர்.

குழந்தைகளை ஏற்றிச் சென்ற வானில் 7 பேர் மட்டுமே செல்ல முடியும். ஆனால் அதைவிட அதிகமானவர்கள் பயணித்தமையே இந்த மோசமான விபத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

## நிலக்கரிச் சுரங்க வெடி விபத்து பாகிஸ்தானில் 7 பேர் உயிரிழப்பு

இஸ்லாமாபாத்,டிசெ.26


பாகிஸ்தானில் நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானில் பழங்குடியின மக்கள் அதிகமாக வாழும் ஓராக்சாய் ஏஜென்சி பகுதியில் டோலி என்ற இடத்தில் நிலக்கரி சுரங்கம் உள்ளது.

இந்தச் சுரங்கத்தில் திங்கட்கிழமை நிகழ்ந்த வெடி விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர். சுரங்கத்துக்குள் அதிகளவில் எரிவாயு கசிந்ததால் இந்த வெடி விபத்து ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


விபத்து ஏற்பட்டதும் அந்தப் பகுதியில் இருந்தவர்கள் விரைந்து செயல்பட்டு காயமடைந்தவர்களை அவசர, அவசரமாக சுரங்கத்தில் இருந்து மீட்டனர்.

இதனால் உயிரிழப்புகள் குறைந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.




பாலன் இயேசு பிறந்த பெத்லகேம் நகரில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

## சீற்றம் கொண்டுள்ள கேஸ்பாஹு எரிமலை!



தென் அமெரிக்காவில், சிலி மற்றும் ஆர்ஜென்ரீனா ஆகிய நாடுகளின் எல்லைப்பகுதியில் உள்ள ஆன்டெஸ் மலையில் கேஸ்பாஹு என்ற எரிமலை வெடிக்கக்கூடும் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டுக்குப் பின்பு மூன்று முறைகள் இந்த எரிமலை வெடித்துள்ளது. கடைசியாக 2000ஆவது ஆண்டில் ஜூலை மாதம் முதல் ஒக்ரோபர் வரை கோஸ்பாஹு சீற்றத்தைக் காட்டியிருந்தது. அப்போது அங்கிருந்த மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

## அமெரிக்காவில் தொடர்கிறது சூடு!

### தீயணைப்பு வீரர் இருவர் சாவு



நியூயோர்க், டிசெ.26

அமெரிக்காவில் தீயணைப்பு வீரர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். தொடர்ச்சியாக இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் அதிர்ந்து போயுள்ளனர் அமெரிக்க மக்கள்.

நேற்றுமுன்தினம் நியூயோர்க்கின் வெப்ஸ்டர் பகுதியில் உள்ள இயந்திரம் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றும், அங்குள்ள வாகனங்களும் தீப்பற்றி எரிவதாக தீயணைப் புப்படையினருக்குத் தகவல் கிடைத்தது.

அதையடுத்து விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள், தீயை அணைக்கத் தொடங்கினர். தீயைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த தீயணைப்பு வீரர்களை நோக்கி திடீரென துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதில் இரண்டு தீயணைப்பு வீரர்கள் உயிரிழந்தனர். சில வீரர்கள் காயமடைந்தனர்.

பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர்களே தீ விபத்தை ஏற்படுத்தி உள்ளமை தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் குறித்த விசாரணைகளை பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

அண்மையில் நியூடவுன் தொடக்கப்பள்ளியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் குழந்தைகள் உட்பட 28 பேரும், வணிக வளாகத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 2 பேரும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவை அவதானிக்கின்றோம்

### தென்சீன கடல் விவகாரம் குறித்து சீனா கருத்து

பீஜிங், டிசெ.26

தென் சீனக் கடல் விவகாரத்தில் இந்தியா தலையிட வேண்டும் என்ற வியட்நாமின் கோரிக்கை தொடர்பாக இந்தியாவின் நகர்வுகளை அவதானித்து வருவதாக சீனா தெரிவித்துள்ளது.

சீன வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஹுவா சின்யிங் இது குறித்து மேலும் கூறியதாவது:

''இந்த விடயம் குறித்து இந்தியாவின் நகர்வுகளை அவதானித்து வருகிறோம். தென் சீனக் கடல்பிராந்தியத்தில் அமைதியை நிலைநிறுத்த அனைத்துத் தரப்பினரும் ஒருங்கிணைந்து செயற்படுவார்கள் என நம்புகிறோம். இந்தியாவும், ஆசியான் அமைப்பு நாடுகளும் சீனா வின் முக்கியமான பங்காளிகள். அவர்களின் உறவு, இந்தப் பிராந்திய அமைதி மற்றும் நிலைத்த தன்மைக்கு உதவும் என நம்புகிறோம்'' என்றார்.

ஆசியான் மாநாட்டின் போது தென் சீனக் கடல் தொடர்பான பிரச்சினைகளுக்கு, நடத்தை விதிகளின் அடிப்படையிலும், ஐ.நா. சர்வதேச கடல் விதிகளின் படியும் தீர்வுகாண்பதற்கு இந்தியா உதவ வேண்டும் என்று வியட்நாம் பிரதமர் டான் டுங் இந்தியாவுக்கு அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பெண் அதிகாரியின் தாக்குதலில் அமெ. இராணுவ ஆலோசகர் சாவு

### காபூல் பொலிஸ் தலைமையகத்தில் சம்பவம்

காபூல், டிசெ.26

ஆப்கனில்பெண்பொலிஸ் அதிகாரி மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அமெரிக்க இராணுவ ஆலோசகர் ஒருவர் உயிரிழந்தார்.

காபூலில் உள்ள பொலிஸ் தலைமை அலுவலகத்துக்கு அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த ஆலோசகர் ஒருவர் வந்திருந்தார். அப்போது பெண் பொலிஸ் அதிகாரி திடீரென துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டார். அதில் இராணுவ ஆலோசகர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதனை ஆப்கனிலுள்ள நேட்டோ படை செய்தி தொடர்பாளர் உறுதி செய்துள்ளார். ஆனால் உயிரிழந்த ஆலோசகரின் பெயர் விவரத்தை வெளியிடவில்லை.

இந்தச் சம்பவத்தை அடுத்து குறித்த பெண்ணை கைது செய்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## புதிய அரசியலுரிமை சட்டம் உருவாக்கப்பட வேண்டும்

### தலிபான் தலைவர்கள் கோரிக்கை

பாரிஸ், டிசெ.26

பிரான்ஸில் நடத்தப்பட்ட பேச்சுக்களின்போது தங்களுக்கு புதிய அரசியல் உரிமைச் சட்டம் வேண்டும் என்று தலிபான் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரான்ஸில் தலிபான்களுக்கும், ஆப்கன் அதிகாரிகளுக்கும் இடையே சமாதான பேச்சுக்கள் நடந்தன.

இந்தப் பேச்சுக்களில் தலிபான்களின் மூத்த தலைவர்களான ஷஹாபுதீன் திலா மற்றும் நயீம் வர்தாக்கும் கலந்து கொண்டனர். தற்போதுள்ள ஆப்கனின் அரசியலுரிமைச் சட்டத்தில் தங்களுக்கு எந்தவொரு மதிப்பும் வழங்கப்படவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர். மேலும் இஸ்லாம் என்னும் புதிய சமயம், தேசிய அக்கறை, வரலாற்றுச் சாதனை மற்றும் சமூக நீதி ஆகியவற்றின் அடிப்படையில் புதிதாக சட்டமொன்று உருவாக்கப்பட வேண்டும் என்று தலிபான் தலைவர்கள் கோரினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென் கொரியாவின் சியோல் நகரில், கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களின் போது சமூக நலக்கூடத்தில் உணவு வகைகள் பரிமாறப்பட்டன. அதில் தென் கொரியாவின் முதல் பெண் ஜனாதிபதியாக அண்மையில் தெரிவு செய்யப்பட்ட பார்க் ஜியூன் ஹே பங்கேற்றார்.

# ஸ்வாசிலாந்தில் இனிமேல் குட்டைப் பாவாடைக்குத் தடை

**பாலியல் குற்றங்களைத் தடுக்கவாம்**

ஆபிரிக்க நாடான ஸ்வாசிலாந்தில் பெண்கள் குட்டைப் பாவாடை அணியத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஸ்வாசிலாந்தில் பாலியல் குற்றங்கள் அதிகரித்துள்ளதை அடுத்தே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் குட்டைப் பாவாடை அணிவதால் தான், ஆண்களின் பார்வை அவர்கள் பக்கம் திரும்புகிறது. பாலியல் துஷ்பிரயோகக் குற்றங்கள் அதிகரிக்கின்றன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, குட்டி நாடான ஸ்வாசிலாந்தில் மன்னராட்சியே நடக்கிறது. அங்கு ஒரு வித்தியாசமான வழக்கம் இருக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் அந்த நாட்டின் மன்னர் எம்ஸ்வாட்டி இளம் பெண் ஒருவரைத் திருமணம் செய்து கொள்வாராம். அதற்காக மேலாடை அணியாத கன்னிப் பெண்கள், குட்டைப் பாவாடை மட்டும் அணிந்து கொண்டு மன்னரின் அரண்மனைக்கு அணிவகுத்துச் செல்வார்கள். அதில் தனக்குப் பிடித்த பெண்ணை எம்ஸ்வாட்டி திருமணம் செய்து கொள்வார். இவ்வாறு இதுவரை 13 பெண்களை எம்ஸ்வாட்டி திருமணம் செய்து கொண்டுள்ளார்.

"ஸ்வாசிலாந்தில் பெண்கள் இனி குட்டைப் பாவாடை அணிந்தால் அவர்களுக்கு ஆறு மாதம் சிறை தண்டனை அளிக்கப்படும். ஆனால் மன்னரின் திருமணத்துக்காக நடக்கும் விழாவில் மட்டும் பெண்கள் மேலாடை இல்லாமல் குட்டைப் பாவாடை அணிந்து செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அல் குவைதாவை ஒழிப்பதே இலக்கு

## ஆபிரிக்காவிலும் களமிறங்குகிறது அமெரிக்கா

வோஷிங்டன், டிசெ.26

ஆபிரிக்க நாடுகளில் அல்குவைதாவின் செயற்பாடுகளை ஒடுக்க அமெரிக்கப் படைகள் களமிறக்கப்படவுள்ளன.

ஆபிரிக்க நாடுகளில் அல் குவைதா இயக்கத்தின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன என்று அமெரிக்கா கூறுகிறது.

லிபியா, சூடான், அல்ஜீரியா, நைஜர் போன்ற நாடுகளிலேயே அல்குவைதாவுடன் தொடர்புடைய பயங்கரவாத அமைப்புகளின் செயற்பாடுகள் தீவிரமாக உள்ளன.

அதேநேரம் கென்யா, உகண்டா போன்ற நாடுக ள், சோமாலியாவை மையமாகக் கொண்டு செயற்படும் அல்-சகாப் பயங்கரவாத அமைப்பை எதிர்கொண்டு வருகின்றன.

இந்தநிலையிலேயே ஆபிரிக்க நாடுகளுக்கு படைகளை அனுப்பி பயங்கரவாத அமைப்புகளை ஒடுக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

ஜனவரி மாத முதல் வாரத்தில் அமெரிக்கப் படைகள் ஆபிரிக்க நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிகிறது. 35 நாடுகளுக்கு அமெரிக்கா தனது படைகளைசிறுசிறு குழுக்களாக அனுப்பி வைக்க உள்ளது.

"முதலில் அமெரிக்கப் படைகள் அந்தந்த நாட்டுப் இராணுவத்துக்குப் பயிற்சிகளையும், நுட்பங்களையும் வழங்கும். தேவை ஏற்படும் பட்சத்தில் அமெரிக்கப் படைகள் நேரடியாகக் களத்தில் இறங்கும். அங்கு நடைபெறும் நடவடிக்கை களில் ஆளில்லா விமானங்களும் முக்கிய பங்காற்றும்" என்று ஆபிரிக்காவிலுள்ள அமெரிக்க இராணுவ உயர திகாரி கார்ட்டெர் ஹாம் தெரிவித்தார்.

# பாக். ஆட்சி கவிழ்ப்பு விவகாரம் ஹக்கானிக்கு அழைப்பாணை

இஸ்லாமாபாத், டிசெ.26

ஆட்சிக் கவிழ்ப்பு விவகாரம் தொடர்பான விசாரணைக்கு நேரில் முன்னிலையாகுமாறு முன்னாள் தூதர் ஹுசேன் ஹக்கானிக்கு பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தானில் அமெரிக்கப் படையினரால் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட பிறகு இராணுவப் புரட்சி மூலம் ஆட்சி கவிழ்கப்படும் என்ற அச்சம் தோன்றியது.

அப்போது அமெரிக்காவுக்கு பாகிஸ்தானின் தூதராக இருந்த ஹுசேன் ஹக்கானி, அமெரிக்க இராணுவத் தளபதி மைக் முல்லனுக்கு ஒரு கடிதத்தை அனுப்பினார். அதில், "பாகிஸ்தானில் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியைத் தாங்கள் தலையிட்டுத் தடுக்க வேண்டும்' என்று கோரியிருந்தார்.

அதை பாகிஸ்தானைச் சேர்ந்தவரும், அமெரிக்காவில் வர்த்தகம் செய்பவருமான மன்சூர் இஜாஸ் அம்பலப்படுத்தினார். இது பாகிஸ்தானில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு நீதிக்குழு ஒன்றை பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் அமைத்தது.

இந்தக் குழு தனது விசாரணையை முடித்து, கடந்த ஜூன் மாதம் சமர்ப்பித்த அறிக்கையில், ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி தொடர்பாக அமெரிக்க இராணுவத் தளபதிக்கு கடிதம் எழுதியதற்கு தூதர் ஹுசேன் ஹக்கானியே பொறுப்பு என்று தெரிவித்திருந்தது.

இது தொடர்பான விசாரணைக்கு முன்னிலையாகுமாறு அமெரிக்காவில் இருக்கும் ஹக்கானிக்கு பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் பல முறை அழைப்பாணை அனுப்பியது. ஆனால், தாம் பாகிஸ்தான் திரும்பினால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று கூறி அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாக மறுத்து வருகிறார்.

இந்தநிலையில் விசாரணைக்காக ஜனவரி 28ஆம் திகதிக்குள் நேரில் முன்னிலையாகுமாறு ஹக்கானிக்கு பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் திங்கட்கிழமை மீண்டும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# துப்பாக்கிப் பயன்பாட்டில் கட்டுப்பாடுகள் கூடாது

வோஷிங்டன், டிசெ.26

அமெரிக்காவில் துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதற்கு மீது கட்டுப்பாடுகளை விதிக்கக் கூடாது என்று தேசிய துப்பாக்கி பயன்படுத்து வோர் சங்கம் தெரிவித் துள்ளது.

அமெரிக்காவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்கதையாகி வருகின்றன.


அதையடுத்து, துப்பாக்கி பயன்பாடு மீது கட்டுப்பாடு விதிக்க வேண்டும் என்ற கோரிக்கை அங்கு வலுத்துள்ளது. இந்தநிலையிலேயே துப்பாக்கிகள் பயன்பாடு மீது கட்டுப்பாடுகளை விதிக்கக் கூடாது என்று அமெரிக்க தேசிய துப்பாக்கி பயன்படுத்துவோர் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.


# எட்டாம் ஆண்டில் மீளாத்துயருடன்

செல்வி

**தனுசியா கொன்சன்ரைன்**

(முன்னாள் மூன்றாம் அணி உள்ளகப் பயிற்சி ஆசிரியை, யாழ்ப்பாண தேசியக் கல்வியியற் கல்லூரி, யா/சிவப்பிரகாச வித்தியாசாலை, தும்பளை)



எம்முடன் 08.01.1980

இறைவனுடன் 26.12.2004

இதயங்களில் ஆறாத தீயை வைத்து
இகமதை விட்டு நீங்கி எட்டுவருடங்கள்
எண்ண முடிய வில்லையம்மா நேற்றுப்போல
ஏக்கமுடன் ஏதிலராய் எண்ணிக் கலங்குகின்றோம்.

உனக்காக உருவந்தந்தவர்கள் உருக்குலைந்து
ஊமையராய் உன் நினைவில் வாழ்கின்றனர்
இளமையில் முடிவெழுதி இதயங்களை இருட்டாக்கி
இன்னலுடன் வாழ இறைவனும் விட்டுவிட்டான்.

சின்னக்கா!
உன் பேச்சு, சிரிப்பு அசைவை எல்லாம்
மறக்கத்தான் முடியுமோ மண்ணுள்ளவரை
மாறாத சோகமுடன் மனமுருகிப் புலம்புகின்றோம்
மணமேடை கண்டு மனம் நிறைந்து வாழ்வாயெனக்

கண்டிருந்த கனவுகளைக் காலன் காலத்துவிட்டான்
கண்ணீர் துடைத்திட விரைந்து நீ வாராயோ...?

"லஷ்மி வாசா"
மாரக்காய்,
புலோலி தெற்கு, புலோலி.

(அ/5057) (45.6)

மனத்துயருடன்
குடும்பத்தினர்.



# 8 ஆம் ஆண்டில் மீளாத் துயருடன்



எம்முடன் 05.01.1924

இறைவனுடன் 26.12.2004

அமரர்
**கந்தப்பு கிருஷ்ணபிள்ளை**
(விசகடி வைத்தியர்)

பாசத்தின் திருவுருவே
பண்பின் உறைவிடமே
பார்போற்ற எம்மை ஆளாக்கி விட்டு
பாதியிலே வேலை முடிந்ததென
பரிதவிக்க விட்டு
பாங்குடனே பரமனடி சென்றனையோ

'இலக்குமி வாசா'
மாரக்காய்
புலோலி தெற்கு, புலோலி.

(அ/5058) (5.6)

குடும்பத்தினர்.



ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நம

# நெஞ்சைவிட்டகலா நினைவலைகள்



அன்னை மடியில் 10 - 07 - 1950

ஆண்டவன் அரவணைப்பில் 03 - 07 - 2006

அமரர் **சின்னத்தம்பி இராசேந்திரன்**



அன்னை மடியில் முத்தாக 20 - 07 - 1983

சுனாமி அழிவின் விதையாக 26 - 12 - 2004

அமரர் **இராசேந்திரன் நிசாந்தன்**

காலத்தை வென்ற காவிய நாயகரே. வானத்து நிலவு தேய்ந்து போகலாம்
உலகம் சுழல்வது நின்று போகலாம் கடல்நீரும் கூட கரைந்தோடிப் போகலாம்
ஆனால் இவ் உலகில் நாம் வாழும் வரை உம் நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

[illegible] பவனம்
காளி கோயிலடி, மல்லாகம்.

(27155) (5.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலவீனம், பலவீனம் அல்ல!

(7)

அனுபவத்திலிருந்து அவர் சொல்லியுள்ள விஷயம் என்பதால் அதை நாம் அலட்சியப்படுத்த முடியாது. நம்மைப் பொறுத்த வரையில் ஒன்றினைச் செய்ய வேண்டுமென்று முடிவெடுத்து அதைச் செய்வதற்கு நாம் கடுமையாக உழைக்கின்ற போது அதற்குத் தேவையான சக்தி நமக்கு கிடைக்குமென்பதை நாம் நம்ப வேண்டும்.

இந்த சக்தி எந்த வயதிலும் கிடைக்கும். அறுபது வயதுக்கு மேல்தான் நேரு கடுமையாக உழைத்தார். எழுபது வயதுக்கு மேல் கலிலியோ இரவு பகல் சோதனைகளை நடத்தினார். இறக்கும் வரையில் தோமஸ் அல்வா எடிசன் புதிய கண்டுபிடிப்புகளைச் செய்து கொண்டிருந்தார். நாம் அந்த அளவுக்கு உழைக்காவிட்டாலும் நம்முடைய வாழ்க்கை அமைப்புக்களுக்கேற்ப நாம் தேர்ந்தெடுத்துக் கொண்ட துறையில் சாதனைகள் நிகழ்வதற்கு உழைக்கலாம் அல்லவா? பணமில்லாமல் வாழ்க்கை வசதிகளைப் பெற முடியாது என்பது ஒரு யதார்த்தம். பணம் சம்பாதிக்கக் கூட ஏதோ ஒரு தொழிலைச் செய்ய வேண்டும். அதை சிறப்பாகச் செய்ய வேண்டும். வெற்றிகரமாகச் செய்ய வேண்டும். இலாபம் தரத்தக்க விதத்தில் செய்ய வேண்டும்.

அதற்கு தேவையானவை உழைப்பும் நம்பிக்கையும் தான். அலெக்ஸாண்டரிடம் தந்தை சொன்னான். ''மகனே உன்னுடைய திறமைக்கு மாசிடோனியா நாடு மிகச் சிறியது. உலகத்தை வெல்லுகின்ற ஆற்றல் உனக்கு இருக்கிறது''. மகனிடம் தந்தை வைத்திருந்த நம்பிக்கை மட்டுமல்ல மகன் தன்னிடமே வைத்திருந்த நம்பிக்கையும் கூட வெளிப்படுத்துகிறது. இந்த நம்பிக்கைதான் அலெக்ஸாண்டரை செயற்பட வைத்தது. மார்க்கோனி இளம் வயதிலேயே ஒன்றைத் தெளிவாக உணர்கிறார்.

மின் அலைகள் பற்றிய கண்டுபிடிப்பு, அவருக்கு முன்னால் இருந்தவர்கள் செய்த கண்டுபிடிப்பு மக்கள் தொடர்புக்கு பெரிய சாதனமாக விளங்கப் போகிறது என்று மார்கோனி நம்புகிறார். அந்த நம்பிக்கையுடன் செயற்படுகிறார். சாதனைகள் உருவாகின்றன.

ஷேக்ஸ்பியர் நாடகங்களின் செல்வாக்கு குறையப் போகிறது. ஏனெனில் நான் நாடகங்களை எழுதப் போகிறேன் என்று பெர்னாட்ஷா கூறுகிறார். நம்பிக்கையில் விளைந்த கூற்று அது. காலப்போக்கில் புகழ்பெற்ற நாடக ஆசிரியராக அவர் உருவாகிறார். நம்பிக்கையுடன் உழைப்பு இணையும் போது சாதனைகள் பிறக்கின்றன.

சாதனைகளை அளந்து பார்ப்பதற்குப் பொதுவான அளவுகோல்கள் எதுவும் இல்லை. ஒவ்வொரு வரும் தங்கள் வாழ்க்கையில் என்ன செய்ய வேண்டுமென்று திட்டமிட்டு அதை முடித்தால் அவர்களைப் பொறுத்தவரையில் அதுவே ஒருசாதனை தான் உலக வரலாற்றில் பல்வேறு சாதனைகள் பல துறைகளில் நிகழ்ந்திருக்கின்றன. உலகத்தில் வாழ்கின்ற மக்கள் அனைவருமே வரலாற்றில் இடம்பெறத்தக்க சாதனைகள் புரிய வேண்டுமென்று எதிர்பார்க்கவும் முடியாது. அதே சமயம் மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்க்கையைப் பயனுடையதாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென விரும்புவது அவசியமானதாகும்.

சாதனை எந்த அளவில் நிகழ்ந்தாலும் அது நிகழ்வதற்கு முயற்சிகள் தேவைப்படுகின்றன. உழைப்பும் நம்பிக்கையும், அவசியமானதாக இருக்கின்றன. சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாறுகள் சில நிலையான உண்மைகளை நமக்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன. அவர்களைப் போலவே செயற்படுகின்ற சூழ்நிலை நமக்கு அமையாமல் போயினும் அவர்கள் வெற்றி பெறுவதற்கு கடைப்பிடித்த கொள்கைகளையும் நடைமுறைகளையும் நாமும் வாழ்க்கையில் கடைப்பிடித்து நம்முடைய அளவில் சாத்தியமான சாதனைகளைக் கட்டாயம் நிகழ்த்த முடியும்.

மனிதர்களின் கதைகள் தான் வரலாறு என்கிற தொகுப்பாக உருவாகிறது. நாகரிகம் என்று சொல்லப்படுவது மனித முயற்சிகளின் விளைவு தான். ஆகவே புகழ்பெற்ற பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகளை சுவைக்காக மட்டும் நாம் படிக்காமல் நம்முடைய வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கு அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதே விவேகமான செயலாக இருக்கும்.

**இவர்கள் உணர்ந்ததும், உணர்த்தியதும்**

வெற்றி பெற்ற மனிதர்களின் வெற்றிக்கான காரணங்களை நான் ஆராய்ந்து பார்த்திருக்கிறேன். ஒரு விஷயத்தை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். வெற்றி பெற்றவர்கள், சாதனைகள் படைத்தவர்கள் அனைவருமே நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் தாம். ஆனால், இவர்கள் தாங்கள் பெற்ற வெற்றிகளாலும், படைத்த சாதனைகளாலும் மற்றவர்களிடமிருந்து தங்களை உயர்த்திக் கொண்டவர்களாக இருந்திருக்கின்றார்கள். இது இவர்களுக்கு எப்படிச் சாத்தியமாயிற்று?

சில தலைவர்களுடனும், பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களுடனும் நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பு எனக்கு இருந்திருந்தது. சில தலைவர்களுடன் சுற்றுப்பயணம் செய்து அவர்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகளிலும், பொதுக் கூட்டங்களிலும் நான் கலந்து கொண்டிருக்கிறேன்.

இந்தத் தலைவர்கள் கூட்டங்களுக்குச் செல்லுகின்ற பொழுது அவர்களைப் பார்ப்பதற்கு, அவர்கள் பேசுவதைக் கேட்பதற்கு பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரள்கிறார்களே, அது எதனால் என்று நான் யோசித்து உள்ளேன். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கேட்பதற்கு வருகின்றவர்கள் மட்டும் அந்தக் கூட்டத்தில் இருப்பதாக நான் நினைக்கவில்லை. அவர்களைப் பார்க்கவும் கூட பெரும்பாலான மக்கள் வருவதை என்னால் உணரமுடிகிறது.

இப்படி மக்களைக் கவர்கின்ற சக்தி இவர்களுக்கு எங்கிருந்து வந்தது, மக்களுக்காக இவர்கள் பாடுபடுகிறார்கள், அதனால் பெருங்கூட்டமாக மக்கள் இவர்களை வந்து பார்க்கிறார்கள் என்று வேண்டுமானால் விளக்கம் சொல்லலாம். அது மட்டும் முழுமையான விளக்கம் என்று எனக்குத் தோன்றவில்லை.

பி.சி.கணேசன் (தொடரும்)

# மாணவரிடையே ஆன்மிகத்தை வளர்க்க ஆசிரிய சமூகத்தினர் முன்வர வேண்டும்

## ஆலய சொற்பொழிவில் பிரதம குரு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.26

ஆன்மிக உணர்வுகளையும், ஆன்மிக கல்விகளையும் மாணவரிடையே வளர்க்க ஆசிரிய சமூகமும் பெற்றோரும் முனைப்புடன் செயற்பட வேண்டும்.

விஞ்ஞானம், தமிழ், கணிதம், ஆங்கிலம் என்ற பாடங்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ அதே போல சமயப் பாட நெறிகளுக்கும் அதி முக்கியத்துவம் கொடுத்து நல்ல சிந்தனைகளை வளர்க்க முற்பட வேண்டும்.

நவாலி வடக்கு பெத்தனாச்சியம்மன் ஆலய உரிமையாளரும் ஆலய பிரதம குருவுமான சிவஸ்ரீ இளையதம்பி சபாரத்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

கட்டுடை முத்துமாரியம்மன் ஆலயத்தின் தலைவர் தலைமையில் ஆன்மிக சொற்பொழிவு இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட நவாலி வடக்கு பெத்தனாச்சியம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இ.சபாரத்தினம் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

இன்று ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் வேறு இடங்களிலும் நற்சிந்தனை சொல்லப்படுகின்றது.

ஆனால் இந்தச் சிந்தனைகள் முற்கூட்டியே தயாரிக்கப்படாது எழுந்தமானத்தில் கூறப்படுகின்றது.

இதிலும் நற்சிந்தனை கூறும் போது மாணவர்களை இன்றைய நவீன காலத்துக்கு உட்புகுத்தக் கூடிய வகையில் ஆன்மிக உணர்வுகளைத் தட்டியெழுப்பி ஒழுக்க சீலர்களாக, உண்மையானவர்களாக, தலைமைப் பண்புள்ளவர்களாக, சிறந்த கண்டுபிடிப்பாளர்களாக வரக்கூடிய எண்ணங்களை பிரதிபலிக்கக் கூடிய ஆற்றலை வெளிக்கொணரக் கூடியதாக அறிவுரைகள் அமைய வேண்டும் - என்றார். (ம-41)



மக்கள் வங்கியால் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சிசு உதான சீட்டிழுப்பில், சைக்கிளை பரிசாகப் பெற்ற சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய மாணவன் கு.நிசாந்திடம் மக்கள் வங்கி சங்கானைக் கிளை முகாமையாளர் அதனைக் கையளிக்கின்றார். (எ-29)

# சமய பாடப் பரீட்சை வெற்றியாளர்கள்

காரைநகர்,டிசெ.26

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தால் காரைநகர் பெரியார்கள் ஞாபகார்த்தமாகஅப்பகுதியில் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கு இடையே சைவசமய பாடப் பரீட்சை ஒன்று நடத்தப்பட்டது.

இந்தப் பரீட்சையில் முதல் ஐந்து இடங்களைப் பெற்று மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்தப் போட்டிகளில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற பரிசில் பெறுவோரின் விவரம் வருமாறு:-

தரம் 6- அ.பிரணவரூபன் - கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, யோ.சுஜீபன், ச.லக்சன் - இருவரும் யாழ்ற்ரன் கல்லூரி, ஏ.கோபிநாத், கி.சர்மிளா - இருவரும் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.

தரம் 7- செ.கீர்த்தனா, த.சங்கவி, யோ.கோபிகா, ஹீ.சிவப்பிரியா, ச.ஜானகி, ஜெ.சரணியா - ஆறு பேரும் யாழ்ற்ரன் கல்லூரி, க.கமலரூபன் - கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.

தரம் 8- சு.கவினா - சுந்தரமூர்த்திநாயனார் வித்தி., பா.குலமதி, கி.பிரியா - இருவரும் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி., இ.பத்மலோஜன், சோ.நிறோஜினி, மோ.கிர்சிகா -மூவரும் யாழ்ற்ரன் கல்லூரி.

தரம் 9 - ம.நவநிலா, செ.கமலேஸ்வரி, பா.கவிதா, த.திருமகள், மோ.துர்சிகா - ஐவரும் யாழ்ற்ரன் கல்லூரி, சி.விதுஷா - கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.

தரம் 10 - ம.சிவகௌரி, த.ஆரணி, சு.மனோகரி, யோ.கருணிதா, ஆ.காயத்திரி - ஐவரும் யாழ்ற்ரன் கல்லூரி.

தரம் 11 - க.சாந்தினி - கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி., அ.சசிகலா -யாழ்ற்ரன் கல்லூரி, த.பார்த்திகா - சுந்தரமூர்த்திநாயனார் வித்தி., க.யசோதா, சி.சிவதர்சினி, அ.திவ்யா - மூவரும் யாழ்ற்ரன் கல்லூரி. (ம-250)

# புலம்பெயர்வு ஆரம்பமான கையோடு கூட்டுக்குடும்ப வாழ்வும் குலைந்தது

## கலாசாரமும் பாதிப்பு என்கிறார் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம்,டிசெ.26

எமது மக்கள் எப்பொழுது புலம்பெயரத் தொடங்கினார்களோ அன்றிலிருந்தே கூட்டுக் குடும்ப வாழ்வு குலைந்து தனிக்குடும்ப வாழ்வுக்குத் தள்ளப்பட்டு விட்டனர்.

அது மட்டுமன்றி எமது மக்கள், எமது கலாசாரத்தில் இருந்து விலகிச் செல்வதையும் காண முடிகிறது. இது தவிர்க்கப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இவ்வாறு தெரிவித்தார்.

உதயன் பரிசுக் கொண்டாட்ட நிகழ்வில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு உதயன் கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது மக்கள் கூட்டுக் குடும்பமாகவே வாழ்ந்தனர். அவர்கள் எப்பொழுது புலம் பெயர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு வெளிநாடுகளுக்குச் செல்லத் தொடங்கினரோ அன்றிலிருந்து கூட்டுக் குடும்ப வாழ்வு குலைந்து தனிக் குடும்ப வாழ்க்கை முறைக்குத் தள்ளப்பட்டு விட்டனர். இது எமது கலாசாரத்தையும் பாதித்துள்ளது.

எமது பண்பாடு தனித்துவமானது. ஆனால் அதுவும் தற்போது எமது மக்களிடம் இருந்து விலகிச் செல்வதைக் காணமுடிகிறது. அது தவிர்க்கப்பட வேண்டும். தென்னிந்தியாவில் பண்பாட்டைப் பேணுவது சிறப்பாக இருந்து வருகிறது. இலங்கையில் தான் அது அருகிச் செல்கிறது.

நாம் சுயநல அடிப்படையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எமது சிந்தனையும் அவ்வாறே உள்ளது. வெளிநாட்டு உதவிகளை [illegible] எமது [illegible]டுக்க வேண்டும்.-என்றார். (ம-4)



ஈழத்துச் சிதம்பரம் திருவெம்பாவை
எட்டாம் திருவிழா
"மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடை திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவறியான்
கோலமும் நம்மை ஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்"

தரமான புதிய டிசைன்களில் ஆடைகளைக் கொள்வனவு செய்ய நாடவேண்டிய இடம்
சிவகணேசன் ரெக்ஸ்ரைல்
இல.41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நாளின் நினைவில்....

வழமைக்கு மாறாக வீதி பரபரத்துக் கொண்டிருந்தது. வாகன போக்குவரத்தும் அம்புலன்ஸ் வண்டிகளின் அலறல் சத்தமும் நிகழக்கூடாத ஏதோ ஒன்று நிகழ்ந்துவிட்டதாய் கூறியது. போர்க் காலங்களில் கூட இத்தனை பரபரப்பு இருந்ததில்லை. எறிகணைகளோ அல்லது விமானங்களோ உருண்டு வந்ததாய் தெரியவில்லை. ஆனால் செம்மண் வீதியும் வாகன ஓட்டமும் கனதியான செய்தியை சொல்லின.

அழகான ஒரு மழைநாள் இப்படி ஆகிப் போனது எப்படி என்று யாருக்கும் தெரியவில்லை. வீதியில் போகின்ற வாகனங்களை விட மோட்டார் சைக்கிள்களும் அதிகமாய் பறந்தடிக்கின்றன. பின்னால் இருக்கைகளில் கையற்ற, காலற்ற, உடல் முழுதும் காயமான, இரத்தம் சிந்துகின்ற உடல்கள், ஆடை கலைந்துபோன நிலையிலும் கிழிந்துபோன நிலையிலும் இரத்தம் சொட்டுகின்ற உடல்கள், தன் சகோதரியை, தன் அண்ணனை, தன் தாயை காப்பாற்ற வேண்டுமே என்ற தவிப்பு மட்டுமே. யார் யாரைக் காப்பாற்றுவது? தாங்கள் தாங்களே தமது குடும்பத்தைப் பார்க்க வேண்டிய நிலை. இரத்தம் சிந்தும் உடல்கள் வீதிக்கு வர வரத்தான் விடயம் மெல்ல மெல்ல ஊர்களுக்கு கசிகிறது.

கடல் உள்ளுக்கை வந்திட்டுதாம். கனபேர் சாவெண்டிட்டினமாம், பலபேரைக் காணேல்லையாம்... பல பேருக்கு காயமாம். யாராலும் நம்ப முடியாத ஒன்று. கடல் எப்படி ஊருக்குள் வரும். சிந்திக்கவோ நியாயப்படுத்தவோ நேரமில்லாத சூழ்நிலை. மீட்புப் பணிக்காக மீட்பர்கள் களம் இறங்கினர். சமூக ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள், பாடசாலை மாணவர்கள் உடனடியாகவே விரைகின்றனர்.

கடற்கரையோர பிரதேசமெங்கும் பிணங்களே மிதந்து கொண்டிருந்தன. உயிரற்ற உடலையோ உயிர்த்துடிப்புள்ள உடலையோ பிரித்துப் பார்ப்பது மிகக் கஷ்டமாக இருந்தது. பனை வடலிகளுக்குள் செருகிக் கிடந்த பிஞ்சுக் குழந்தைகளும் கட்டடங்களின் அடியில் சிக்கியிருந்த பெண் உடல்களும் வெளியே எடுக்க முடியாதபடி இறுகியிருந்தன. நம்பி வந்த கடல் எங்களை அதிகளவில் வஞ்சித்துவிட்டது.

இலங்கையின் பல பாகங்களும் பாதிக்கப்பட்டிருந்தாலும் வடக்கு, கிழக்கு பகுதிகள் அதிகம் அலங்கோலப்பட்டுப் போயிருந்தன. வடக்கில் வடமராட்சி தொடங்கி முல்லைத்தீவு வரையான பிரதேசங்கள் அதிக அளவு சிதைந்து போயிருந்தன. முன்னர் எப்போதும் வழங்கப்படாத விழிப்புணர்வு நடவடிக்கைகள், தரைமேற்பரப்பு பற்றிய சரியான உயர அளவீடுகளை அறிந்து கொள்ளாமை மற்றும் புவியியல் ரீதியான அமைவிடம் போன்றவற்றை இதற்கான காரணங்களாக சொல்லலாம்.

26.12.2004 கிறிஸ்மஸ் முடிந்து அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை. கிறிஸ்தவர்களின் விசேட பூசை நாள். மனதில் சந்தோஷம் அலைபாய பூசையை காண தயாராகினார்கள். ஆனால் கடலோ அவர்களைக் காண தயாராகியது. சுமத்திராவில் எங்கோ ஏற்பட்ட நிலநடுக்கம் இங்கே உள்ள தமிழர்களை தின்றுதீர்த்தது. கடல் தந்த சமநீதி ஒன்றுதான். குழந்தை, பெரியவர், பெண்கள், தாய்கள் யாரையும் அது கவனத்திற்கொள்ளவில்லை. முல்லைத்தீவின் கரையோரமாக இருந்த ஒரு சிறுவர் இல்லம் - தளிர்கள் சிறுவர் இல்லம் - பாய்ந்து வந்த கடல் அவர்களையும் அள்ளிக் கொண்டு போனது.

இன்று எல்லாம் நடந்து முடிந்து ஆண்டுகள் 8 ஓடி மறைந்துவிட்டது. மக்கள் இயற்கை தந்த சுனாமியை விட போர்ச் சுனாமிக்கும் முகம் கொடுத்து வீழ்ந்து, மீண்டும் எழத் தொடங்கி இருக்கிறார்கள்.

கடல்தாயே... கவனம் உன் அடி வாழும் உன் குழந்தைகளைக் காப்பாற்று.

உயிரோடை

“ 26.12.2004 கிறிஸ்மஸ் முடிந்து அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை. கிறிஸ்தவர்களின் விசேட பூசை நாள். மனதில் சந்தோஷம் அலைபாய பூசையை காண தயாராகினார்கள். ஆனால் கடலோ அவர்களைக் காண தயாராகியது. சுமத்திராவில் எங்கோ ஏற்பட்ட நிலநடுக்கம் இங்கே உள்ள தமிழர்களை தின்றுதீர்த்தது. கடல் தந்த சமநீதி ஒன்றுதான். குழந்தை, பெரியவர், பெண்கள், தாய்கள் யாரையும் அது கவனத்திற் கொள்ளவில்லை.



# பேரனர்த்த நகரத்தின் கேள்வி



கடந்த நூற்றாண்டு வரைக்கும் முல்லைத்தீவு ஒரு பழைய நகரம். அந்த நகரத்தின் கடற்கரையை மாறி மாறி கைப்பற்றிக் கொண்ட வெள்ளைக்காரர்கள் அதனை அப்படித்தான் பதிவாக்கியிருக்கின்றனர். பாக்கர், ஜே.பி.லூயிஸ் போன்ற நகரும் ஆவணப் பதிவாளர்கள் அதனையே முல்லைத்தீவு பற்றியதாகக் குறிப்புகளிட்டுச் சென்றிருக்கின்றனர். பாக்குத் துறைகளும், கோட்டைகளும், பழைய தேவாலயமும், பழைய வீதியும், பாலமும் இன்னமும் ஆதாரங்களாக மூடுண்டு கிடக்கின்றன. பழைய வரலாற்றை விட இந்த நகரத்திற்கும் இடையறாத துயரக் கோடுகளாலான நினைவுத் தொடர்ச்சியொன்று உண்டு. வெள்ளைக்காரர்கள் போல நினைவுபடுத்தி வைத்துக் கொள்ள அந்த நகரம் இப்போது எதையும் வைத்திருக்கவில்லை. எஞ்சி நிற்கும் ஒவ்வொரு பேரவல நினைவையும் அழித்துக் கொண்டே மீளெழுகின்றது. எதை அடைவு வைத்தாவது மேலெழுந்து வரும் முல்லைத்தீவாளர்களின் எச்சத்திலும் எழும் பண்பு அந்த நகரத்தை அடிக்கடி அலங்காரப்படுத்திக் கொள்ள வைக்கின்றது.



ஜெரா

### மூவாயிரம் பெயரோடு நிமிர்ந்திருக்கும் ஆலயம்

ஆனால் எந்த அலங்காரத்துக்குள்ளும் அவ்வளவு இலகுவில் எடுபடாத ஒரு ஆலயம் முல்லைத்தீவு நகரத்தில் இன்னமும் நிலைத்திருக்கின்றது. பெரும் போர் சூறை முல்லைத்தீவை அடியோடு புரட்டிய போதிலும் ஆலயத்துக்கு விக்கினங்கள் நேரவில்லை. சின்னச் சின்ன காயங்களோடு, கறைபடிந்த பேரனர்த்த நிழலோடு அது நிமிர்ந்திருக்கின்றது. முல்லைத்தீவை கசக்கிக் காயப்போட்ட கடல் பேரவலத்தில் காவுகொள்ளப்பட்டவர்களுகாக உருவானதே அந்த ஆலயம். இன்றும் பேரனர்த்த வாசனையோடும், சில நிமிட நேரங்களில் கடலால் அள்ளிச் செல்லப்பட்ட மூவாயிரம் உயிர்களின் பெயரோடும் பெருமண்டபம் இப்போதும் நிறைந்திருக்கின்றது.

### மரியாதையிழந்த கடலின் காலை

2004 ஆம் ஆண்டு இன்றைய நாள் காலை 8 மணியைத் தொட்டது. போரின் மறைவிலிருந்து எழுச்சி பெற்ற அந்த நகரவாசிகளுக்கு மீளெழுச்சி பெரும் சவாலாகவோ, வேதனைக்குரிய ஒன்றாகவோ இருக்கவில்லை. யாருடைய உதவியும் இன்றி பிரகாசமடைந்திருந்தனர். அந்த வாழ்வுப் பிரகாசத்துக்கு அமைதியாகவே கிடந்த ஆழமற்ற கடல் எப்போதும் ஆறுதலாயிருந்து. யாருக்கும் கிடைக்காத கடல் செல்வத்தை அள்ளிக்கொட்டியது முல்லைத்தீவுக் கடல். மக்களும் கடலுக்கு நிகரான மரியாதையோடு கடலை அணுகினர்.

ஆனாலும் இந்தத் தினத்தில் அதற்கும் பெருங்கோபம் வந்தது. நகரவாசிகள் கர்த்தரின் பெருநாளுக்கு தயாராகிய களைப்பில் ஆழ்ந்த உறக்கத்துக்கு சென்றிருந்தனர். மனைவியரினதும், பிள்ளைகளினதும், பெற்றோரினதும் குதூகல உறக்கத்தைக் குழப்ப விரும்பாத ஆண்கள் அதிகாலைப் பொழுதில் கடல்மீதேறியிருந்தனர். 9 மணிக்குள் நிலம் திரும்பி தேவாலய வழிபாட்டுக்கு சென்று விடலாம் என்பது அவர்களின் வழமையான நிகழ்ச்சி நிரல். அதனை இம்முறையும் குழப்பிக்கொள்ளவில்லை.

### பெருந்துயர்ப் பெருநாள்

மணற்பரப்பை வேகமாக சூடேற்றிக் கொண்டு மேலெழுந்த சூரியன், நகரவாசிகளையும் துரிதப்படுத்தியது. கொண்டாட்டங்கள், அலங்காரங்கள் வீடுகளை அலங்காரப்படுத்திக் கொண்டிருந்தன. கடல் வருகுது என்ற அவல வசனங்கள் வீட்டுக்குள் இருந்தவர்களுக்கு வேடிக்கையாக இருந்தது. கடல் எப்படி வரும்? என்ற கேள்விக்கு விடை காணும் முன்பே, பனையளவு உயரத்தில் நகரை மூடியது கருமை அலை. வீட்டில் இருந்த குழந்தைகள், பெண்கள் என அனைவருமே கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டனர். மரங்களிலும், பெருங் கட்டடங்களிலும் மோதியவர்கள் அந்த இடத்திலேயே மரணமடைந்தனர். ஆடைகளைக் கடலிடம் பறிகொடுத்த பெண்கள் தம் உயிர் காப்பாற்றப்படுவது அவமானம் எனக் கருதி மரணத்தை ஏற்றுக் கொண்டார்கள். போரினால் பெற்றோரை இழந்த பிள்ளைகளின் வளர்ப்புப் பூமியாக இருந்த தளிர்கள் சிறுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலி தந்த நாள்...

செந்தன்

வாழ வைத்த தெய்வமே வாழ்க்கையைப் பறித்தது. அள்ளித் தந்த கடலே எல்லாவற்றையும் அள்ளிக் கொண்டு போனது.

உலகையே பெரும் சோகத்தில் ஆழ்த்திய, மிகக் கொடூரமான இந்தச் சம்பவம் இடம்பெற்று இன்றுடன் எட்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் கடற்கரையில் வாழும் மக்களுக்கு இது நேற்று நடந்ததுபோல் இன்றும் எண்ணத் தோன்றும் அளவுக்கு வலிகளை அது விதைத்திருக்கிறது.

2004 ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழுக்கு புதுவரவான சுனாமி என்னும் சொல் வந்தது. அது அள்ளிப் போன உயிர்களோ ஏராளம். கடற்கரை எங்கும் மரண ஓலம். உறவுகளைத் தேடியலையும் உள்ளத்தை உருக்கும் காட்சிகள், குவிந்து காணப்பட்டன. சடலங்களின் நடுவே தமது உறவுகளைத் தேடி அலைந்த பெற்றோர், உறவினர்களின் நிலைமைகள் எட்டு வருடங்கள் கடந்த நிலையிலும் என் கண்முன் இன்றும் நிழலாடுகின்றன.

சுனாமி சாதி, மதம், இனம் என்ற பாகுபாடின்றி அனைவரையும் ஒன்று சேர்ந்து பணியாற்றவும் தூண்டியது.

இதனால் தமிழர் வாழுகின்ற பிரதேசங்களும் தப்பவில்லை. கற்கோவளம், இன்பருட்டி, வெற்றிலைக்கேணி, தாளையடி, கட்டைக்காடு, முல்லைத்தீவு, அம்பாறை, மட்டக்களப்பு உட்பட பல இடங்கள் வெள்ளத்தால் அள்ளுண்டன.

மீன்பிடித் தொழிலின் மூலம் கிடைத்த வருமானங்களை கொண்டு அழகான வீடுகள் அமைத்து அழகிய நகரங்களாகக் காட்சியளித்த கடற்கரைப் பிரதேசம் சோபை இழந்து அலங்கோலமாகக் காட்சி அளித்தது.

நீர் வற்றத் தொடங்கியபோது மணல் மேடுகளிலும் நீர் தேங்கிய இடங்கள் எங்கும் பிணக்காடுகள் ஆயின. இவற்றை தேடுவதிலும், தோண்டுவதிலும் ஈடுபட்ட மக்களின் சோகத்தையும் துயரத்தையும் எழுத்துக்களில் வடிக்க முடியாது.

உயிருக்கு போராடியவர்களை மீட்கும் பணியில் எல்லோரும் களம் இறங்கினர். வைத்தியசாலைகளின் பிணவறைகளில் பிணங்களின் குவியல்கள், அக்குவியல்களின் நாம் கண்ட காட்சி எமது மனதை உருக்கியது. தாய் ஒருத்தி தனது குழந்தைக்கு பாலூட்டியவாறு அணைத்தபடி மரணத்தைத் தழுவியிருந்தாள். இன்னொரு தாயின் இரண்டு கால்களுக்கும் இடையில் பிறந்த சில நாள்களேயான சிசுவின் சடலம் என்று எத்தனை காட்சிகள், எத்தனை காலங்கள் சென்றாலும் இவை எல்லாவற்றையும் யாரால் தான் மறக்க முடியும்.

பலர் உறவுகளைப் பிரிந்து தனித்தனியே சென்றனர். ஏன் கடல் அலைமூலம் அடித்துச் செல்லப்பட்டு தெய்வாதீனமாக உயர் தப்பிய சிறுமி ஒருத்திக்கு இரு பெற்றோர் உரிமை கொண்டாடியதுடன் அது தொடர்பான வழக்குகள் நீதிமன்றம் வரை சென்று உரிய தீர்ப்புக்கள் வழங்கப்பட்டது.

இன்று சுனாமி என்ற செய்தியை அடிக்கடி கேள்விப்பட்டாலும் பெரும் அழிவுகள் ஏற்பட்டதாக அறிய முடிவதில்லை. காரணம் அனுபவம் தந்த படிப்பினை இன்று அதற்குரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைச் செய்யத் தூண்டியுள்ளது. கடற்கரை எங்கும் சுனாமி எச்சரிக்கை கோபுரங்களும் ஒலி எழுப்பிகளும் பொருத்தப்பட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடப்படுகின்றன. இதனால் தற்போது தாக்கம் குறைந்துள்ளது. ஆயினும் வலி தந்த அந்த நாளை மட்டும் உறவுகளால் என்றும் மறக்க முடியவில்லை என்பதே உண்மை.





## ஆழிப்பேரலையால் அழிவுற்றோரின் நினைவுகளுடன் கழிந்தன ஆண்டுகள் எட்டு



இல்லம் இருந்த இடம் தெரியாது பெயர்க்கப்பட்டிருந்தது. அநேகமான குழந்தைகளின் சடலங்கள் கூட இறுதிவரை கிடைக்கவில்லை.

**இறால் குளத்தின் இன்றைய பெயர் பிணக்குளம்**

கண் மூடி திறப்பதற்குள் 3000 உயிர்களைக் கடல் அள்ளிப் போயிருந்தது. 9 மணிக்கு வீடு திரும்பிய ஆண்கள் வைத்தியமாயினர். இருந்த எல்லா வாழ்வுத் தடங்களையும் வெடித்த கடலின் கரு நீர் மூடியிருந்தது. அது வரை இறால் குளம் என அறியப்பட்டிருந்த இடம் இன்று தான் பிணக் குளமாகியிருந்தது. அதிக பிணங்களை பதுக்கி வைத்திருந்த களஞ்சியமாகியது இறால் குளம். காயங்களோடும், கையில் கிடைத்தவற்றோடும் அந்தப் பெருநகரவாசிகள் புதுக்குடியிருப்பு, முள்ளியவளைப் பகுதிகளுக்கு குடிபெயர்ந்தனர். பாடசாலைகள் இடைப்பொழுது ஆதரவை அளித்தன. போர் ஓய்விலிருந்த போராளிகள் தாயாய்த் தாங்கினர். ஒவ்வொருவரினதும் காயத்துக்கு ஒத்தடமாயிருந்தனர். அவலம் தாங்கியவர்களின் அழுகையை நிறுத்துவதற்கு மட்டும் ஒருவாரம் பிடித்தது. இரவு முழுதும் அலைப் பயம் விழித்துக் கொண்டேயிருந்தது.

**எச்சத்தில் எழுந்திருக்கின்றது இந்தக் கேள்வி**

"இனிகடல் ஓக்கே போகமாட்டம்" "நம்பியிருந்த கடல் எங்கள அழிச்சிப் போட்டுது" போன்ற வார்த்தைகள் அப்போது பிரபலமாயிருந்தன. சரியாக ஒரு மாதம் தான் இந்த வார்த்தைகள் செல்லுபடியாகக் கூடியதாயிருந்தன. ஒரு மாதத்துக்குள் கடல் மீதான கோபம் காலாவதியாகியது. 2005 ஆம் ஆண்டு தை மாதம் 26ஆம் திகதி முல்லைத்தீவு நகரத்தில் நடந்தது எச்சத்திலும் எழுகை. அத்தோடு பழையபடி கடலைநோக்கி மக்கள் பயணப்படத் தொடங்கினார்கள். பேரலைக்கு முதல் காலத்தில்

கடலேறிய பலர் இருக்கவில்லைத் தான். ஆனால் அவர்களிடம் இருந்த நம்பிக்கை கடலை வெல்லும் துணிவை வாரியிறைத்துக் கொண்டிருந்தது. ஒரு வருடத்தில் முல்லைத்தீவு மறுபடியும் நகரானது. மீண்டும் செழிப்பு. மீண்டும் வசந்தகாலம்.

ஆனால் நகரவாசிகள் மட்டும் குறைந்திருந்தார்கள். அதுவும் நிலைத்திருக்கவில்லை. அடுத்தது பெரும்போர். இதுவரை சந்தித்திராத வழிகளில் எல்லாம் துயரம் அந்த நகரத்தை தாக்கியது. அந்தக் கடலையண்டிய கிராமத்தில் ஒரு பேரினத்தின் வாழ்விருப்பை பேரழிவாக்கியது அந்தப் போர். முல்லைத்தீவும்வழுணமே பலஅணயாளம் இழந்தது. சீர்குலைந்தது. அந்த நகரத்தின் தன்னியல்பாகிய எச்சத்திலும் எழும் திறன், மறுபடியும் கட்டங்களை மட்டும் வளர்த்துக்கொண்டிருக்கின்றது. நகரவாசிகள் வளர்கின்றார்களா? என்பதற்கான விடையைத் தான் அந்த நகரமும் ஏக்கத்தோடு தேடிக் கொண்டிருக்கின்றது. ஏனெனில் இப்போது எதுவும் சொந்தமானதாக இல்லை. கடல் கூட பலரின் தடங்களை நாள் தோறும் காண்கின்றது. போகப் போக கடலும் மரியாதையிழந்து போவதை உணர்கின்றது.

## சுனாமி சுவடுகள்

இடி விழுந்த செய்தி ஒன்று
கேட்டதுவே
சுனாமி உருவெடுத்து
நின்றதுவே

அள்ளித் தந்த கடலன்னை
கண்ணீர் வாழ்வைத்
தந்தாளே
பிஞ்சுகள் மழலைகள்
அழிந்தனவே
பெண்ணம் பெரிசுகளை
வேரோடு பிடுங்கியதே

யுவதிகள்,
இளைஞர்கள்
மாண்டனரே
கடலின் அநியாய
செயல்களால்
தூர்ந்தனரே

கல்லறைகளே இங்கு
எச்சங்களா? எம்
கண்ணீர்த் துளிகளே
மிச்சங்களோ

மந்திகைகேணியூர்,
வே.வே.அகிலேஸ்வரன்.

## விருட்சங்களே நீங்கள் எங்கே?

கனவுகள் சுமந்த
வாழ்க்கையிலே
நாம் கரைகண்டு
வாழ்ந்திடவே
கனவு கண்டோம்

கரையோரம் அமைந்த
குடிசை வீடுகள்
தென்னஞ்சோலைகள்
மத்தியில் அமைந்த
அழகு கூடுகள்
கடலில் மீன் பிடிப்பது

கரைதனில் நண்டு துரத்துவதும்
எமக்கே சொந்தமாய்
இருந்த காலம்

கடல் பெருக்கெடுத்து
வந்ததனால் - எம்
கண்ணின் மணிகளை
பறித்ததுவே
விழுதிழந்த வேர்களாய்
துயரில் ஆழ்கிறோம்
எம் விருட்சங்களே
நீங்கள் எங்கே...?

வே.தரணிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் செல்வம்

பசுமாடு ஒன்று ஒரு பொருளை உதைக்க வேண்டும் என்றால் தானாகவே போய் உருட்டி உதைக்கும்.

ஒரு ஆளை முட்ட வேண்டும் என்றால் அதுதானாகவே போய் முட்டும்.

இதெல்லாம் கெட்ட காரியங்கள்.

இதையெல்லாம் செய்கின்ற அந்தப் பசுமாடு பால் கொடுக்கிறது, நல்ல காரியம். அதைத் தானாகவே கொடுக்காது. எங்கள் வீட்டுக்கு வந்து எங்கள் செம்பைக் காணவில்லையே என்று தேடி எடுத்து கொல்லைப் பக்கம் கொண்டு சென்று தானாகவே கறந்து கொண்டுவந்து, எங்கள் கையிலே கொடுத்து, பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள், பூனை வந்து குடித்துவிட்டுப் போகின்றது என்று சொல்லிவிட்டுப் போகாது! ஆனால் நல்ல காரியத்தை மனிதன் தானாகவே செய்ய வேண்டும் என்று கூறுவார் திருக்குறளார் வீ.முனுசாமி.

இந்த உலகத்தில் எல்லா செல்வமும் அழிந்துவிடும். ஆனால் கல்விச் செல்வம் அழியாது. என்றதை விளக்கமாகவும் வேடிக்கையாகவும் அவர் சொல்லுவார்.

ஒரு நாள் அவர் வெளியூர் சென்றிருந்தார். அப்போது அவருடைய நண்பர் ஒருவரைப் பார்த்துக் கேட்டார்.

"இருபது இருபத்தைந்து வருடத்துக்கு முதல் இங்கு ஓர் ஆலமரம் இருந்தது அது இப்பொழுது எங்கே என்று கேட்டார்.

"அது புயல் காற்றிலே விழுந்து விட்டது!" என்றார் அவர். இது அழிகின்ற செல்வம்.

"அங்கே ஒரு பெரிய கட்டடம் இருந்தது அது எங்கே ஐயா!" என்று கேட்டார்.

"அது மழை பெய்தபோது இடிந்து விழுந்துவிட்டது" என்று சொன்னார்.

இதுவும் அழிகின்ற செல்வம்.

சிலபேர் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருப்பார்கள்! அழகு என்பது அழிகின்ற செல்வம்.

அழகு சிறிது நாளைக்கு இருக்கும் பின்னர் போய்விடும்! அதனாலேதான் சிலபேர் அவசர அவசரமாக புகைப்படம் எடுத்து வைத்துக்கொள்வார்கள்.

இருக்கின்றதும் போய்விடப்போகின்றது என்ற பயம்.

நாங்கள் சாதாரணமாகப் பேசும்பொழுது கூறுவோம்...

"அதோ போகின்றாரே அவர் பத்து வருடத்துக்கு முதல் இரண்டு இலட்சம் ரூபா வைத்திருந்தார். எல்லாம் செலவாகி விட்டது. இப்போது எங்களிடம் இரண்டு ரூபா இருக்கின்றதா என்று கேட்கிறார்.

இது அழிகின்ற செல்வம். ஆனால் கல்வி அப்படிப்பட்டது இல்லை.

"அதோ போறாரே அவர் பத்து ஆண்டுகளுக்கு முதல் எம்.ஏ.சித்தியடைந்திருக்கின்றார்.

இப்போது எல்லாம் செலவாகி எட்டாம் வகுப்புக்கு வந்துவிட்டார் என்று யாரும் கூறமாட்டோம்.

**"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு**
**மாடல்ல மற்ற யவை"**

என்கிறார் திருவள்ளுவர்.

கல்வி பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க வளரும்.

பணம் கொடுக்கக் கொடுக்கக் குறையும்.

அதனாலேதான் பணத்தை இன்னொருத்தருக்குக் கொடுத்தால் திருப்பிக் கொடு என்று கூறுகின்றோம்.

ஏன் என்றால் அது குறைந்துவிடும்.

ஆனால் கல்வி அவ்வாறு இல்லை.

ஓர் ஆசிரியர் வகுப்பிலே பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

மாணவர்கள் எல்லாம் சித்தியடைந்து அடுத்த வகுப்புக்கு போகிறார்கள்.

அவ்வாறு போகிறவர்களுக்கு ஆசிரியர் வாழ்த்துச் சொல்லி அனுப்புவார்.

"என்னிடம் இருந்த கல்வியை உங்களுக்குக் கொடுத்து விட்டேன். அடுத்தவர்களுக்கு சொல்லிக் கொடுக்க மிகுதி ஒன்றும் இல்லை.

அதனாலே அதையெல்லாம் என்னிடம் திருப்பிக் கொடுத்துவிட்டுப் போங்கள்.!

என்று கேட்கமாட்டார்.

ஏன் என்றால்..

கல்வி என்பது கொடுக்கக் கொடுக்க வளரும்.


என்று விளக்கம் கொடுப்பார் திருவள்ளுவர்.

அதனாலேதான் "கேடில் விழுச்செல்வம் கல்வி" என்றார்.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# முன்பள்ளிக் கல்வியை வழங்கும் புற்றளை சனசமூக நிலையம்



(கடந்தவாரத் தொடர்ச்சி....)

**கர்ணன்**

**நா**ட்டுச் சூழ்நிலை காரணமாக சனசமூக நிலைய நிர்வாகம் தளர்வடைந்தது. எனினும் 2004 ஆம் ஆண்டு பதவி ஏற்ற புதிய நிர்வாக சபை சனசமூக நிலையத்துக்கான கட்டடம் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்ற அவசியத்தையும், அவசரத்தையும் உணர்ந்து கொண்டது. சனசமூக நிலையக் கட்டடத்தை மீள அமைக்கும் முயற்சியைப் புதிய நிர்வாக சபை ஆரம்பித்தது. கட்டடத்தை மீள அமைக்கும் முயற்சியில் அப்போதைய புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் அமரர் க.வேல்முருகு மிகத் தீவிரமாக உழைத்தார்.

பழைய சனசமூக நிலையத்தை உடைத்து புதிதாக கட்டடம் ஒன்றை சனசமூக நிலையத்துக்கென அமைக்கும் வரைச் சனசமூக நிலையத்தை அருகில் உள்ள கட்டடத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

1996 ஆம் ஆண்டு 'யு.என்.எச்.சி.ஆர்.' பாலர் பாடசாலை உள்ளிட்ட பல்வேறு பயன்பாடுகளுக்காக பழைய சனசமூக நிலையத்தின் தென் புறத்தில் பாதுகாப்பான கட்டடம் ஒன்றை நிர்மாணித்துக் கொடுத்திருந்தது. அந்தக் கட்டடத்துக்கு சனசமூக நிலையத்தை மாற்றி பழைய சனசமூக நிலையக் கட்டடம் இடிக்கப்பட்டது. அதில் மாடிக் கட்டடம் கொண்ட ஒரு புதிய சனசமூக நிலையக் கட்டடத்தைக் கட்டுவதற்காக 2004 ஆம் ஆண்டு பங்குனி உத்தரத்தில் அடிக்கல் நடப்பட்டது.

> **பழைய சனசமூக நிலையத்தை உடைத்துப் புதிதாக கட்டடம் ஒன்றை சனசமூக நிலையத்துக்கென அமைக்கும் வரை சனசமூக நிலையத்தை அருகில் உள்ள கட்டடத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.**

புதிய கட்டடத்தைக் கட்டி முடிப்பதற்காக அமரர் வேல்முருகு கடுமையாக உழைத்தார். வெளிநாடுகளில் தொழில் புரியும் புற்றளைக் கிராமத்தைச் சேர்ந்த நலன்விரும்பிகள், தனது உற்றார், உறவினர்களிடம் ஒரு தொகுதி நிதியைச் சேகரித்து அந்த நிதியை வைத்துக் கொண்டு கட்டட நிர்மாணப் பணிகளின் ஆரம்பக் கட்டப் பணிகளை மேற்கொண்டார். இந்தக் கட்டட நிர்மாணப் பணிக்கு லண்டனிலுள்ள புலோலி அபிவிருத்தி மன்றம் ஆரம்பமாக 5 இலட்சம் ரூபாவை வழங்கியது. கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் 33 1/2 இலட்சம் ரூபா கிடைத்தது. தொடர்ந்து புலம்பெயர் உறவுகள் நிதிகளை வழங்கினர்.

இந்த நிதியுடன் கட்டட நிர்மாணப் பணிகளைப் பொறுப்பேற்றுச் செய்த அந்தச் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த ஒப்பந்தகாரரான [illegible] ஒரு தொகை கட்டட உபகரணங்களை வழங்கியிருந்தார்.

இந்த முழுமையான நடவடிக்கைகளினால் மாடிக்கட்டட வேலைகள் பூர்த்தியடைந்து தரமான மாடிக்கட்டடம் புதிய எழில் தோற்றத்துடன் உருவாகிக் கொண்டது. சுமார் 4 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்ட புதுப் பொலிவு கொண்ட புற்றளை சனசமூக நிலையத்துக்கான புதிய மாடிக்கட்டடத்தை அந்த வேளை பருத்தித்துறை பிரதேச செயலராகப் பணியாற்றிய இ.வரதீஸ்வரன் கடந்த 10.12.2008 ஆம் திகதியன்று திறந்து வைத்தார்.

இந்தப் புதியமாடிக் கட்டடத்தில் தளப் பகுதியில் வாசிக சாலையும், மாடியில் புத்தகங்கள் இரவல் கொடுக்கும் நூல் நிலையமும், கணினிப்பிரிவும் இயங்கி வருகின்றன.

குறித்த புதிய மாடிக்கட்டடத்தைக் கட்டி முடித்தபொது மக்கள் பாவனைக்கு திறந்து விட்ட பெருமை அந்த நேரம் தலைவராக இருந்த இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் க.பாலகிட்ணப்பிள்ளையையும், செயலாளராக இருந்த அமரர் வி.வேல்முருகு வையுமே சாரும். அவர்களின் கடுமையான உழைப்பை இந்தவேளையில் பாராட்ட வேண்டிய கடப்பாடு உண்டு. அதன் பின்னர் பொறுப்பேற்ற சனசமூக நிலைய நிர்வாக சபையினர் ஏகோபித்த முறையில் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

லண்டனிலுள்ள புலோலி அபிவிருத்தி மன்றம் புற்றளைப் பகுதி மாணவர்களுக்கான பல பயிற்சிப் புத்தகங்களையும், வாசகர்களுக்கு இரவல் வழங்கக் கூடிய நூல்களையும் சனசமூக நிலையத்துக்கு வழங்கியுள்ளது.

இந்தநிலையத்தில் இன்னமும் பலநூறு புத்தகங்கள் இரவல் வழங்கக் கூடிய நிலையில் உள்ளன. பல ஆண்டுகளுக்கு முன்னர் புலோலிப் பிரதேச அபிவிருத்தியை மையமாக வைத்து புற்றளைக் கிராமத்தைச் சேர்ந்தோரால் லண்டனில் அமைக்கப்பட்ட புலோலி அபிவிருத்தி மன்றம் புற்றளைச் சனசமூக நிலையத்துடன் இணைந்த ஒரு நிறுவனமாகும். வருடந்தோறும் இந்த மன்றம் புலோலி கிராமத்தின் பல்வேறு தேவைகளைக் காலத்துக்குக் காலம் பூர்த்தி செய்து வருகின்றது. அத்துடன் தமிழ்மொழியையும், இலக்கியத்தையும் வளர்க்கும் முயற்சியாக ஆண்டு தோறும் சிறுகதைப் போட்டிகளையும் நடத்தி வருகின்றது. இந்த மன்றத்தின் பணிகளை புற்றளைச் சனசமூகப் பணிகளின் ஓரங்கம் என்றே இந்தக் கிராம மக்கள் எண்ணுகிறார்கள். புற்றளைச் சனசமூக நிலையத்துடன் பின்னிப் பிணைந்தது லண்டன் புலோலி அபிவிருத்தி மன்றப் பணிகளாகும். உலக தரிசனம் என்ற அரசசார்பற்ற நிறுவனத்தின் அனுசரணையோடு ஆரம்பிக்கப்பட்ட புற்றளைச் சித்தி விநாயகர் முன்பள்ளியின் முகாமைப் பொறுப்பையும் புற்றளைச் சனசமூக நிலையமே பொறுப்பேற்று நடத்தி வருகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடாது கொட்டுகிறது மழை; துன்பத்தில் சம்பூர் அகதிகள்

## நாளாந்த உணவுக்குத் திண்டாட்டம்

திருகோணமலை,டிசெ.26

மூதூர், சம்பூர் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து பட்டித்திடல், மணற்சேனை உள்ளிட்ட இடைத்தங்கல் முகாம்களில் வாழும் மக்கள் தொடர்ந்து பெய்துவரும் அடை மழையினால் பெரும் இன்னலுக்கு உள்ளாகி வருகின்றனர்.

தாம் வசித்து வரும் தற்காலிக தகரக் கொட்டில்களின் தரைப்பகுதியிலிருந்து நீர் கசிந்து வருவதனால் தூங்க முடியாது, மரக்குத்திகளிலும், பலகைகளிலும் அமர்ந்திருந்தே காலத்தைக் கழிக்க வேண்டியுள்ளது என்று இடைத்தங்கல் முகாம்களில் வாழும் மக்கள் தெரிவித்தனர்.

உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணம் கடந்த ஜனவரி மாதம் முதல் நிறுத்தப்பட்டது. அதனால் தாம் நாளாந்தம் உணவைத் தேடிக் கொள்வதில் பெரும்



பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றோம் என்று மக்கள் கூறுகின்றனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் கூட தமக்கு வழங்கப்படுவதில்லை என்றும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமது நிலைமையைக் கவனத்தில்கொண்டு உதவுவதற்கு முன்வரவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் மூன்றுக்கான நியமனம்



திருகோணமலை,டிசெ.26

கிழக்கு மாகாணத்தில் 364 பேருக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் மூன்றுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொகான் விஜயவிக்கிரம, முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத் ஆகியோர் கலந்துகொண்டு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில் உவர்மலைச் சந்தியில் இருந்து ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்களை விவேகானந்தாக் கல்லூரி பான்ட் வாத்தியக் குழுவினர் வரவேற்று கலையரங்குக்கு அழைத்துச் சென்றனர். (ச)

### பாதிக்கப்பட்ட திருமலை மக்களுக்கு

## நிவாரணங்களை வழங்க முதல்வர் நடவடிக்கை



திருகோணமலை,டிசெ.26

திருகோணமலை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கான நடவடிக்கையை கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத் மேற்கொண்டுள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக அரசசார்பற்ற நிறுவனங்களுடன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதலமைச்சர் கலந்துரையாடினார்.

கிழக்கு மாகாணத்தில் மூன்று மாவட்டங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில் முதல் கட்டமாக திருகோணமலை மாவட்டத்துக்கு அவசர நிவாரணப் பணிகளை முன்னெடுக்க முதலமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் வெள்ளப் பாதிப்பு பற்றிய தகவல்களை பிரதேச செயலர்களிடமிருந்து கோரி அதனடிப்படையில் உதவியளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. (ச)



மட்டக்களப்பு மத்தி கல்வி வலயப் புதிய கட்டடம், ஏறாவூர், புன்னைக்குடா வீதியிலுள்ள அல் ஜுப்ரியா வித்தியாலயத்தின் வளாகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சபையின் கல்வி பண்பாட்டு அலுவல்கள், காணி அபிவிருத்தி அமைச்சர் விமலவீர திஸாநாயக்க, விவசாய கால்நடை அபிவிருத்தி, சுற்றுலாத்துறை அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட், கிழக்கு மாகாண சபையின் பிரதித் தலைவர் எம்.எஸ்.சுபைர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## பனிச்சங்கேணியூடான போக்குவரத்துக்கு விசேட பஸ் சேவை

எருவில்,டிசெ.26

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்துவரும் மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வாகரை- பனிச்சங்கேணியூடான போக்குவரத்துக்கு விசேட பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை போக்குவரத்துச் சபையின் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய செயலாற்றுகை முகாமையாளர் எஸ்.கனகசுந்தரம் இதனைத் தெரிவித்தார்.

இந்த பஸ்சேவை பனிச்சங்கேணி பாலத்தில் இருந்து மாவடிச்சேனை வரை வேவையில் ஈடுபடும் என்று அவர் கூறி னார்.

வாகரை பிரதேச மக்களின் நன்மை கருதி இந்த சேவை காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இடம்பெறும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை பனிச்சங்கேணி பாலம் பழுதடைந்துள்ள நிலையில், ஆற்றை மக்கள் கடப்பதற்கு கடற்படையினர், இராணுவத்தினர் ஆகியோர் உதவி புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கொட்டும் மழையிலும் நத்தார் கொண்டாட்டம்

மட்டக்களப்பு,டிசெ.26

மட்டக்களப்பு, நாவற்குடா சின்ன லூர்த்து அன்னை ஆலயத்தில் கொட்டும் மழையிலும் நேற்று முன்தினம் இரவு 11.30 மணிக்கு வணபிதா ஓ. ஐ.ரஜீவனால் நத்தார் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இந்த ஆராதனையில் மழை பெய்வதையும் பொருட்படுத்தாமல் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு பல இடங்களிலும் கிறிஸ்மஸ் அலங்கார மரங்கள் வைக்கப்பட்டு கண்காட்சி போட்டிகளும் இடம்பெற்றன.

அங்கு கழிவுப் பொருள்களில் செய்யப்பட்ட பல்வேறு அலங்கார வடிவங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. (ச)





## அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளும் எமக்கு வேண்டும்

### நிவாரண சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

எருவில்,டிசெ.26

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடர்களினால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்களுக்கு சமைத்த உணவுகளை வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏனைய தேவைகளை நிவர்த்திக்கும் வகையில் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை நாடியுள்ளோம் என்று இடர் முகாமைத்துவ அமைச்சின் நிவாரணசேவைகள் பணிப்பாளர் ஆ.லக்கதாஸ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமைத்த உணவுகளை வழங்குவதற்கான முழுப் பொறுப்பையும் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. அதற்கான நிதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. தேவையான நிதிகள் அதற்காக வழங்கப்பட்டுள்ளதுடன், மேலதிகமாகத் தேவைப்படும் நிதிகளும் ஒதுக்கப்படும். அதனைவிட மேலதிக தேவைகளைத் தீர்க்கும் வகையில் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் பெறப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து மழைபெய்து வருவதனால் மக்கள் எதுவித பிரச்சினைகளும் இன்றி இருப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.- என்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்குச் சென்ற இடர் முகாமைத்துவ அமைச்சின் நிவாரணசேவைகள் பணிப்பாளர் இடைத்தங்கல் முகாம்களுக்குச் சென்று மக்களின் நலன்கள் குறித்து கேட்டறிந்தார். (ச-31)

## பட்டிருப்பில் கண்காட்சி

மட்டக்களப்பு,டிசெ.26

மட்டக்களப்பு, பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் அலுவலக கேட்போர் கூடத்தில் கண்காட்சி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்தக் கண்காட்சியை பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர்திருமதி என்.புள்ளநாயகம் ஆரம்பித்துவைத்தார். மணப்பெண் அலங்காரம், துணி அலங்காரம், தைக்கப்பட்ட ஆடைகள் போன்றவை கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். தாயின் உடல் நிலை சீராகும். நண்பர்கள், உறவினர்களின் உதவி கிட்டும். மனக்குழப்பங்கள் நீங்கும். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். சகோதர வகையில் மகிழ்ச்சியுண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு பெருகும்.

**இடபம்:** அநாவசிய பேச்சைத் தவிர்ப்பது நல்லது. யாரை நம்புவது என்கிற மனக் குழப்பத்துக்கு ஆளாவீர்கள். நெருங்கியவர்கள் சிலர் உங்களை உதாசீனப்படுத்தும்படி நடந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.

**மிதுனம்:** குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. சகோதர வகையில் அலைச்சல் இருக்கும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். சொத்துப் பிரச்சினைக்கு சுமூக தீர்வு காண்பது நல்லது. உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள்.

**கடகம்:** சோர்வு, அலைச்சல் நீங்கி ஆனந்தமாகக் காணப்படுவீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அரசியல்வாதிகளின் ஆதரவு கிட்டும். உறவினர்களால் பாராட்டப்படுவீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**சிங்கம்:** நீண்ட நாள் எண்ணங்களை பூர்த்தியாக்க முயற்சிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். பெற்றோரின் ஆதரவு உண்டு.

**கன்னி:** மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சியுண்டு. வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

நாளை

மார்கழி -12 வியாழக்கிழமை 27.12.2012
திதி: சதுர்த்தசி பி.ப 02.11 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் பி.இ. 03.50 வரை
சுபநேரம்: 07.58- 09.28 வரை
ராகுகாலம்: 01.58- 03.28 வரை

**துலாம்:** நன்றி மறந்த ஒருவரை நினைத்து கவலைப்படுவீர்கள். உதவி கேட்டு தொந்தரவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் வேலையாள்களால் விரயம் ஏற்படும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. முன்கோபம் விலகும். பிரியமானவர்களைச் சந்தித்து பொழுதைக் கழிப்பீர்கள். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். அயல் வீட்டாரின் ஆதரவு கிட்டும்.

**மகரம்:** கடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். முன்கோபம் விலகும். அரச காரியங்களில் அனுகூலம் உண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு பெருகும்.

**கும்பம்:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். வியாபார ரீதியாக சில பிரபலங்களைச் சந்திப்பீர்கள். மனக் குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் கூடும்.

**மீனம்:** சமூகத்தில் அந்தஸ்து உயரும். பணப் பற்றாக்குறை நீங்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | 7 | | 1 | | | | 6 |
| 8 | | | | 5 | | 7 | | |
| 2 | | | | 7 | | 9 | 5 | 4 |
| | | | | 3 | 1 | | | 2 |
| | 1 | | | 2 | | | 3 | |
| 4 | | | 8 | 9 | | | | |
| 9 | 3 | 6 | | 8 | | | | 1 |
| | | 5 | | 4 | | | | 7 |
| 7 | | | | 6 | | 3 | 8 | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 5 | 7 | 9 | 4 | 2 | 3 | 6 |
| 7 | 2 | 3 | 6 | 1 | 5 | 9 | 4 | 8 |
| 4 | 9 | 6 | 3 | 2 | 8 | 1 | 7 | 5 |
| 5 | 4 | 1 | 2 | 3 | 6 | 8 | 9 | 7 |
| 2 | 3 | 7 | 8 | 5 | 9 | 6 | 1 | 4 |
| 6 | 8 | 9 | 1 | 4 | 7 | 3 | 5 | 2 |
| 9 | 5 | 2 | 4 | 6 | 1 | 7 | 8 | 3 |
| 1 | 6 | 8 | 5 | 7 | 3 | 4 | 2 | 9 |
| 3 | 7 | 4 | 9 | 8 | 2 | 5 | 6 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது


After O/Level's
Join Sri Lanka's # 1

DiTEC INTERNATIONAL
Diploma in Information Technology
www

சிறப்பம்சங்கள் காலம் 4 மாதங்கள்
- இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட Malaysia இல் அச்சிடப்பட்ட சான்றிதழ்.
- சர்வதேசத்தினால் (Edexcel-UK) வழங்கப்படும் மேலதிக சான்றிதழ்.
- BCS-UK இனால் வழங்கப்படும் Transcript
- பட்டப்படிப்பிற்கான முதல் ஆண்டிற்கு சமனான கற்கைநெறி (B.Sc 1st Year)
- தரமான ஆசிரியர் குழாம் மற்றும் அதிக Practical வகுப்புக்கள்
- IT கற்கைநெறி கற்பவர்களுக்கு Diploma in English இல் 20% கட்டணச்சலுகை

NEW BATCHES
@ 9.00 am & 2.00 pm
2nd Jan 2013
5th Jan 2013
7th Jan 2013

ESOFT Metro Campus - Jaffna
137, K.K.S Road, Jaffna. Tel : 021 222 4142
Email:jaffna@esoft.lk web: www.esoft.lk

இலங்கை அரசாலும் UK, USA, Australian மற்றும் European நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்ட உடனடித் தொழிலொன்றைப் பெற்றுக்கொள்ள வழிவகுக்கும்
DiCA
Diploma in Computerized Accounting



ESOFT
The Leader in Professional ICT Education
Trusted IT Partner

முற்றிலும் இலவசம், எவ்வித கட்டணங்களும் கிடையாது. இவ் அரிய வாய்ப்பு எம்மிடம் மட்டுமே....!!!
MYOB Quick Books
ACCPAC SAGE
Peachtree Tally
காலம் 4 மாதங்கள்

Other Diplomas
DiWE Diploma in Web Engineering காலம் 6 மாதங்கள்
DiBM Diploma in Business Management காலம் 4 மாதங்கள்
HOTLINE 077 309 9 308
DiSE Diploma in Software Engineering காலம் 6 மாதங்கள்
DiE Diploma in English காலம் 4 மாதங்கள்
DiHN Diploma in Hardware & Networking காலம் 4 மாதங்கள்
DiGD Diploma in Graphic Designing காலம் 4 மாதங்கள்

இம் மாத பதிவுகளுக்கு எங்களுடன் இணைந்து T-SHIRT ஒன்றினை
FREE இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்

ESOFT
The Leader in Professional ICT Education
Jaffna 2nd Branch
17/1, Browns Road
021 222 0345
Kilinochchi
01, Kanagapuram Rd,
021 228 5444
Nelliady
151, Jaffna Road
021 226 4940


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொலனறுவை மாவட்டத்தில் வெள்ளத்தால் இருப்பிடங்களை விட்டு வெளியேறி நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேரில் சென்று பார்வையிட்டார். அதன்போது உணவருந்திக் கொண்டிருந்த சிறுவனுடன் அமைச்சர் உரையாடுகிறார்.

# தேசிய பாதுகாப்பு தினம் இன்று

## இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு வேண்டுகோள்

கொழும்பு,டிசெ.26

தேசிய பாதுகாப்பு தினம் இன்று புதன்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது. இன்றையதினம் இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்துமாறு இடர் முகாமைத்துவ அமைச்சு நாட்டு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இன்று காலை 9.25 மணி தொடக்கம் 9.27 மணி வரை மௌன அஞ்சலி செலுத்துமாறு அந்த அமைச்சு கேட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரலை இடர் காரணமாக உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலேயே இந்த இரு நிமிட மௌன அஞ்சலி வருடா வருடம் செலுத்தப்படுகிறது என்று அமைச்சின் அதிகாரியொருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கூறினார்.

இந்த வருட தேசிய பாதுகாப்பு தினம் இடர் முகாமைத்துவ அமைச்சின் ஏற்பாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பதுளை மாவட்டத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

பதுளை மாவட்டத்தின் வெவ்வேறு பிரதேசங்களில் மண்சரிவு, காட்டுத் தீ போன்ற இயற்கை இடர்கள் ஏற்படுகின்றன.

அவை தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டுவதற்காகவே இந்த வருடம் தேசிய பாதுகாப்பு தினம் பதுளை மாவட்டத்தில் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச)

# வெளிநாடு செல்வோருக்கு முறையற்ற சேவை வழங்கினால் அனுமதிப்பத்திரம் ரத்து

## எச்சரிக்கிறார் அமைச்சர் டிலான்



கொழும்பு,டிசெ.26

வெளிநாடு செல்பவர்களுக்கு முறையான சேவைகளை வழங்காத வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்கள் ரத்துச் செய்யப்படும் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு விரிவாக்கல் மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மைக்காலமாக முறையாக ஒப்பந்தங்கள் இன்றி வெளிநாடுகளுக்கு பணியாளர்கள் அனுப்பப்படுவதன் காரணமாக பல்வேறு பிரச்சினைகளை அவர்கள் எதிர் நோக்குகின்றனர். தமது வாழ்க்கையை இழக்கக் கூடிய அபாயகரமான சூழ்நிலையையும் இலங் கைப் பணியாளர்கள் எதிர் நோக்குகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மக்களின் கடன் சுமை 25 வீதத்தால் அதிகரிப்பு!

கொழும்பு,டிசெ.26

இலங்கையில் தனிநபர் ஒருவருக்கான கடன் சுமை 25 வீதத்தால் அதிகரித்துள்ளது. என்று இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

கடந்த வருடம் இந்தத் தொகை 245, 980 ரூபாவாக இருந்தது. தற்போது அது 308, 171 ரூபாவாக அதிகரித்துள்ளது. தனிநபர் கடன் என்ற அடிப்படையில் இலங்கை அரசுக்கு செலுத்த வேண்டிய கடன்தொகையை மொத்த சனத்தொகையால் வகுத்த நிலையிலேயே இந்தத் தொகை கணிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் சனத்தொகை 2012 ஆம் ஆண்டில் 20, 277, 597 ஆகும். இந்தநிலையில், அரசுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை 5133 பில்லியன் டொலர்களாகும்.

இது கடந்த 8 மாதகாலப் பகுதிக்குள் 1, 115.6 பில்லியன் தொகையில் இருந்து 6, 248.9 பில்லியன்களாக அதிகரித்துள்ளது. இதில் உள்நாட்டுக்கடன் 449 பில்லியன்களால் 16 வீதம் அதிகரித்து, 3, 253 பில்லியன்களாக உயர்ந்துள்ளது.

வெளிநாட்டுக் கடன்கள் 666.5 பில்லியன்களில் இருந்து 28.6 வீதமாக அதிகரித்து, 2, 995.8 பில்லியன்களாக அதிகரித்துள்ளன.

பொருளியல் நிபுணர்களின் கருத்துப்படி, நாட்டின் ஏற்றுமதி வருமானம், கடந்த 9 மாதங்களில் 8.3 வீதத்தால் அதிகரித்தபோது இறக்குமதி செலவுகள் 11.2 வீதத்தால் அதிகரித்தன. இதன் காரணமாக அரசின் கடன் தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் குறிப்பிட்டனர். (ச)

# பிரதான வீதிகள் சேதம்; பத்துக்கோடி ரூபா நாசம்!

கொழும்பு,டிசெ.26

சீரற்ற காலநிலையால் பிரதான பாதைகளுக்கு மட்டும் 10 கோடி மதிப்புள்ள ரூபா சேதம் ஏற்பட்டுள் ளது என்று மதிப்பீடு செய்யப்பட் டுள்ளது.

நாட்டின் பல பிரதான பாதைகள் சீரற்ற கால நிலையினால் பாதிக்கப்பட்டுள்ளன என்று துறைமுக மற்றும் பெருந் தெருக்கள் பிரதி அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்தார்.

வடமத்திய, மத்திய, வடமேல், தென், ஊவா, கிழக்கு மாகாணங்களில் இவ்வாறு முக்கிய வீதிகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். சேதமடைந்த பாதைகள் மற்றும் வீதிகளை விரைவில் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# தெரிவுக்குழுவின் எதிரணி உறுப்பினர்கள் நீதிமன்ற விசாரணையில் முன்னிலையாகலாம்

## தெளிவுபடுத்துகிறார் சட்டத்தரணிகளின் சங்கத் தலைவர்



கொழும்பு,டிசெ.26

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகித்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள், மேன்முறையீட்டு நீதிமன்ற விசாரணைகளில் முன்னிலையாக முடியும் என்று சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றின் அழைப்பாணையை நிராகரித்துள்ளனர்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகித்த கட்சி உறுப்பினர்கள் மேன்முறையீட்டு நீதிமன்ற விசாரணைகளில் முன்னிலையாக வேண்டும் என கட்சியை வலியுறுத்தப் போவதில்லை.

எனினும், ஆளும் கட்சி உறுப்பினர்களின் தீர்மானத்தை கவனத்தில் கொள்ளாது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நீதிமன்ற விசாரணைகளில் முன்னிலையாக முடியும்.-என்றார்.

இதேவேளை, நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விசாரணை செய்ய முடியும் என்ற நிலைப்பாட்டையே ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுள்ளது என்று கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்தார்.

பழிவாங்கும் நோக்கத்துடன் தனிப்பட்ட நபர் ஒருவருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சதித் திட்டங்களுக்கு கட்சி ஒத்துழைப்பு வழங்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# நீதித்துறை அதிகாரத்தையும் தனது பையில் போட அரசு முயற்சி

## சாடுகிறார் ரில்வின் சில்வா



கொழும்பு,டிசெ.26

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை தனது பைக்குள் போட்டுக்கொண்டதைப் போன்று, நீதித்துறை அதிகாரத்தையும் தனது பைக்குள் போட்டுக்கொள்ளவே அரசு முயற்சித்து வருகிறது.

ஆனால் அந்த முயற்சியை மேற்கொள்ள முயன்ற அரசு இன்று சிக்கலில் மாட்டிக்கொண்டுள்ளது என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அக்மீமன பிரதேசத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு நீதித்துறையில் கை வைக்கப் போய் தற்போது பாரதூரமான நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து தேசிய மற்றும் சர்வதேச கவனம் திரும்பியுள்ளது. இலங்கை [illegible] தேசம் அழுத்தங்களைக் கொடுக்கக் கூடிய தேவையான புறச்சூழலை அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்தப் பிரச்சினையால் இலங்கையில் ஜனநாயகம் இல்லை என்று கூறி, சர்வதேச விசாரணைகளை நடத்தும் சூழல் ஏற்படும். அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் அதற்கு அரசே பொறுப்புக் கூறவேண்டும்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை அரசுக்கு நாட்டு மக்கள் கொடுக்கவில்லை. எதிரணி வரிசையில் இருந்தவர்களைத் தம் பக்கம் இழுத்தே அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெற்றுக்கொண்டது.

மக்கள் வழங்காத மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பயன்படுத்த இந்த அரசுக்கு தார்மீக உரிமை யில்லை.

நாட்டின் விவசாயத் துறையை நிர்வகிப்பது பல்தேசியக் கம்பனிகள். உரம், விதைகள் போன்றவற்றை இறக்குமதி செய்வது இந்தப் பல்தேசிய நிறுவனங்களே. இறக்குமதி செய்யும் விதைகளைக் கொண்டு மீண்டும் விதைகளை நாட்டில் உற்பத்தி செய்யமுடியாது. இதனால் மீண்டும் விதைகளை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையை அரசு உணர்ந்தோ, உணராமலோ நாட்டை கம்பனிகளின் தேவைக்கு அமையவே முன்னெடுத்துச் செல்கிறது.-என்றார். (ச)

# சட்டத்தரணியின் தொலைபேசியை திருடியவர் மாட்டினார்

## நீதிமன்றத்துக்குச் சென்றே குறித்த சந்தேகநபர் சட்டத் தரணியின் கையடக்க தொலைபேசியைத் திருடியுள்ளார்

கொழும்பு,டிசெ.26

சட்டத்தரணியின் கையடக்க தொலைபேசியை திருடியவரை மருதானை பொலிஸார் 10 நிமிடங்களில் கைது செய்துள்ளனர்.

ஹெரோயின் போதைப் பொருள் குற்றச்சாட்டு தொடர்பிலான வழக்குக்கு சட்டத்தரணியின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும் நோக்கில் சென்ற சந்தேகநபரே குறித்த கையடக்க தொலைபேசியைத் திருடியுள்ளார்.

மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றத்துக்குச் சென்றே குறித்த சந்தேகநபர் சட்டத்தரணியின் கையடக்க தொலைபேசியைத் திருடியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரைக் கைதுசெய்யும்போது அந்த கையடக்க தொலைபேசியிலிருந்த சிம் அட் டையை குறித்த நபர் கழற்றியுள்ளார் என்று பொலிஸார் கூறினர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெல், அரிசி விற்பனைக்கான கேள்வி கோரல்

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கீழ்க்காண் விவரப்படியான நெல், அரிசி என்பன விற்பனைக்கு உள்ளது. இதனைப் பெற விரும்புவோர் தமது கேள்வித் தொகையைக் குறிப்பிட்டு, தங்கள் கேள்வி கோரலை 05.01.2013 திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

| நெல் இனம் | அரிசி இனம் |
|---|---|
| 400-6 | கோறா |
| கோறா | |
| ஆட்டக்காரி | |

தலைவர்,
பூநகரி ப.நோ.கூ.சங்கம்,
பூநகரி.
021 320 8076

## வாகன விற்பனை

லேடன் டிப்பர் NPLT-0916 விற்பனைக்குண்டு. (பழைய மொடல்) பதிவு திகதி-23.03.2011
தொ.பே.களுக்கு: 07777 39129
(24384) (6.4)

## பஸ் விற்பனைக்குண்டு

62 XXXX எனும் இலக்கமுடைய அசோக் லேடன் 31 சீற் கொண்ட பஸ் விற்பனைக் குண்டு.
தொ.பே: 0777 571455, 077 6681374.
R.கைலாசமூர்த்தி நானாட்டான், மன்னார்.
(27197) (6.7.4)

## காணி விற்பனைக்கு

மல்லாகம் சந்தியிலிருந்து 600m தூரத்தில் K.K.S வீதியில் காணி விற்பனைக்குண்டு.
தொ.பே: 077 6845407, 075 047 9366
(27094) (5.6)

## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்

### ஆழியின் பிடியில் 26.12.2004

ஆழிப்பேரலையில் ஆகுதியாகிய அன்புச்செல்வங்கள்




இயற்கையின் லீலை - அன்று
விரித்த மாய வலையில்
சங்கமித்த எம் இனிய
சப்த செல்வங்களுக்கு
நாம் சமர்ப்பிக்கும் மலர்மாலை
நீங்கள் எமைப்பிரிந்து
ஆண்டுகள் எட்டென்ன
ஆயிரம்தான் ஆகிடினும்
அழியாத சிற்பங்களாய் - உம்
நினைவுகள் எம் மனதில்
என்றும் நிலைத்திருக்கும்

கடவைப் புலம்
சுன்னாகம். (27136) (45.6)

உங்கள் நினைவுகளுடன் வாழும்:
குடும்பத்தினர்.

## ஈராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
21.06.1956

அநியாயக்காரர் அழிப்பில்
26.12.2010

அமரர்
**மார்க்கண்டு சிவலிங்கம்**
(முன்னாள், பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்–மருதனார்மடம்– B.Sc(Agr), Dip. in Edu, SLEAS-II)



நீங்காத நினைவில்...



அன்புள்ள எம் அண்ணையே.........
எம் குலத்தின் தலைமகனே!
மனிதம் மரணித்த இரக்கமிலா
கூட்டத்தின் அழிப்பில்
உங்கள் உயிரை பறித்து விட்டதே!
அம்மா!.... நீ உன் ஆசைமகன்
எம் அருமை அண்ணையுடன்
அமைதியாய் அரவணைத்து
உறங்குகின்றாய்.......
நாம் இங்கு ஆறுதலின்றி தவிக்கின்றோம்.
ஆண்டாண்டு காலம் கடந்தாலும்
ஆறாது எம் துயரம்........

திருமதி
**மார்க்கண்டு பரிமளம்**
பிறப்பு-1939.03.20 இறப்பு- 2011.08.20

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (27190) (5-6)

நீங்காத நினைவுகளுடன்.....
குடும்பத்தினர்.

# VACANCIES @ ESOFT



Join Srilanka's #1
Northern Region

ESOFT – The Leader in Professional ICT Education

VACANCIES @ ESOFT

**LECTURER in IT**

Should possess degree or higer Diploma in relevent field. Experience in lecturing for atleast one year is essential. ability to on weekends is must.

**ASS . LECTURER in IT – Kilinochchi**

Should possess degree or higer Diploma in relevent field. Conducting the Programming or Hardware & networking moduels. Able to work in Jaffna, Kilinochchi.

**LECTURER in ENGLISH**

Able to conducting Diploma in English, IELTS & City& guilds Courses.

**MARKETING EXCUTIVIES**

With or without part qulifications in marketing. Must have a pleasant, outlooking personallity. shoud be have a motor bike.(commission basics)

**NETWORK & HARDWARE ADMINISTRATOR**

Should be qualified in the relevant field and have the ability to conduct classes and also coordinate the programs and maintain the labs.

**HOW TO APPLY**

Send your CV **within 10 Days** to reach The Manager. mark the position that you are applyng for on the top left corner of the Envelope.

ESOFT – The Leader in Professional ICT Education
ESOFT Metro Campus -Jaffna
137 K K S Road Jaffna.
Hotline:077 3099308 Tel:021 222 4142
Mail : jaffna@esoft.lk Web : www.esoft.lk

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 - 08 - 1983

மறைவு 26 - 12 - 2004



அமரர் **முருகேசு பிரதீப்**

இழப்புக்கள் எவ்வளவு கொடுமை என்று
உணர்ந்தோம் நாம் உனை இழந்த பின்தான்
வளர்த்த எமை தவிக்க விட்டு வானம் சென்றது ஏன்
வலிக்குதடா பிரதீப் வருவாயா நீ மீண்டும்

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி (27192)(6.4.)

என்றும் உன் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# நல்லூர் பிரதேச சபையின் '2013' அபிவிருத்தி திட்டம்

## 3 கோடி 45 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், டிசெ.26

நல்லூர் பிரதேச சபையால் 2013 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்காக 3 கோடி 45 லட்சத்து 20 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

2013 ஆம் ஆண்டில் நல்லூர் பிரதேச சபையால் நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் குறிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கமைவாக நல்லூர் பிரதேச சபையின் ஆயுள்வேத வைத்தியசாலை மூலிகைத் தோட்டம் அமைப்பு, மயான அபிவிருத்தி, போத்தல் குடிதண்ணீர் தயாரித்தல் போன்ற அபிவிருத்திப் பணிகளுக்காக 56 இலட்சம் ரூபாவும் திருநெல்வேலிப் பொதுச்சந்தையில் வாழைக்குலைச் சந்தைக் காணி சீர்திருத்தம் மற்றும் கட்டடங்கள் அமைப்பு ஆகியவற்றுக்கு 30 இலட்சம் ரூபாவும், சிறுவர் உள்ளக விளையாட்டு மையம், பயிற்சி நிலையம், கலாசார மண்டபம் ஆகியவற்றை அமைப்பதற்காக 2 கோடி 59 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**சிறுவர் உள்ளக விளையாட்டு மையம், பயிற்சி நிலையம், கலாசார மண்டபம் ஆகியனவும் அமைக்கப்படவுள்ளன.**

இந்த அபிவிருத்தித் திட்டங்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் ஆண்டு இறுதிக்குள் நிறைவடைய வேண்டும். இதனை நடைமுறைப்படுத்துவதற்காக வேலைத்திட்டங்களை நல்லூர் பிரதேச சபை மேற்கொண்டு வருகிறது. (3-14-7)

## ஆசிரிய கலாசாலைகளின் விரிவுரையாளர்களுக்கான நேர்முகம் நாளை மறுதினம்

கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரிய கலாசாலைகளில் வெற்றிடமாக வுள்ள விரிவுரையாளர் பதவிகளுக்கு தற்காலிக அடிப்படையில் ஆள் இணைப்பு நடைபெறவுள்ளது. இதற்கான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு தகைமையுடைய விண்ணப்பதாரிகள் மத்திய கல்வி அமைச்சினால் பரிசீலிக்கப்பட்டு அதனடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (3-14)

## கவனிப்பாரற்றுக் கிடக்கும் துணைவி கிராம வீதிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.26

வீதி அபிவிருத்திப் பணிகளில் வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட துணைவி கிராமம், கடந்த 50 வருடங்களாக புறக்கணிக்கப்பட்டு வருதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வலி.மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட துணைவி கிராமத்தில் குறுக்குவீதிகள் பல உள்ளன. இவை 50 வருடங்களாக கவனிப்பாரற்று போக்குவரத்துக்கு இடையூறான விதத்தில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன.

இந்தக் கிராமத்தில் 90 வீதமான மக்கள் விவசாயிகளாக உள்ளதால் விவசாய நிலங்கள் அறுவடை செய்யப்படுகின்ற உற்பத்திப் பொருள்களை சந்தைக்கு எடுத்துச் செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (14-36)

ஆழிப்பேரலையின் கோரப் பதிவு

# 'மீண்டும் எழுவோம்' சிற்பக் கண்காட்சி



வலி வடக்கு, டிசெ. 26

'மீண்டும் எழுவோம்' என்னும் தலைப்பிலான சுனாமிப் பேரலையின் கோர நிகழ்வுகளை சித்திரிக்கும் வரலாற்றுப் பதிவான 'சிற்பக் கண்காட்சி'யும் சுனாமியினால் சாவடைந்தவர்களுக்கான 8 ஆம் ஆண்டு நினைவாக வழிபாட்டு நிகழ்வுகளும் புதன் கிழமை காலை இன்று 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள தெல்லிப்பழை துர்க்காபுரத்தில் உள்ள சிற்பாலயக் கலைக்கூடத்தில் நடைபெறவுள்ளன.

உலகையே அதிர வைத்த ஆழிப் பேரலையைத் தொடர்ந்து அடுத்தடுத்து வந்துகொண்டிருக்கும் பூமி அதிர்வுகள், வெள்ளப் பெருக்குகள், எரிமலைகளின் சீற்றம், காலநிலை மாற்றம் ,தொடர்ந்து வரும் இயற்கை அழிவுகள், இடர்கள் எதிர்வு கூறப்படும் அச்சுறுத்தல்கள் போன்றவைகளுக்கு முகம் கொடுப்பது எப்படி? எம்மை பாதுகாப்பது எப்படி? மீண்டும் எழுவது எப்படி? என்பது சம்பந்தமான ஆய்வரங்கும் நடைபெறவுள்ளது.

ஒரே மரத்தில் யாழ்ப்பாணம் முதல் காலி வரையான பகுதியில் சுனாமியினால் ஏற்பட்ட அழிவுகள் மரணங்களை தத்துரூபமாக சித்திரித்திருந்த சிற்பி ஏ.வி. ஆனந்தனின் சிற்பக் கண்காட்சியும் இடம் பெறவுள்ளது. (3-86)


# எட்டாம் ஆண்டு நினைவலைகள்

## ஆழியின் பிடியில்: 26.12.2004

அமரர் செல்லையா சீனிப்பிள்ளை

அமரர் சீனிப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை

அமரர் சீனிப்பிள்ளை திருச்செல்வம் (செல்லையா)

அமரர் பரஞ்சோதி அன்னபூரணம் (தவம் - ஆழியவளை)



மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்
புனித வாழ்வு வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வங்களே!
காத்திருந்து அரவணைத்த கைகள்
காலமெல்லாம் எம்மை விட்டுப் பிரிந்ததேனோ?
மலர்ந்த வதனச் சிரிப்பை வாழ்நாளில்
காணக்கிடைக்குமா?

எங்களை விட்டுப் பிரிந்த எங்கள் உறவுகளின் நீங்காத நினைவுகளுடன்

உடுத்துறை வடக்கு

குடும்பத்தினர்.

[27252] 45.6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thaaimadi Montessori &Daycare and Language centre

## வேலை வெற்றிடம்

ஆங்கிலத்தில் கற்பிக்கக்கூடிய முன்பள்ளி ஆசிரியர்கள்
சிறுவர் பராமரிப்பாளர் தேவை

நேர்முகப்பரீட்சை :
02.01.2013 (walk in interview)

**இடம்:**
இல-86, 4ஆவது ஒழுங்கை, பாலவிநாயகர் வீதி,
தவசிகுளம், வவுனியா

**நேரம்:**
முற்பகல் 10.00 முதல் மதியம் 2.00 வரை

தொடர்புகளுக்கு: 0776151433

## 08ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகளில்...



மருத மண்ணில் முத்தாக 29 - 03 - 1995
ஆழிப்பேரலையில் வித்தாக 26.12.2004
மருத மண்ணில் முத்தாக் 08 - 06 - 1966

அமரர் வேலாயுதம்பிள்ளை இளவரசி
அமரர் வேலாயுதம்பிள்ளை மல்லிகாமலர்

அலையாடும் கடலோரம் அமைந்த அக்குடிசை வீட்டில்
ஆனந்தமாய் வாழ்ந்திருந்தோம்
அலையெழுந்து வந்து ஆருயிரில் ஈருயிரை பிரித்தமையால்
மூவுயிரும் இங்கு வாடுதே.

பிரிவால் துயருறும்:
மருதங்கேணி வடக்கு. (27047) (5.6) குடும்பத்தினர்.

## 08 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில்
30.11.1977

ஆழியின் பிடியில்
26.12.2004

அமரர்
**குமாரசாமி பிரதீபன்**

ஆழியில் அகப்பட்டு ஈர் நான்கு ஆண்டுகளாய்
ஈரவிழிகளுடன் இங்கே நாம் தவிக்கின்றோம்
இந்த உலக வாழ்வை விட்டு இறைவனடி சேர்ந்துவிட்டீர்
இனி நாம் எப்போது உம் வதனம் காண்போம்
உம்முடன் சங்கமித்த பன்னிரு உயிர்களுக்காய்
என்றும் வேண்டிடுவோம் நீர் பெறுக சாந்தி என்றே......

நீங்கா நினைவுகளுடன்
நா.குமாரசாமி (அப்பா)
குடும்பத்தினர்.

மில் ஒழுங்கை,
மல்லாகம். (27198) (5.6)

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்
25.10.1993

ஆழியின் பிடியில்
26.12.2004

செல்வன்
**நந்த கோபால் நவநீதன்**

நினைக்காத நாள் ஏது—உன் நினைவால் துடிக்காத பொழுதேது
வெடிக்காதா எமதிதயம் —நீ உறங்கி
எட்டாண்டானாலும் விடியாத பொழுதாக, மறையாத நிலவாக
உயிராய், உணர்வாய், உதிரமாய் எம்முடன் வாழ்கின்றாய்

என்றும் உன் நினைவுடன்
நந்த கோபால் (அப்பா)
அன்ன பாக்கியம் (அம்மா)
மற்றும் சகோதரர்கள், உறவினர்கள்.

செபஸ்தியார் வீதி,
கற்கோவளம்,
பருத்தித்துறை. (25574) (6.7.4)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

### கடைகள் விற்பனைக்கு

இல.42 பிரப்பங்குளம் றோட்,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்னும்
விலாசத்தில் இருக்கும் நான்கு கடைகள்
விற்பனைக்கு உண்டு. எம்மிடம் தொடர்பு
கொள்ளவும்.
தொடர்பு: உரிமையாளர்
0777651182 / 0212228821
(27204)(3.14)

## மரண அறிவித்தல்



தொட்டியடி, விசுவமடு.
தொ.பே. 077 8660 143, 0044 7572 432048

### இராமச்சந்திரன் சிவகுமார் (சிவா)

விசுவமடு 12/02, தொட்டியடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுமார் (சிவா) 24.12.2012 திங்கட்கிழமை லண்டனில் அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் இராமச்சந்திரன் - சரஸ்வதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற அம்பிகைபாகன்-சரீரதேவி தம்பதியரின் மருமகனும், துவாஜினியின் (லண்டன்) அன்புக்கணவரும், சாஜகாவின் பாசமிகு தந்தையும், விஜயகுமார் (பிரான்ஸ்), உதயகுமார், அமிர்தாம்பிகை (ஆசிரியை - முல்லைத்தீவு பாரதி வித்தியாலயம்), விமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் சீலன் (லண்டன்), சக்தி (லண்டன்), அமுதா (பிரான்ஸ்), பகீரதி (கனடா), கேதனி (மீசாலை), இராஜகோபால், சிவரூபி (குடும்ப நல உத்தியோகத்தர் - கண்டாவளை), ரசிக்குமார் ஆகியோரின் மைத்துனரும், கம்சிகா, கவியரசன், லனுசிகா ஆகியோரின் பாசமிகு பெரியதந்தையும், மிதுனகா, திசானி ஆகியோரின் மாமனும் ஆவார்.

*இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.*

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(25581 (45.6)) குடும்பத்தினர்.



# CITY COLLEGE OF ENGLISH

## ENGLISH EXAMINATIONS

UNIVERSITY OF CAMBRIDGE

Would you like to achieve a certificate in English which is valid for life. If so, the Cambridge ESOL high level English language certificates are the best choice for you.



திருமணம் செய்த இல்லத்தரசிகள் அல்லது British பிரஜைகளை திருமணம் செய்ய இருக்கும் அனைவரும் கட்டாயமாக ஆங்கிலத்தில் தேர்ச்சியடைய வேண்டும் UK Border Agency அங்கீகரிக்கும் பாடநெறி Ket (A1, A2) மட்டுமே

### KEY English Test

**A1 , A2** *U.K Settlement visa* வுக்கான பரீட்சையை *KET*
**KEY English Test** நாளாந்த English பயன் பாட்டிற்கு உகந்த பரீட்சை. பாடங்கள் *Reading and Writing Listening & Speaking.* பரீட்சையில் *70%* புள்ளிகள் பெற்று *A2 Certificale 46 - 69* வரையிலா புள்ளிகள பெற்றால் *A1 Certificat* கிடைக்கும்

| | |
|---|---|
| Date of Exam | 16th March 2013 |
| Application closing date | 20th January 2013 |
| Exam Fees | Rs 6300/= |

### Perliminary English Test

Leval B1
PET Perliminary English Test இது ஓர் Intermediate Level பரீட்சையாகும் For those who want to use English for work and study நீங்கள் B1 தகுதியைப் பெறத்தவறுமிடத்து A2 Certificate கிடைக்கும்

| | |
|---|---|
| Date of Exam | 16th March 2013 |
| Application closing date | 20th January 2013 |
| Exam Fees | Rs 7500/= |

வகுப்புகள்
02.01.2013 ல் ஆரம்பம்

| | |
|---|---|
| Course Schedule | Mon, Tue, Wed, Thu |
| Duration | 12 weeks |
| Time | Batch 1 10.30 - 12.30 |
| | Batch 2 03.00 - 05.00 pm |

Classes by: **Cambridge ESOL Certified Trainer**

# IELTS

BRITISH COUNCIL





## IELTS FOR UK STUDENT VISA APPLICANTS



We Provide

1. Examination Preparation Course Provider For British Council.
2. Cambridge Esol Certified Trainer
3. Materials approved by British Council which are quite new including Cambridge 8
4. Free IELTS pack & Mock Exams

**02.02.2013**
**IELTS** இல் யாழ்ப்பாணத்தில் பரீட்சைகள் நடைபெறும்.



அதற்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகள் இப்பொழுது நடைபெறுகின்றன.

## ESOL Diploma in English

City & Guilds

**U K விஸாவுக்கான A1 B1 English Courses**
**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

| | | |
|---|---|---|
| Course Schedule | Mon -Tue-Wed-Thu | 02.01.2013 |
| Duration | 2 Months (100 hours) | |
| Time | 8.30.10.30 a.m | |

For registration and further details contact

**CITY COLLEGE OF ENGLISH**
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)
No.43, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.
Tel. 021 2220384 / 077 8803887


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றும் திருமதி லாவண்யா சுகந்தன்

அவர்களின் அன்புத் தந்தையார்

***இளையதம்பி கந்தையா யோகராசா***

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி. (C/2073)

---

**இலங்கை நூலகச் சங்கம்**

**நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 1 – 2013**

நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் ஒன்றிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேற்படி கற்கைநெறியானது யாழ்ப்பாணம் உட்பட நாடளாவிய ரீதியில் 6 நிலையங்களில் நடத்தப்படுகிறது.

புகுமுகத் தகைமைகள்:

- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற பட்டம்
  அல்லது
- க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி அத்துடன்
- க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன், அவற்றுள் 2 திறமைச் சித்திகளை மொழி மற்றும் கணிதம் தூயகணிதத்தில் பெற்றிருப்பதுடன் ஆங்கிலத்தில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

மொழி மூலம் : தமிழ் (யாழ்ப்பாண நிலையத்தில்)
கற்கைநெறிக் கட்டணம் : ரூபா 12,500.00
விரிவுரைகளுடன் கூடிய வகுப்புக்கள் வார இறுதி நாள்களில் நடைபெறும்.

கற்கைநெறி தொடர்பான விவரங்களையும் விண்ணப்பப் படிவத்தையும் பெற்றுக்கொள்வதற்கு தயவுசெய்து ரூபா 15.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு சுயமுகவரியிடப்பட்ட கடித உறையை (9"x4"), இலங்கை நூலகச் சங்கத்தின் பெயரில் பெறப்பட்ட ரூபா 200.00 பெறுமதியானதும் 'ரொறிங்டன்(Torrington) உபதபால் அலுவலகத்தில்' மாற்றக்கூடியதுமான காசுக்கட்டளையுடன் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**Education Officer**
**Sri Lanka Library Association,**
**275/75, The Professional Centre,**
**Stanley Wijesundera Mawatha,**
**Colombo-07.**

**Tel/Fax: 011-2589103 E-mail: slla@sltnet.lk or slliba@yahoo.com**

விண்ணப்பப் படிவங்களையும் கற்கைநெறி தொடர்பான விவரங்களையும் www.slla.org.lk இணையத்தளத்திலும் பார்வையிடலாம். இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனுப்பும்போது, அத்துடன் மேற்குறிப்பிட்ட காசுக்கட்டளையும் இணைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை அனுப்புவதற்கான முடிவு திகதி 10.01.2013 ஆகும்.

திருமதி கல்பனா சந்திரசேகர்
ஒருங்கிணைப்பாளர்/யாழ் நிலையம்,
இலங்கை நூலகச் சங்கம்.

(27203)(6)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
25.01.1942

மறைவு
26.11.2012

திதி:26.12.2012

அமரர்
**அப்பாத்துரை ஞானேஸ்வரன்**
(சின்னக்கிளி)

பாசமழை பொழிந்து பாரினில் எமை – வளர்த்தீர்கள்
பாசமுடன் நாங்கள் தேட பறந்து எங்கு – சென்றீர்
கலங்கும் விழிகளுடன் இதயமது வெதும்பி–நிற்க
இறைஞ்சுகின்றோம் இறைவனிடம் என்றும்
–ஆத்ம சாந்திக்காய்

கடந்த (26.11.2012) இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் அப்பாத்துரை ஞானேஸ்வரன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (26.12.2012 ) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

'ஜனக பதி'
பாப்பா தோட்ட வீதி
இணுவில் மேற்கு, இணுவில்.

**குடும்பத்தினர்.**
(27251) (4-6)

---

## ஒளிவிழா

யாழ்ப்பாணம்டிசெ26

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலையில்நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஒளிவிழா நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

யாழ்.சாலை முகாமையாளர் செ.குலபாலசெல்வம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார். (16)

## தென்மராட்சி முஸ்லிம்களுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை

தென்மராட்சிடிசெ26

மீளக்குடியமர்ந்த முஸ்லிம் குடும்பங்களுக்கு இரண்டு வருடங்களாகியும் இதுவரை மின்சார வசதி தரவில்லையென தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் அமைதி நிலை திரும்பியதை அடுத்து தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 27 குடும்பங்கள் சாவகச்சேரிக்கு வந்து அங்குள்ள பள்ளிவாசல் காணியில் தற்காலிக கொட்டில்களை அமைத்தும் ஏற்கனவே சேதமடைந்த நிலையில் காணப்பட்ட வீடுகளைப் புனரமைத்தும் தங்கியுள்ளன.

இடப்பெயர்வுக்கு முன்னர் தமது வீடுகளுக்கு மின்சாரம் பெற்றிருந்ததால் தமக்கு மின்சாரம் வழங்குமாறு மின்சார சபையிடம் கோரியுள்ளனர்.

தற்போது மின் விநியோகம் செய்வதற்கு விண்ணப்பம் செய்வோர் காணி உறுதியில் புகைப்பட பிரதி இணைக்கப்படுவது அவசியம் எனக் காரணம் காட்டி மின்சாரம் வழங்க மறுத்து விட்டனர்.

மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்கள் சாவகச்சேரி பள்ளிவாசலுக்கு சொந்தமான காணியில் குடியிருப்பதை சுட்டிக் காட்டிய போதிலும் மின்சாரம் வழங்க மறுத்து விட்டனர் எனத் தெரிவித்த முஸ்லிம் குடும்பங்கள் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சாரம் இலவசமாக வழங்கப்பட்டுவருகின்றது.

இந்த நிலையில் தாம் மின்சாரம் பெறுவதற்கு பணம் செலுத்துவதாக கூறிய போதும் காணி உறுதிகளைக் காரணம் காட்டி மின்சாரம் வழங்க மறுத்துவிட்டனர் எனவும் தெரிவித்தனர். (ம-9)

---

# மனதை விட்டு மறையா இரண்டாம் ஆண்டு நினைவுத் தூவல்



மண்ணில்
12.06.1979

மனதில்
26.12.2010

அமரர் **பத்மநாதன் புஸ்பாகரன்**(புஸ்பா)

(சா.ப.நோ.கூ. சங்க எரிபொருள் நிரப்பு நிலைய முன்னாள் பணியாளர்)

உயிருக்கு உயிராகி எம் நினைவினில் வடுவாகிப் போன
எம் ஆருயிர் நண்பா....புஸ்பா.....
ஆண்டுகள் நூறு வாழ்வாயென நாமிருக்க
பாதிவயதினில் உன்னைக் காலன் அழைத்தானோ ?
நண்பா....ஆண்டுகள் இரண்டு ஆகியது
இன்னும் உன்னை மறக்க முடியவில்லை
எத்தனை ஆண்டுகள் உருண்டோடினாலும்
கண்ணீருடன் காத்திருப்போம் நீ மீண்டும் வருவாயென....

ஓம் சாந்தி!

எரிபொருள் நிரப்பு நிலையம்
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்
நண்பர்கள்.

(18096)(5.96)

---

# மரண அறிவித்தல்



**கதிர்காமு பாலகிருஷ்ணன்**(S.K)

( இளைப்பாறிய களஞ்சியக்காப்பாளர் -புலோலி ப.நோ.கூ. சங்கம்)

புலோலிதெற்கு, குரும்பகட்டியைப் பிறப்பிடமாகவும் தம்பசிட்டி வீதி, அல்வாய் கிழக்கு (பெற்றார் இல்லம்) வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு பாலகிருஷ்ணன் நேற்று முன்தினம் 24.12.2012 காலமாகிவிட்டார்.

அன்னார் அன்னபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கதிர்காமு - பொன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், பாலமுரளி (லண்டன்), பாலமுகுந்தன் (சுவிஸ்), யசோதா (கண்டி), பாலகரன் (லண்டன்), பாலகுகன் (லண்டன்), பாலஜோதி (லண்டன்), பாலதீபன் (லண்டன்), வனிதா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாமினி (லண்டன்), புஸ்பராணி (சுவிஸ்), சுதாகரன் (ஆசிரியர் - கண்டி), ஜெயந்தி, நிஷாந்தினி (லண்டன்), விஜேந்திரன் (லண்டன்) ஆகியோரின் மாமனும், அக்ஷயா, நிமேசா (லண்டன்),கிஷாந், அபிமஷ் (சுவிஸ்), யதுர்ஷன், சாஷன், அபிர்சா (கண்டி), தனுஷிகா, தஸ்மினி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், சிவஞான தேவியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற துரைராசா மற்றும் சிவராசா, நடராசா, காலஞ்சென்ற தேசியதிலகம் மற்றும் நித்தியலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2012) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக மந்திகை கருகம்பன் இந்து மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

தம்பசிட்டி வீதி, அல்வாய் கிழக்கு, அல்வாய்.

(ம/5072) (45.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி தெய்வானைப்பிள்ளை கந்தையா



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை கந்தையா நேற்று முன்தினம் (24.12.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான பூதத்தம்பி - பூரணம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான செல்லப்பா - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற செல்லப்பா கந்தையாவின் அன்பு மனைவியும் பாஸ்கரன் (சுவிஸ்), பிரபாகரன் (சுவிஸ்),சுதாகரன் (கமநல அபிவிருத்தி திணைக்களம், வவுனியா),மீனலோஜினி (கனடா), கிருபாகரன் (லண்டன்) ,கிருஸ்ணவேனி(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் மாலா,குலநாயகி ,கலையரசி, முருகரட்ணம்,ஜெயதீபா, பார்த்தீபன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ் சென்றவர்களான கதிரவேலு ,கந்தையா மற்றும் பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திலகவதி, நாகபூசனி,குமாரசுவாமி ஆகியோரின் மைத்துனியும் அபிமன்யு, அபிவர்மன், கரிகரன், சிவசங்கரி, கரிசங்கர், சாரங்கன்,சாரங்கா,பைரவி, கஜானன் ,அச்சுதன், கிருத்திகா , ஆர்த்திகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12.2012) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்குஅவரது இல்லத்தில்நடைபெற்று பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: 0776993861,0778279997

தகவல்: பிள்ளைகள்.

(த/5014) (6.4)

## மலேரியா தடுப்பு நடவடிக்கை மும்முரம்

வலி.தென்மேற்கு,டிசெ.26

யாழ்.மாவட்டதில் மலேரியா நோயை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை மேற் கொண்டுள்ள மலேரியா தடுப்புப் பிரிவினர் இந்த நோய் மேலும் பரவாமல் தடுக்கும் நோக்குடன் இனங்காணப்பட்ட இடங்களில் இரத்தப்பரிசோதனை நடத்துவதிலும் தடுப்பு மருந்து விசிறுவதிலும் ஈடுபட்டுள்ளனர்.

வெளி நாடுகளுக்கு சென்று வருபவர்கள் மூலம் இந்த நோய் யாழ்.மாவட் டத்திலும் பர வுகிறது. இதைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் கொழும்பிலுள்ள மலேரியா தடுப்பு தலைமைப் பணியகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய இனங்காணப்பட்ட இடங்களில் இரத்தப் பரிசோதனையும் தடுப்பு மருந்து விசிறலும் இடம்பெற்று வருகின்றன.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் போன்ற இடங்களிலுள்ள தொல்புரம், விளான், மானிப்பாய், நாவற்குழி, தாவடி, கரவெட்டி, மல்லாகம் ஆகிய பகுதிகளில் நோய்த்தாக்கத்துக்குள்ளானவர்கள் இனங் காணப்பட்டு ஒரு கிலோ மீற்றர் சுற்று வட்டாரத்துக்கு இரத்தப் பரிசோதனையும் தடுப்பு மருந்து விசிறும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-115)

## வாடகைக்கு

மகேந்திரா மக்சிமோர் வாகனம் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0777741389

(27263) (6.4)

## தவறிவிட்டது

3 ஆம் கட்டையடி, மானிப்பாய் வீதி, ஆனைக் கோட்டையைச் சேர்ந்த சின்னராசா சிறீதரன் என்பவரது மருத்துவ அறிக்கைக் கொப்பி (சுகர்னி மருத்துவ நிலையம்) தட்டாதெரு சந்திக்கும் ஆறுகால் மடத்திற்கும் இடையில் (24.12.2012) அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொண்டுதந்துதவவும்

T.P:077 6595256.

(27261) (6.4)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 06 . 03 . 1987

இறப்பு 30 . 12 . 2009

### அமரர் தில்லையம்பலம் விஜேந்திரன் (வினோதன்)

திதி :சதுர்த்தசி [26.12.2012]

வானக்கதவுகள் திறந்தாலும்
வான் ஒளிகள் வையத்துள் வீசினாலும்
நீ இல்லாத எங்கள் குடும்பத்தில்
உன் நினைவலைகள் என்றுமே நிலைத்திருக்கும் .

நிரந்தர முகவரி: அம்பன்,குடத்தனை.
தற்காலிக முகவரி: மாளிகைத்திடல் குடத்தனை.

குடும்பத்தினர்.

(27262) (6,4)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

NP GB XXXX இலக்க பஜாஜ் ஸ்கூட்டி விற்பனைக்குண்டு. விலை 68000/=

T.P- 0774735228

(27730)


## வேலைத்திட்டத்துக்கு உணவுப் பொருள்

யாழ்ப்பாணம், டிசெ.26

உலக உணவுத் திட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்ட வேலைத் திட்டங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளதாகயாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி சபைகளின் ஊடாக கிரவல் வீதிகள் உலக உணவுத் திட்டத்தின் கீழ் மக்கள் பங்களிப்புடன் அமைக்கும் பணிகள் நடைபெற்றன.

மேற்படி வீதி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்ட உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 31ஆம் திகதி முதல் சம்பந்தப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கு ஊடாக உலர் உணவு பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான சகல ஏற்பாட்டையும் ஐ.நா. உலக உணவுத் திட்டப்பிரிவும் யாழ். செயலகமும் இணைந்து துரிதமாக மேற்கொண்டு வருகின்றன. (41)

## மரண அறிவித்தல்

### பொன்னையா மகேஸ்வரன்

(ஓய்வு பெற்ற இ.போ.ச. லிகிதர்)



சரசாலையைப் பிறப்பிடமாகவும், சந்தா தோட்டம் புலோலி வடகிழக்கு, புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா மகேஸ்வரன் கடந்த (24.12.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லமுத்து தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - மனோன்மனி தம்பதியரின் மருமகனும், ரஜீந்திராவின் அன்புக் கணவரும், மதனிக்கா, மங்கனிக்கா, ரமணன் (பொலிஸ்- சுன்னாகம்), மயூரி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தேவரத்தினம், லீலாவதி (தையல் ஆசிரியர், பிரதேச செயலகம் -கரவெட்டி), யோகேஸ்வரி (ஆசிரியை-சரசாலை), ஜெயந்திரா (முன்பள்ளி ஆசிரியை-சரசாலை), ஆகியோரின் அன்புச் சகோதரரும், இந்திரசேகரா, றெஜீனா, தெய்வேந்திரம் (ஓய்வுபெற்ற சாரதி இ.போ.ச.) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2012) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தா தோட்டம், புலோலி
வடகிழக்கு, புலோலி, பருத்தித்துறை.
0772298869.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் குணம்



தெல்லிப்பழை துர்க்காபுரம் மகாதனையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் குணம் அவர்கள் நேற்று (25.12.2012) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் சுப்பிரமணியம் இராமலிங்கம் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்/ பொலிஸ் பெரியப்பா/ பொலிஸ்ஐயா) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- விசாலாட்சி தம்பதியரின் சிரேஷ்ட மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் -விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், சந்தானகிருஷ்னன் (Instructor- vavuniya Campus, University of Jaffna) சுரேந்திரன், உஷாந்தினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார். சண்முகநாதன், தனபாக்கியம், காலஞ்சென்றவர்களான பரஞ்சோதிநாதன், சிதம்பரநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற கந்தசாமி, மற்றும் சண்முகம், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் இரத்தினம், கிருஷ்ணமூர்த்தி (சுழிபுரம்), உமாதேவி, காலஞ்சென்ற நகுலேஸ்வரி ஆகியயோரின் பாசமிகு மைத்துனியும், இளங்கோவன் (பிரான்ஸ்), வாமவேதன் (கனடா), மதிசுதன், விஜயராணி, பிறேமா, நாகேஸ்வரி, சுரேந்திரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியும், செல்வராணி, பவளராணி, உஷா, உமாசுதன் ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2012) புதன்கிழமை மு.ப11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை கற்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகாதனை, துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.
0776660456.

தகவல்:
இ.சந்தானகிருஷ்ணன்
(Instructor- vavuniya Campus)

(27629)

## திருவாசக முற்றோதல்

வடமராட்சி,டிசெ.26

புலோலி வடமேற்கு வில்வபாதி அருள்மிகு முருகன் ஆலயத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெறும் விசேட பூசையைத் தொடர்ந்து 8 மணி முதல் திருவாசகம் முற்றோதல் நடைபெறும். (ம-8)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## தவறிவிட்டது

(27265)

சில்லாலைவீதி பண்டைத்தரிப்பு முத்தையா கிருபாகரன் (712320729V) என்பவருடைய தேசியஅடையாள அட்டை வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வாகனக் காப்புறுதிப்பத்திரம் வாகன வரிப்பத்திரம் உத்தியோக அடையாளஅட்டை என்பனஅடங்கிய பேஸ் மானிப்பாய்க்கும்சில்லாலைக்கும் இடையில் 16.12.2012 அன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உடன் தொடர்பு கொள்ளவும்

தொ.பே: 0773265988,0213007216

## BEACON STUDY CENTRE

வதிரி கரவெட்டி

**2015 A/L**

கணித,உயிரியல் பிரிவுகள்
ஆரம்பம்
28.12.2012(வெள்ளி)
காலை
8.00மணி


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பிரதி அதிபர்
திரு.ஜே.பிரபாகரன்
அவர்களின் அன்பு மாமனார்
கந்தையா துரைநாயகம்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/பூம்புகார் அ.த.க பாடசாலை
அரியாலை.

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
14 ★ 02 ★ 1984



உதிர்வு
26 ★ 12 ★ 2004

அமரர் செ.நிக்ஷன் ராஜ செல்வம்

புவிதனில் நீ வாழ்ந்த காலத்தின் சுவடுகள்
அழியாத நினைவுகளாய் எம்மோடு இருக்கையில்
நீ மட்டும் எங்கு சென்றாய் கடலன்னை உனக்கு
காலனாய் ஆனதனால் காற்றோடு கலந்தாயோ
எமை விட்டு சென்றாயோ ஈர் நான்கு ஆண்டுகள்
இன்றோடு ஆனாலும் ஆறாது உன் நினைவு
அழுயாது எமைவிட்டு

6ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

இவரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.



உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111


## நீரிழிவு நோயாளர்களுக்கான அறிவித்தல்

### கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்.


கூட்டுறவு வைத்தியசாலை மூளாய் நீரிழிவு சிகிச்சை நிலையமானது அதன் நீரிழிவு நோயாளர்களுக்கான நீரிழிவுக் கட்டுப்பாட்டினையும் அவர்களின் சிறுநீரக நிலைமையினையும் அறிவதற்கான பரிசோதனைகளையும் எதிர்வரும் 27.12.2012 வியாழக்கிழமை மற்றும் 31.12.2012 திங்கட் கிழமை ஆகிய இரு நாட்களும் காலை 8.00மணி பகல் 1.00மணிவரை நடாத்தத் திட்டமிட்டுள்ளது. எனவே அன்றைய தினம் இச்சிகிச்சைநிலையத்துக்குரிய நோயாளர்களுக்கான பரிசோதனைகள் யாவும் இலவசமாக நடைபெற விருப்பதனால் எமது நீரிழிவு சிகிச்சைப்பகுதிக்குரிய அனைத்து நோயாளர்களையும் தவறாது இதில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

பணிப்பாளர் சபை.



## சாமியே சரணம் ஐயப்பா

### யாழ் சபரீச ஐயப்பன் தேவஸ்தானம் கோண்டாவில் வருடாந்த மகரஜோதி மண்டலபூசை பெருவிழா



26.12.2012 இன்று புதன்கிழமை நல்லூர் வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் ஐயப்ப சுவாமிமார்களுக்கு இரு முடிகட்டி பஜனை படிப்பூசை நடைபெற்று சுவாமிமார்களுக்கும் அடியார்களுக்கும் அன்னதானம் வழங்கப்படும். ஐயப்பனை யானை மேல் வைத்து சுவாமிமார்களும் அடியார்களும் மங்கள வாத்தியங்கள் வான வேடிக்கைகளுடன் வீதிவலம் வருவார் பருத்தித்துறை வீதியாக வந்து ஆஸ்பத்திரி வீதியாலூம் கஸ்தூரியார் வீதியாலும் நாவலர் வீதி[illegible] தேவஸ்தானத்தை வந்தடைவார் என்பதை அன்புடன் அறி[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவாளர் திணைக்களத்தின் கீழான பதிவுகளுக்கு கட்டணம் உயர்வு

யாழ்ப்பாணம், டிசெ.26

திருமணப் பதிவு, காணிப்பதிவு உட்பட பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் கீழான அனைத்துப் பதிவுகளுக்குமான கட்டணங்களும் பெரிய அளவில் அதிகரிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இந்த அதிகரிப்பு அமுலுக்கு வருகிறது.

திருமணப் பதிவு, காணிப்பதிவு, பிறப்பு-இறப்பு பதிவு என்பன பெரிய அளவில் அதிகரிக்கப்படவுள்ளதுடன் காணிப்பதிவகத்தில் உறுதிகள் பிரதி செய்தல், பிரதி பெறுதல், பதிவு செய்தல் என்பனவற்றுக்கான கட்டணங்களும் அதிகரிக்கப்படவுள்ளன.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட புதிய வரவு-செலவுத் திட்டத்தில் இவற்றுக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளமை தொடர்பான விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இவற்றுக்கான கட்டணங்கள் மிகக் குறைந்த அளவிலேயே அறவிடப்பட்டு வருகின்றன. கட்டண அதிகரிப்பும் இருக்கவில்லை.

அதனால் புதிய வரவு-செலவுத் திட்டத்தின் படி இவற்றின் பதிவுகள், பிரதிகளுக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவித்தார். (ம-4)

## பாவனைக்கு உதவாத தேயிலை; இருவர் கைது

பாவனைக்கு உதவாத 3 ஆயிரம் கிலோகிராம் நிறையுடைய தேயிலைத்தூளுடன் சந்தேகநபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த சம்பவம் காலி, ஹினிதும, கொரலேகம பிரதேசத்தில்நேற்று இடம்பெற்றுள்ளது.

மேற்படி தேயிலைத் தூள் அடங்கிய பொதிகளை லொறியொன்றில் ஏற்றிக்கொண்டு ஹினிதும பிரதேசத்திலிருந்து அம்பலாங்கொடை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த வான் ஒன்றை பொலிஸார் சோதனையிட்டனர். அதன்போதே குறித்த தேயிலை பாவனைக்கு உதவாதது என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த வானின் சாரதி உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் லொறியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ங-16)

# அரச அலுவலர்களுக்கு ஆங்கில மொழிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.26

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு 'ஸ்ரெப்ஸ்' நிறுவனம் ஊடாக அரச அலுவலர்களுக்கு ஆங்கில மொழிப் பயிற்சி வழங்கவுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் மற்றும் கற்கை நெறி நிர்வாகி சி. ஜீ.ஞானரூபன் ஆகியோர் இதற்கான நடவடிக்கைணை முன்னெடுத்துள்ளனர்.

அரச திணைக்களங்கள் உள்ளூராட்சி சபைகளில் கமையாற்றும் பணிப்பாளர்கள்

### மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை

,செயலாளர்கள், ஆணையாளர்கள் , நிர்வாக அலுவலர்கள், வெளிக்கள அலுவலர்கள், தொழில் நுட்ப அலுவலர்கள் தரத்தில் உள்ளவர்களாகவும் ஆகக்குறைந்தது ஆங்கிலத்தில் பேசத் தெரிந்தவராகவும் எழுதத்தெரிந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

விருப்பம் தெரிவிக்கும் அலுவர்களின் பெயர் விவரங்களை குறிப்பிட்டு எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் விவரங்களை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதற்கான ஆள் சேர்ப்புப் பரீட்சை ஜனவரி 9 ஆம் திகதி புதன் கிழமை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## ரயில் மோதி இளைஞர் சாவு

வாத்துவ, தல்பிட்டிய பகுதியினூடாகப் பயணித்துக்கொண்டிருந்த 'காலி குமாரி' கரையோர ரயில் மோதியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.சம்பவத்தில், திவுலபிட்டிய பகுதியைச் சேர்ந்த இளைஞரே உயிரிழந்துள்ளார்.

ரயிலில் மோதுண்ட குறித்த இளைஞனின் உடல், இரண்டு பகுதிகளாக வேறுபட்டதாகவும், அதில் ஒரு பகுதி, பாலத்திலிருந்து கீழே விழுந்துள்ளதாகவும் நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை வாத்துவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ங)

## விமான விபத்தில் 27 பேர் சாவு

கஸகஸ்தானில் இடம்பெற்ற விமான விபத்தில் 20 எல்லை பாதுகாப்புப்படையினர் உட்பட 27 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றது.

அன்டனோ-72 ரக விமானப்படை விமானமொன்றில், முன்னாள் சோவியத் நாடுகளின் எல்லைப் பாதுகாப்புப்படைபதில் தலைவராக செயற்பட்டுவரும் கேணல் துர்ஹன் பெக் ஸ்டம்பெகோ தலைமையிலான 20 எல்லைப் பாதுகாப்புப்படை அதிகாரிகளும் 7 விமான ஊழியர்களும் அஸ்டானாவிலிருந்து புறப்பட்டனர்.

விமானம் செய்ம்கென்ட் பிரதேசத்தில் விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்துள்ளனர்.

சுமார் 800 மீற்றர் உயரத்தில் பயணித்துக்கொண்டிருந்த குறித்த விமானம் வெடிச்சத்தத்துடன் கீழே விழுந்து நொருங்கியதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்கான காரணத்தினை உடனடியாக அறிய முடியவில்லை எனவும் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்றுவருவதாகவும் கஸகஸ்தானின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)


NALIN INFORMATION TECHNOLOGIES
195/2,Palaly road, Parameswara Junction, Jaffna.
TP-0212221166 / 0777667974

நளின் நிறுவனத்தின் அறிவித்தல்

எமது நிறுவன உத்தர வாதம், திருத்த வேலைகளை, சேவைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் எம்மிடம் 2011, 2012, ஆகிய காலப்பகுதியில் ஒப்படைத்த கணனி, கணனி உதிரிப்பாகங்களை உரிய பற்றுச்சீட்டு, உத்தரவாத பற்றுச்சீட்டு என்பவற்றை காட்டி 26.12.2012 தொடக்கம் 13.1.2013 வரையான காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு- எமது நிறுவன உத்தரவாத முத்திரை பொறிக்கப்பட்ட கணனி உதிரிப்பாகங்களை நீங்கள் எந்த நிறுவனத்தில் கொள்வனவு செய்திருந்தாலும் அதற்கான உத்தரவாதத்தினை எம்மிடம் நேரடியாக பெற்றுக்கொள்ள முடியும்
(நிபந்தனையின் அடிப்படையில்)


## மரண அறிவித்தல்



### அருட் சகோதரி கேட்றூட் கூஞ்ஞ தி.கு.

தலைமன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். திருக்குடும்பசபைச் சேர்ந்தவரும், வவுனியா திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் வசித்தவருமான அருட் சகோதரி கேட்றூட் கூஞ்ஞ நேற்று முன்தினம் (24.12.2012) திங்கட் கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரது பூதவுடல் இன்று (26.12.2012) புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு வவுனியா இறம்பைக்குளம் திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் இருந்து வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு பி.ப. 3.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் வவுனியா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருட் சகோதரி போலின் மத்தியாஸ் (மாகாணத் தலைவி)
121, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### கந்தசாமி கிங்ஸ்லி கணேசன்

(முன்னாள் மாநகரசபை உறுப்பினர்)



முன்னாள் மாநகரசபை உறுப்பினரும், வைரவர் கோவில் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கிங்ஸ்லி கணேசன் நேற்று (25.12.2012) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி- புவனேஸ்வரி தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்- தெய்வானை தம்பதியரின் மருமகனும், வான்மதியின் அன்புக் கணவரும், விநோத்கணேசன் (பொலிஸ் பயிலுநர்), கிசோக்கணேசன், மனோஜா, டிலான்கணேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், லெஸ்லிகணேசன் (சுகாதார மேற்பார்வையாளர், மாநகரசபை யாழ்.), குமாரிராதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் புவனேஸ்வரன் (சுகாதார மேற்பார்வையாளர் யா.மா.ச), பூவேந்திரன், ஜெயச்சந்திரன், ரவீந்திரன், இராஜேந்திரன் (பொதுநூலகம் யா.மா.ச), கோமதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2012) புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல-05, வைரவர் கோவில் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

தகவல்:
கி.விநோத்கணேசன் (மகன்)

(27629)

## 7ம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 24 • 06 • 1946

உதிர்வு 12 • 01 • 2006

### அமரர் சின்னத்தம்பி நடராசா

(ஒய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

ஆண்டுகள் ஏழு ஓடிவிட்டன
ஆனாலும் உங்கள் நினைவு
எங்கள் உயிர் உள்ளவரை
அழியாது.....
ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

குடும்பத்தினர். கச்சாய் வீதி, கொடிகாமம்.


கொடிகாமத்தில்...
டிஜிற்றல் பனர் பிறிண்டிங்

Sekaran Graphic



10 நிமிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சதுரஅடி 40/= ,55/=, 70/=

3 வருட உத்தரவாதம், உயர்தரம்
கச்சாய் வீதி, கொடிகாமம்.
(கொடிகாமம் சந்தியிலிருந்து 500 M தூரத்தில்)
T.P - 0212050399
0779405802
Email - psivasekaran@gmail.com



அனேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க
இன்று முதல் - 31-12-2012 வரை YEAR END SALE கையிருப்பு உள்ளவரை மட்டுமே...
புதிய தளபாடங்கள் வாங்குவதற்கு ஆசை. ஆனால் பழைய தளபாடங்கள் இருக்கின்றதே என்ன செய்வது என்று கவலையா? கவலையை விடுங்கள்.
பழைய தளபாடங்கள் நல்ல விலைக்கு வாங்கப்படும்.
அனைத்து தளபாடங்களுக்கும் விசேட விலைக்குறைப்பு
இச்சலுகை 31.12.2012 வரை மட்டுமே.
நம்ப முடியாத விலைகளில் வெளிநாட்டுத் தளபாடங்கள்.
காட்சியறை
FRRE HOME DELIVERY
0212228367
0214921108
இல536, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
SINGER SHARP மின்னியல் சாதனங்கள் அனைத்துக்கும் விசேட விலை குறைப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணை வழங்கக்கோரி இலங்கையர் சென்னை நீதிமன்றில் மனுத்தாக்கல்

விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் அண்மையில் தமிழகத்தில் கைது செய்யப்பட்ட தமிழர் ஒருவர் தமக்கு பிணை வழங் கக்கோரி சென்னை மேல்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்

சீரா என்று அழைக்கப் படும் சுரேஸ்குமார் என்பவரே இந்த மனுவை நேற்று முன்தினம் திங்கட்கிழமை தாக்கல் செய்தார். அவர் ஏனைய மூன்று பேருடன் அண்மையில் தமிழக கியூ பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தநிலையில் சென்னைக்குத் தப்பிவந்ததாகக் கூறப்படும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் என்று பொலிஸ் சந்தேகிக்கும் உதய சங்கர் என்பவர், தம்மை சென்னையில் வைத்து சந்தித்ததாக தமது மனுவில் குறிப்பிட்டுள்ள சுரேஸ் குமார், தாம் எவ்வித குற்றச் செயல்களிலும் ஈடுபட வில்லை என்று தெரிவித் துள்ளார்.

தாம் ஒரு அகதியாக மாத்திரமே தமிழகத்தில் தங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம் பெற்ற போரின் போது குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் இரண்டு கால்களையும் இழந்த தாம், உடல் ரீதியாக கஸ்டப்படுவதாக குறிப்பிட்டுள்ள அவர் சக்கர நாற்காலியின் மூலம் நடமாடும் தமக்கு விளக்கமறியல் வாழ்க்கை கஸ்டமானதாக இருப்பதாக குறிப்பிட்டுள் ளார். (வ)

# தேவாலயத்துக்கு மின்இணைப்பு


வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள இரு தேவாலயங்களுக்கு கடந்த சனிக்கிழமை தொடக்கம் மின்இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் ஒன்றான செம்பியன்பற்று புனித பிலிப்நேரியார் தேவாலயம் மற்றும் தாளையடி புனித அந்தோனியார் தேவாலயம் ஆகியவற்றுக்கே மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. (ம-8)

ஈழ அகதிகள் மீதான கியூப் பிரிவின் நடவடிக்கை நிறுத்தாவிடில்

# மீண்டும் போராட்டத்தில் குதிப்போம்

## சீமான் எச்சரிக்கை



ஈழ அகதிகள் மீதான கியூ பிரிவின் நடவடிக்கைகளை தமிழக முதல்வர் தடுத்து நிறுத்தாவிடில் மீண்டும் போராட்டத்தில் குதிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் காட்டமாகத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் நீண்டகாலமாக சட்டத்துக்குப் புறம்பாக தமிழ்நாடு பொலிஸின் கியூ பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் 7 பேர், தங்களை சாதாரண முகாம்களுக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையுடன் மீண்டும் சாகும்வரை பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஐயத்தின் போரிலும், ஈழத்துக்கு மண்ணெண்ணை, இரத்தம் கடத் தினார்கள் என்ற பெயரிலும் பல ஈழத் தமிழ் சொந்தங்கள் சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நீதிமன்றத்தில் பிணையில் விடுதலை பெற்ற நிலை யிலும் விடுவிக்கப்படாமல் இருக்கும் அவர்களை தமிழக அரசு விடுதலை செய்ய வேண்டும் என்று நாம் தமிழர் கட்சி பல போராட்டங்களை நடத்தி விட்டது. அவர்களும் பல முறை இப்படி சாகும் வரை பட்டினிப் போராட்டம் நடத்தி, அதனால் உடல் நிலை, மன நிலை பாதிக்கப்பட்டு அடைபட்டுக்கிடக்கின்றனர்.

அவ்வப்போது சிலரை விடுவித்தது தவிர, பெரும்பாலோர் இன்னமும் தனிமை சிறையில் தடுத்தே வைக்கப்பட்டுள்ளனர்.

அதன் எதிரொலியே தற்போது மீண்டும் பட்டினிப் போராட்டம் நடைபெற்று வருகிறது. கியூ பிரிவு எமது ஈழத் தமிழ் சொந்தங்களுக்கு எதி ரான தனது அராஜகமான, சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகளைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

நாம் தமிழர் கட்சியைப் பொறுத்தவரை இப்படிப் பட்ட சட்டத்திற்குப் புறம்பான, மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளை தமிழக அரசு தடுத்து நிறுத்த வேண்டும் எண்று பலமுறை வேண்டுகோள் விடுத்து விட்டது.

தமிழ் நாட்டில் தஞ்சமடைந்துள்ள ஈழத் தமிழ் சொந்தங்களுக்கு பல்வேறு சலுகைகளை அறிவிக்கும் தமிழக முதல் வர், மற்றொரு பக்கத்தில் கியூ பிரிவால் அவர்கள் வதைக்கப்படுவதை தடுத்த நிறுத்த எந்த நடவடிக்கை யும் எடுக்காதது ஏன்? இதற்குப் பிறகாவது கியூ பிரிவின் நடவடிக்கைகளை தமிழக முதல்வர் தடுத்து நிறுத்த வேண்டும் என்று நாம் தமிழர் கட்சி வேண்டு கோள் விடுகிறது. எமது வேண்டுகோள் செவிசாய்க் கப்படவில்லையெனில் மீண்டும் போராட்டத்தில் குதிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறோம் - என்றுள்ளது. (வ)

# தென்மராட்சி சமூக சேவைப் பிரிவால் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு உதவி

## புள்ளிவிவரங்கள் தகவல்

தென்மராட்சி,டிசெ.26

தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினர் இந்த வருடம் 18 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்கியுள்ளனர் என்று புள்ளி விவரங்கள் மூலம் அறியமுடிகிறது.

மத்திய சமூக சேவைகள் திணைக்களம், தேசிய முதியோர் செயலகம், தேசிய அங்கவீனர்களுக்கான செயலகம், மாகாண சமூக சேவைகள் திணைக்களம், யுனிசெவ் நிறுவனம், கியூ மெடிக்கா நிறுவனம் மாவட்ட செயலகம் ஆகியவற்றால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் பிரகாரம் பிரதேச மக்களுக்கு உதவிகளை வழங்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதேசத்தைச் சேர்ந்த 428 புதிய பயனாளிகள் உட்பட 2 ஆயிரத்து 381 பேருக்கு மாதாந்தம் 250 ரூபா தொடக்கம் 500 ரூபா வரை பொது சன மாதாந்த உதவிப்பணம் வழங்கப்படுகிறது.

புற்று நோயால் பாதிக்கப்பட்ட 30 புதிய பயனாளிகள் உட்பட 120 பேருக்கு 500 ரூபா தொடக்கம் 750 ரூபா வரை நோய்க்கான கொடுப்பனவாக வழங்கப்படுகிறது.

மாற்று ஆற்றல் உடையோர் 34 பேருக்கு மாதாந்தம் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் உதவிகள் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

மத்திய சமூக சேவைகள் திணைக்களத்தின் தேசிய அங்கவீனர்களுக்கான செயலகத்தால் பிரதேசத்தைச் சேர்ந்த 14 மாற்று ஆற்றல் உடையயோருக்கு சுய தொழில் உதவிக் தொகையாக தலா 25 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது.

அத்துடன் பிரதேசத்தைச் சேர்ந்த மாற்று ஆற்றல் உடையோருக்கான வீடமைப்பு திட்டத்துக்கென ஒருவருக்கு புதிய வீடு அமைக்க 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் இருவருக்கு வீடுகள் புனரமைக்க ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண சமூக சேவை திணைக்களத்தால் மாற்று ஆற்றல் உடைய 6 பேருக்கு சக்கர நாற்காலியும், 9 பேருக்கு மூன்று சில்லு சைக்கிளும் வழங்கப்பட்டன.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பெண்களை தலைமைத்துவக் குடும்பமாக கொண்ட அதிக பிள்ளைகளைக் கொண்ட 23 குடும்பங்களுக்கு சுயதொழில் உதவிக் கொடுப்பனவாக தலா 25 ஆயிரம் ரூபா வீதமும், ஒருவருக்கு உணவு பதனிடும் தொழில் நடத்த 15 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

அத்துடன் யுனிசெவ் நிறுவன உதவியுடன் வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் அதிக பிள்ளைகளைக் கொண்ட பெண் தலைமைத்துவத்தைச் சேர்ந்த மாற்று ஆற்றல் உடைய 12 குடும்பங்களுக்கு 35 ஆயிரம் ரூபாவிலிருந்து 40 ஆயிரம் ரூபா வரை சுயதொழில் உதவிக் கொடுப்பனவாக வழங்கப் பட்டது.

அத்துடன் தற்செயல் நிவாரண உதவியாக 9 குடும்பங்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதமும், இடர்களால் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் பாய், தறப்பாள், படுக்கை விரிப்பு ஆகியவையும் வழங்கப்பட்டன.

தேசிய முதியோர் செயலகத்தால் பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதுக்கு மேற்பட்ட ஆயிரத்து 564 பேருக்கு கடந்த ஜூன் மாதம் தொடக்கம் தலா ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது.

பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுக்கு மேற்பட்ட முதியோர் 112 பேருக்கு அவர்களின் விருப்பத்தின் பேரில் முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. இதுவரை ஆயிரத்து 907 பேருக்கு முதியோர் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதேச செயலகத்தின் இந்த வருட முதியோர் மற்றும் மாற்று ஆற்றல் உடையோர் தின விழாவில் கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 60 முதியவர்களும், 60 மாற்று ஆற்றல் உடையவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

மாற்று ஆற்றலுடைய 60 பேருக்கு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் தலா ஆயிரம் ரூபா வீதம் வழங்கியிருந்தனர்.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் பிரதேசத்தைச் சேர்ந்த 800 இற்கு மேற்பட்ட மாற்று ஆற்றல் உடையோருக்கு அடையாள அட்டைகள் விநியோகிக் கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-9)

# தேர்தல்கள் திணைக்களம் அக்கறையுடன் செயற்படுகிறது

தேர்தல்கள் திணைக்களத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை ஒன்று தொடர்பில் கடந்த 21 ஆம் திகதி உதயனின் 12 ஆம் பக்கத்தில் வெளியான 'இதுதான் உங்கள் நல்லிணக்கமா' என்ற தலைப்பிலான பத்திக்கு தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய விளக்கம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். அந்த விளக்கக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

உள்ளூர் அதிகார சபைகளின் உறுப்புரிமை வெற்றிடங்களை நிரப்புகின்றமை தொடர்பான அறிவுறுத்தல்கள் உள்ளூர் அதிகார சபைகளின் ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கு அனுப்பப்படுவதற்காக சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட உரிய சுற்றறிக்கையின் தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பு எமது திணைக்களத்தின் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் ஜனாப் எம்.எம். மொஹமட்டினால் மேற்கொள்ளப்படவிருந்தது. அவர் அந்த நாள்களில் சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தமையால் வேறொருவரினால் மேற்கொள்ளப்பட்ட மொழிபெயர்ப்பின் பிழையற்ற தன்மை தொடர்பாகத் திருப்தியடைய முடியாமற் போனமையால் ஜனாப் மொஹமட் வைத்தியசாலையில் இருந்த போதே அவர் மூலம் அந்த மொழிபெயர்ப்பு முறையாக சீர்படுத்தப்பட்டது. அக்காலப் பகுதிக்குள் சிங்கள மொழிபொருத்தமான பிரதேசங்களுக்கு மாத்திரம் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இதற்கிடையில் தமிழ் மொழிபெயர்ப்பு கிடைக்கப்பெறும் வரை தமிழ் மொழி மூலம் அரசபணி ஆற்றப்படுகின்ற அலுவலகங்களுக்கு அறிவுறுத்தல்களை விநியோகிப்பதை இடைநிறுத்த வேண்டுமென்ற அறிவுறுத்தல் வட மாகாண தேர்தல் அலுவலகத்தின் அலுவலர்களுக்கு முறையாக தொடர்பாடல் செய்யப்படாத காரணத்தினால் தமிழ் மொழி பெயர்ப்பின்றி சிங்கள அறிவுறுத்தல் பத்திரம் மாத்திரம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. எனினும் தேர்தல்கள் செயலகத்தின் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் ஜனாப் எம்.எம்.மொஹமட்டினால் தயாரிக்கப்பட்ட எனது கையொப்பத்துடன் கூடிய தமிழ் மொழிபெயர்ப்பு மூன்று நாள்கள் தாண்டுவதற்கு முன்னர் உரிய தேர்தல்கள் அலுவலகங்களுக்கும் அவற்றின் ஊடாக உரிய உள்ளூர் அதிகார சபைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இச் சிங்கள மொழியிலான அறிவுறுத்தல் பத்திரம் மாத்திரம் அனுப்பி வைக்கப்பட்டமை வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட ஒன்றல்லவென்பதனை இத்தால் வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளையும் பயன்படுத்த வேண்டிய தேவைப்பாடு குறித்து தேர்தல்கள் திணைக்களம் மிகுந்த அக்கறையுடன் நடந்துகொள்கின்றது. இதுதொடர்பாக தமிழ் மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட பலர் தேர்தல்கள் திணைக்களத்தினைப் புகழ்ந்துரைத்துள்ளனர்

இந்தச் செய்தியை பிரசுரித்தமையால் தேசிய மொழிப் பயன் பாட்டின் தேவைப்பாட்டை தேர்தல்கள் திணைக்களம் அலட்சியப்படுத்துகின்றதென. அந்தச் செய்தியை வாசிக்கின்ற வாசகர்கள் எண்ண இடமுண்டாததால் அது சரியான ஒரு கருத்தல்லவென்பதனை சுட்டிக்காட்டுவதற்காகவே இந்தக் கடிதத்தை உங்களுக்கு அனுப்பிவைக்கின்றேன்- என்றுள்ளது. (த)

# தென்னை வளர்ப்பு பயிற்சிப் பட்டறை

தென்னைப் பயிர்ச்செய்கையில் உரப்பாவனை மற்றும் தாக்கக் கூடிய நோய்கள் தொடர்பான பயிற்சிப் பட்டறை கடந்த 18 ஆம் திகதி சாவகச்சேரி கமநல சேவைநிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

வடபிராந்திய தென்னை அபிவிருத்திச் சபையால் நடத்தப்பட்ட இந்தப் பயிற்சிப் பட்டறையில் தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் கலந்து கொண்டனர்.

வடபிராந்திய தென்னைப் பயிர்ச் செய்கை சபை முகாமையாளர் எஸ்.லீனானந்த, தென்னை அபிவிருதத்தி உத்தியோகஸ்தர் கே.ஜெகநாதன், ஓய்வு பெற்ற தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் க.தனிநாயகம், பண்ணை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

குறிப்பாக தென்னைப் பயிர்ச் செய்கையின் போது இயற்கை மற்றும் செயற்கை உரப் பாவனை, பயிர்களைத் தாக்கக் கூடிய நோய்கள், நோய்த்தாக்கத்தில் இருந்து பயிர்களைப் பாதுகாக்கும் நடைமுறைகள் போன்றவற்றுக்கான விளக்கங்கள், செயன்முறை விளக்கங்கள் வழங்கப்பட்டன. (14-1??)

# புகலிடக் கோரிக்கையாளர்கள் 23 பேர் மனுஸ் தீவுகளுக்கு

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் 23 பேர் மனுஸ்தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறை யில் படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குள் பிரவே சித்த 29 புகலிடக் கோரிக் கையாளர்களே இவ்வாறு மனுஸ் தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இந்த 23 பேர் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் காலங்க ளிலும் தொடர்ச்சியாக இவ்வாறு புகலிடக் கோரிக்கை யாளர்கள் நாடு கடத்தப்படுவர் என்று ஆஸ்திரேலிய குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம்பிறை வெற்றிக்கிண்ண கரப்பந்து இறுதியில் சாதித்து வென்றது மாதனை





வடமராட்சி,டிசெ.26

காந்தியூர் சனசமூக நிலையத்தின் ஆதரவில் புலோலி இளம்பிறை விளையாட்டுக் கழகம் நடத்திய 5 பேர் கொண்ட 'ஓவர்கேம்' முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மாதனை விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 25 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றிய இந்தச் சுற்றுப் போட்டி, காந்தியூர் சனசமூக நிலைய மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றது.

இந்தச் சுற்றுத் தொடரில் லீக் ஆட்டங்களில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு மாதனை விளையாட்டுக் கழகம்,பூவற்கரை கலைமகள் விளையாட்டுக் கழகம், அல்வாய் இளங்கோ விளையாட்டுக் கழகம், புலோலி மேற்கு திருநாவலூர் விளையாட்டுக் கழகம் என்பன தகுதிபெற்றிருந்தன.

முதலாவதாக இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் மாதனை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பூவற்கரை கலைமகள் விளையாட்டுக் கழகம் மோதிக்கொண்டது. இதில் கலைமகளை வீழ்த்திய மாதனை அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

மற்றொரு அரையிறுதியாட்டத்தில் அல்வாய் இளங்கோ விளையாட்டுக் கழகமும் புலோலி மேற்கு திருநாவலூர் விளையாட்டுக் கழகமும் சந்தித்துக் கொண்டன. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய திருநாவலூர் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டி, இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இறுதிப் போட்டியில் மாதனை விளையாட்டுக் கழகமும் திருநாவலூர் விளையாட்டுக் கழ்கமும் ஒன்றையொன்று எதிர்கொண்டன. தலா 10 நிமிடங்களைக் கொண்ட இரண்டு சுற்றுக்களில் இந்த இரு அணிகளும் பலப் பரீட்சை நடத்தின.எனினும் ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை மாதனை அணியின் ஆதிக்கமே களத்தில் மேலோங்கியிருந்தது. அதிரடியாக ஆடி புள்ளிகளை மாதனை வீரர்கள் குவித்தனர். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் சவாலான ஆட்டத்தை வெளிப்படுத்த நாவலூர் வீரர்கள் திணறினர். இதனால் ஆட்ட நேர நிறைவில் 15:5 என்ற புள்ளிகள் அடிப்படையில், மாதனை விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் கலைமகள் விளையாட்டுக் கழகமும் இளங்கோ விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.இதில் கலைமகள் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

வெற்றிபெற்ற கழகங்களுக்கான பரிசில்களை இறுதிப் போட்டியின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட புலோலி வட மேற்கு கிராம சேவையாளர் எஸ்.உமாசங்கர் வழங்கிக் கௌரவித்தார். (ங-8)

# வளர்மதியை துவம்சம் செய்து கண்ணகை அணி சம்பியன்



கண்ணகை விளையாட்டுக்கழகத் தலைவரிடம் வெற்றிக்கிண்ணத்தை கையளிக்கிறார் சாவகச்சேரி நகர சபை பிரதித் தலைவர் கு.சதாசிவமூர்த்தி.

தென்மராட்சி,டிசெ,26

சாவகச்சேரி சங்கத்தானை ஸ்ரீமுருகன் விளையாட் டுக்கழகத்தினர் நடத்திய மட்டுப்படுத்தப்பட்ட இரண்டு இன்னிங்ஸ்களைக் கொண்ட '20/20 ' கிரிக்கெட் போட்டியில் மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழக அணி 9 இலக்குகளால் வெற்றிபெற்று சம்பியனானது.

இந்தச் சுற்றுப்போட்டியில் இறுதிப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக அணியும் மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழக அணியும் மோதிக்கொண்டன.

நாயணச் சுழற்சியில் வெற்றிபெற்ற மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக அணிமுதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணி தனது இன்னிங்ஸில் இலக்குகளை வேகமாக இழந்ததால் மிகப் பெரிய வெற்றி இலக்கை எட்டமுடியவில்லை. அந்த அணி முதல் இன்னிங்ஸில் (10 பந்துப் பரிமாற்றங்களில்) அனைத்து இலக்குகளையும் இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழக அணியாலும் ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை. அந்தளவுக்கு சிறப்பான பந்து வீச்சிலும், களத்தடுப்பிலும் ஈடுபட்டனர். இதனால் கண்ணகை அணி முதல் இன்னிங்ஸில் (10 பந்துப் பரிமாற்றங்களில்) 9 இலக்குகளை இழந்து 50 ஓட்டங்களையே பெற முடிந்தது.

இதனால் ஒரு ஓட்டத்தினால் முன்னிலை பெற்றிருந்த வளர்மதி அணி தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக களம் புகுந்தது.


ஆனால் தமது துல்லியமான பந்துவீச்சால் வளர்மதி அணியின் துடுப்பாட்ட வீரர்களைத் துவம்சம் செய்தனர் கண்ணகை அணியினர். அடுத்தடுத்து இலக்குகளை இழந்ததால் வளர்மதி அணியினரால் எதிர் பார்த்த படி ஓட்டங்களை பெறமுடியவில்லை.

அந்த அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 8 பந்துப் பரிமாற்றங்கள் எதிர் கொண்டு அனைத்து இலக்குகளையும் இழந்து 14 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது.

இதனால் 16 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றி இலக்கை துரத்தி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடியது கண்ணகை விளையாட்டுக்கழக அணி.

வளர்மதியின் பந்து வீச்சை சுலபமாகச் சமாளித்து 2:1 பந்துப் பரிமாற்றங்களிலேயே ஒரு இலக்கை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை எட்டி சம்பியனானது கண்ணகை விளையாட்டுக்கழகம்.

வெற்றியீட்டிய அணிகளுக்கும், வீரர்களுக்கும் பரிசில்கள்,சங்கத்தானை ஸ்ரீமுருகன் முன்பள்ளியில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வின் போது வழங்கப்பட்டன. (ங-9)



வவுனியா மாவட்டத்தில் எறிபந்து விளையாட்டை அறிமுகம் செய்யும் நோக்கில் பயிற்சி முகாம் ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது. இதில் ஏராளமான வீரர்களும், வீராங்கனைகளும் கலந்து கொண்டு எறிபந்து தொடர்பான விளக்கங்களையும், பயிற்சிகளையும் பெற்றனர். (ங-422)

# நீங்கியது ஓல்ட்கோட்ஸ் அணியின் தடை

**கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டத்தில் வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ட்ஸ் அணி மீதானதடையை நீக்குவது என்று முடிவு செய்யப்பட்டது.**

வலி. வடக்கு,டிசெ .26

ஹொக்கிப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகத்துக்குவிதிக்கப்பட்டிருந்த தடையை யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கம் நீக்கியுள்ளது. இதன் மூலம் இனி வரும் காலங்களில் நடைபெறவுள்ள ஹொக்கிச் சுற்றுப் போட்டிகளில் வட்டுக் கோட்டை ஓல்ட்கோல்ட்ஸ் அணி விளையாட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கத்தினால், கழங்கங்களுக்கு இடையே யாழ்ப்பாணம் பல் கலைக்கழகத்தில் அண்மையில் ஹொக்கிச் சுற்றுப் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. இந்த தொடரின் இறுதிப்போட்டியில் மத்தியஸ்தரின் தீர்ப்பை ஆட்சேபித்து வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ட்ஸ் அணி வீரர்கள் ஆட்டத்தை இடை நடுவிலே கைவிட்டு மைதானத்தில் இருந்து வெளியேறியிருந்தனர். .

இதனைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் கழகம் ஹொக்கிப் போட்டிகளில் விளையாடுவதற்குத் தடை விதிக்கப்பட்டதுடன், குறித்த செயலுக்கான விளக்கமும் கோரப்பட்டிருந்தது. பின்னர் வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ட்ஸ்அணியினர் தாம் செய்த தவறுக்கு மன்னிப்புகோரினர். அத்துடன் தமது நிர்வாகத்தில் மாற்றத்தைச் செய்துள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டத்தில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் அணி மீதானதடையை நீக்குவது என்று முடிவு செய்யப்பட்டது.

''ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகத்தினர், தங்களுடைய தவறை உணர்ந்து புதிய முகாமையாள [illegible] ஆகியோரை நல்லெண்ணத்துடன் தெரிவு செய்துள்ளனர். மேலும், அவர்களுடைய விளக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டது போன்று இனிவரும் காலங்களில் அவர்கள்,யாழ்.மாவட்ட ஹொக்கிச்சங்கத்துடன் நல்லுறவினைப் பேணி, யாழ். மாவட்டத்தில் ஹொக்கி விளையாட்டை வளர்ப்பதில் உறுதியாக இருக்கின்றார்கள். இவற்றைக்கருத்திற் கொண்டு ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகத்தினை மன்னித்து, அந்த அணி மீதான தடையை விலக்கியுள்ளோம். அவர்களுடைய ஹொக்கி சம்பந்தமான தொடர்ச்சியான செயற்பாடுகள் முன்னேற்றகரமானதாகவும் முன்மாதிரியானதாகவும் அமைய வேண்டும். '' என்று யாழ். மாவட்ட ஹொக்கிச்சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ங-86)

# மாதனை விளையாட்டுக்கழகத்தின் கரப்பந்து சுற்றுத் தொடர் ஆரம்பம்



மாதனை கிராமமக்கள் மற்றும் மாதனை விளையாட்டுக் கழகத்தின் லண்டனில் உள்ள நலன் விரும்பிகள் ஆகியோரின் ஆதரவுடன் ஆண்டு நிறைவை முன்னிட்டு மாதனை விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது

இந்தக் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி 5 பேர் பங்குபற்றும் ஓவர்கேம் முறையில் நடத்தப்படவுள்ளது. வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ள இந்தச் சுற்றுப் போட்டியின் ஆட்டங்கள் நாளை மறுதினம் முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை நான்கு தினங்கள் மின்னொளியில் பருத்தித்துறை மாதனை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ங-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாய்ந்தது பாகிஸ்தான் பணிந்தது இந்தியா

கபீஸ், சொய்ப் மலிக் இருவரின் அபார அரைச் சதங்களின் துணையோடு இந்தியாவை துவம்சம் செய்தது பாகிஸ்தான்.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது '20/20, ஆட்டம் பகல் இரவுப் போட்டியாக பெங்களூர் சின்னச்சாமி மைதானத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணித் தலைவர் கபீஸ் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். இந்திய அணி சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களம் இறங்கிய கம்பீரும், ரஹானேயும் சிறப்பான அடித்தளத்தை இட்டனர். இவர்கள் இருவரும் இணைப்பாட்டமாக 77 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது, அப்ரிடியின் பந்தில் ரஹானே உமர் அக்மலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவர் 31 பந்துகளில் 42 ஓட்டங்களை விளாசியிருந்தார். அதன் பின்னர் கம்பீரும் 43 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டாகி வெளியேற இந்திய அணியின் சரிவு ஆரம்பமானது.

அதன் பின்வந்த வீரர்கள் எவரும் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடத் தவறினர். ஹோக்லி(9), யுவராஜ்சிங் (10), டோனி (1), சுரேஷ்ரெய்னா (10), ரோகித் சர்மா(2), ஜடேஜா(2), இஷாந்த் சர்மா(0) என்று அடுத்தடுத்து இலக்குகளைப் பறிகொடுத்ததால் இந்திய அணி 20 பந்துப் பரிமாற்ற நிறைவில் 9 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. களத்தில் பிரவீன் குமார் 10 ஓட்டங்களுடனும், டின்டா 3 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காதிருந்தனர். பந்து வீச்சில் பாகிஸ்தான் அணியின் உமர்குல் 3 இலக்குகளையும், சயீட் அஜ்மல் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரையும் சொற்ப ஓட்டங்களோடு வெளியேற்றினார் பிரவீன்குமார். நசீர் யம்ஷீட் 2 ஓட்டங்களுடனும் அகமட் செக்ஷட் 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். அதன் பின்னர் களம் புகுந்த அணித்தலைவர் கபீஸ் பொறுப்புடன் ஆடினார். எனினும் உமர்அக்மல்(0) வந்த வேகத்திலேயே பிரவீன்குமாரின் பந்தில் 'போல்ட், ஆனார்.

அதன் பின்னர் கபீஸுடன் இணைந்து கொண்ட சொய்ப்மலிக் இந்திய பந்து வீச்சாளர்களை பதம் பார்த்தார். இவர்கள் இருவரும் ஆரம்பத்தில் நிதானமாகவும் பின்னர் அதிரடியிலும் இறங்கி அணியை வெற்றிப்பாதைக்கு இட்டுச்சென்றனர். இருவரும் இணைப்பாட்டமாக 100 ஓட்டங்களைக் கடந்தனர். கபீஸ் 63 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, மறுமுனையில் நின்ற மலிக்(57) அரைச்சதம் அடித்து அணியின் வெற்றியை அப்ரிடியுடன் இணைந்து இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் உறுதி செய்தார்.

இதன் மூலம் இந்திய அணிக்கு எதிரான முதலாவது 20/20 போட்டியில் 5 இலக்குகளால் வெற்றியீட்டியது பாகிஸ்தான். இந்திய அணி சார்பில் பிரவீன்குமார் 3 இலக்குகளை சரித்தார். அணியின் வெற்றிக்கு அடிகோலிய பாகிஸ்தான் அணித் தலைவர் கபீஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ங)



# நியூசிலாந்து வெற்றி



தென்னாபிரிக்காவுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான இரண்டாவது 'ரி-20' சர்வதேச ஆட்டத்தில் நியூசிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளது.

டக் வேர்த் லூயிஸ் அடிப்படையில் நியூசிலாந்து அணி 8 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

பபலோ பார்க் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட போட்டியாக ஆரம்பித்த இந்த ஆட்டத்தில் 16.1 பந்துப் பரிமாற்றங்களில் தென்னாபிரிக்க அணி 2 இலக்குகளை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மைதானத்தில் மின்விளக்குகளில் ஏற்பட்ட தொழிநுட்பத் தவறு காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

மீள ஆரம்பிக்கப்பட்ட ஆட்டம் 19 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட ஆட்டமாக இடம்பெற்றது.

19 பந்துப் பரிமாற்றங்களில் தென்னாபிரிக்க அணி 5 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக டு பிளெஸிஸ் 43 பந்துகளில் 63 ஓட்டங்களையும், ஹென்றி டேவிட்ஸ் 38 பந்துகளில் 55 ஓட்டங்களையும், டேவிட் மில்லர் 18 பந்துகளில் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக டக் பிரேஸ்வெல் 3 பந்துப்பரிமாற்றங்களில் 33 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை கைப்பற்றினார்.

டக் வேர்த் லூயிஸ் முறையில் 19 பந்துப் பரிமாற்றங்களில் 169 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 19 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றிபெற்றது.

இறுதிப் பந்தில் நான்கு ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் மார்ட்டின் குப்ரில் நான்கு ஓட்டமொன்றை அடித்து அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்ததோடு, தனது சதத்தையும் பூர்த்தி செய்தார்.

துடுப்பாட்டத்தில் மார்ட்டின் குப்ரில் 69 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 101 ஓட்டங்களையும், ரொப் நிக்கல் 24 பந்துகளில் 25 ஓட்டங்களையும், பிரன்டன் மக்கலம் 15 பந்துகளில் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் றயன் மக்லரன், ரொபின் பீற்றர்சன் ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக மார்ட்டின் குப்ரில் தெரிவானதோடு, 3 போட்டி கொண்ட இந்தத் தொடரில் இரு அணிகளும் தலா ஒரு ஆட்டத்தில் வெற்றி பெற்று சமநிலையில் காணப்படுகின்றன. இன்று மூன்றாவது ஆட்டம் இடம்பெறவுள்ளது. (ங-5)



# அணித்தலைமைக்கு தயார்



இலங்கை அணியின் அணித்தலைமைக்குத் தயாராக உள்ளதாக இலங்கை அணியின் சகலதுறை வீரரும் உப தலைவருமான அன்ஜலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய தொடரின் முடிவில் அணித்தலைமை பதவி வழங்கப்பட்டால், அந்தப் பதவியை ஏற்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் தற்போதைய தலைவரான மஹேல ஜெயவர்தன, தற்போது நடைபெற்று கொண்டிருக்கும் ஆஸ்திரேலிய தொடரின் பின்னர் அணித் தலைமையிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

இதனையடுத்து அன்ஜலோ மத்தியூஸ் புதிய அணித்தலைவராக நியமிக்கப்படுவார் என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள அன்ஜலோ மத்தியூஸ், அணித் தலைமைக்காக நான் தயாராக உள்ளேன்.

அத்தோடு மஹேல ஜெயவர்தன இதுவரை காலமும் அற்புதமான பணியை மேற்கொண்டார். அவரின் பின்னர் அணித்தலைமைப் பதவியைப் பெற்றுக் கொள்வது புதிய வகையான சவாலானது.

இன்று ஆரம்பமாகவுள்ள பொக்சிங் டே டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்த முயற்சிக்கும். மெல்போர்ண் கிரிக்கெட் மைதானத்தில் இந்த ஆட்டத்தில் பங்குபற்றுவது சிறப்பான பெருமை எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை 'ரி-20' அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்து உலக 'ரி-20' தொடரின் பின்னர் மஹேல விலகியதையடுத்து இலங்கை 'ரி-20' அணியின் தலைவராக அன்ஜலோ மத்தியூஸ் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ங-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீற்றர்சன் நீக்கம்

நியூசிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள இங்கிலாந்து அணியின் மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட தொடரிலிருந்து இங்கிலாந்து அணியின் கெவின் பீற்றர்சன் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அவருக்கு ஓய்வு வழங்குவதை உறுதிப்படுத்தும் முகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



நியூசிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள இங்கிலாந்து அணி மூன்று 'ரி-20' சர்வதேசப் போட்டி, மூன்று ஒரு நாள்போட்டி, 3டெஸ்ட் போட்டியிலும் பங்குபெறவுள்ளது.

'ரி-20' குழாம்: ஸ்ருவேர்ட் புரோட், ஜோனி பெயர்ஸ்ரோ, ரிம் பிரெஸ்னன், டனி பிறிக்ஸ், ஜொஸ் பட்லர், ஜேட் டேர்ண்பக், ஸ்டீவன் பின், அலெக்ஸ் ஹேல்ஸ், மைக்கல் லம்ப், ஸ்ருவேர்ட் மீக்கர், இயன் மோர்கன், சமித் பட்டேல், ஜேம்ஸ் ட்ரெட்வெல், லூக் ரைட். (ங-5)


## கணினி திருத்தம் Computer Repair

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள் -0779086737

GUNAA BEST PC 52, HOSPITAL ROAD, JAFFNA.

## NEW SCIENCE CENTER CHEMISTRY

2014 A/L

Inorganic

(d குழு மூலகங்கள்)(sat,sun)

2013 A/Lமற்றும்DAY BATCH

மாணவர்களுக்கு

அயன் சமநிலை(mon,wed)

By. T.சுசாந்தன்(B.Sc)

கடந்தகால வினாக்களின்

விளக்கங்களுடன் Theory வகுப்புக்கள்

இடம்பெறும்

(27466)(7)

## விசேட கருத்தரங்கு

திறந்த பல்கலைக்கழகக் கல்வி

டிப்புளோமா தெரிவுப் பரீட்சைக்கானது

(ஜனவரி 12 பரீட்சை)

வியாழன்(27/12)

வெள்ளி(28/12)

பி.ப.1.00மணி-5.00 மணிவரை

ஆசிரியர் : ததவசேகர்

D.M.I, ஆரியகுளச்சந்தி

## கடை வாடகைக்கு

இலக்கம் 615, பரந்தன்வீதி, தருமபுரத்தில் தருமபுரம் மகா வித்தியாலயத்துக்கு அருகில் மூன்று கடைகளைக் கொண்ட கடைத் தொகுதியில், ஒரு கடை வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு :

0770579536,0212280161

## THE SCIENCE CORNER

Clock Tower Lane, Jaffna.

A/L 2015

ஆரம்பம் : 28.12.2012

வெள்ளி காலை 8.00

| PHYSICS | BIOLOGY | CHEMISTRY | C.MATHS |
|---|---|---|---|
| செல்வன் | பொன்திவாகரன் | BENO, அன்பு | சிவகரன் |
| செந்தில் | குகானந்தன் | சிவகுமார் | |

தமிழ், ஆங்கில மொழி மூல தனியான வகுப்புகள்

## COLLEGE OF CHEMISTRY

Palam Road, Kantharmadam

PHYSICS

A/L 2015 ஆரம்பம்

28.12.2012-7.00a.m

(27214)

N. KAPILAN B.sc

## R.G .ENGINEERS

கட்டட நிர்மாணம் தொடர்பான அனைத்து சேவைகளும் நிர்மாணத்துறையில் அனுபவமுள்ள பொறியியலாளர்களால் முன்னெடுக்கப்படுகிறது.

- வரைபடம்(Plan )
- மதிப்பீடு செய்தல்(Estimation)
- வடிவமைப்பு(Design Work)
- ஒப்பந்த அடிப்படையில் கட்டட நிர்மாணிப்பு

தொடர்புகளுக்கு :

கோண்டாவில் மேற்கு,

யாழ்ப்பாணம்.

(27121)

T.P.0785832356

## VCM INSTITUTE

A/L 2015

இணைந்த கணிதம்

B.ரவீந்திரன்

ஆரம்பம் :

28.12.2012

வெள்ளி

பி.ப. 3.00 மணி

(27259)(7)


## 2014 A/L CHEMISTRY

### The Rank List of the Students

(Based on the Average Marks of the Exam Numbers 6th 7th 8th & 9th )

| Name | School | Average | Rank | Med |
|---|---|---|---|---|
| P.Darukeesan | J/HC | 91 | 1 | E |
| S.Abiramy | J/VGHS | 88.25 | 2 | T |
| B.Gunavaran | J/HC | 84 | 3 | E |
| I.Anosha | J/VGHS | 84 | 3 | E |
| T.Narmatha | J/VGHS | 82.75 | 5 | T |
| S.Shajiththiyan | J/HC | 82.25 | 6 | T |
| M.Sheetharan | J/HC | 82.25 | 6 | T |
| K.Pavalayan | J/HC | 81 | 8 | T |
| M.Aathmika | J/HLC | 80 | 9 | E |
| C.Thilakshi | J/VGHS | 79.75 | 10 | E |
| T.Mathumai | J/VGHS | 79.5 | 11 | T |
| M.Tharushigan | J/SJC | 79.5 | 11 | E |
| S.Saranga | J/VGHS | 79.25 | 13 | T |
| V.Kokulan | J/HC | 78.6 | 14 | T |
| K.Kowshikanth | J/HC | 78.25 | 15 | E |
| K.Abivarshi | J/VGHS | 78 | 16 | T |
| M.Mohanalakshan | J/HC | 78 | 16 | E |
| P.Pirathees | J/HC | 77.75 | 18 | T |
| T.Peranavi | J/VGHS | 77.5 | 19 | T |
| T.Arunan | J/HC | 76.75 | 20 | T |
| P.Deneshan | J/HC | 76.5 | 21 | E |
| V.Tharmi | J/CGC | 76 | 22 | T |
| P.Rishanthini | J/VGHS | 75.5 | 23 | T |
| M.Buveenthiran | J/HC | 74.75 | 24 | E |
| K.Piriyankan | J/HC | 74.5 | 25 | T |
| R.Mayoorethan | J/HC | 73.75 | 26 | T |
| S.Tharshika | J/VGHS | 73.75 | 26 | T |
| K.Kobishanth | J/HC | 73 | 28 | E |
| M.Anujan | J/HC | 72.5 | 29 | T |
| P.Kalaban | J/HC | 72.5 | 29 | T |
| A.Yathushna | J/VGHS | 72.25 | 31 | T |
| V.Thanushan | | 71.6 | 32 | T |
| V.Yathusan | J/SJC | 71.5 | 33 | T |
| K.Kirshika | J/KHC | 71.5 | 33 | T |
| K.Keerthana | J/VGHS | 71.25 | 35 | E |
| K.Umasuthan | J/HC | 70.5 | 36 | T |
| R.Dakshajini | J/VGHS | 70.5 | 36 | T |
| P.Vishakaja | J/VGHS | 69.5 | 38 | T |
| J.Logapavan | J/HC | 69.25 | 39 | T |
| M.Miroshan | J/KHC | 69.25 | 39 | T |
| S.Lathajini | JVGHS | 69 | 41 | T |
| L.Veneka | | 69 | 41 | T |
| S.Sivanujan | J/HC | 68.75 | 43 | T |
| M.Mayuravaani | J/VGHS | 68.75 | 43 | T |
| J.Shythaky | J/VGHS | 68.5 | 45 | T |
| P.Hariraj | J/HC | 67.75 | 46 | T |
| B.Nivethika | | 67.6 | 47 | T |
| K.Datsigan | J/HC | 67.5 | 48 | T |
| S.Arunan | J/HC | 67.25 | 49 | T |
| A.Thiruventhan | J/HC | 67.25 | 49 | T |
| S.Nirvika | J/HLC | 67.25 | 49 | T |
| J.P.Thanushan | J/STP | 67.25 | 49 | E |
| C.Vivekvinusanth | J/HC | 67 | 53 | E |
| U.Jathushan | | 66.75 | 54 | T |
| G.Nisakaran | J/HC | 66.5 | 55 | E |
| S.Jeyakumar | J/HC | 66.25 | 56 | T |
| C.Mahinthan | | 66.25 | 56 | T |
| R.Nirojan | J/HC | 66.25 | 56 | T |
| V.Thadshajini | | 66 | 59 | T |
| K.Sowjaa | J/VGHS | 65.75 | 60 | T |
| S.Suvithira | J/VGHS | 65.75 | 60 | T |
| S.Thanansejan | J/HC | 65.25 | 62 | T |
| B.Sangeerththan | J/HC | 65.25 | 62 | E |
| L.Luxshana | | 65 | 64 | T |

By: DIAS BSc(Hons)Spl in Chem
New Science Hall, Kanathiddy, Jaffna.

## மரண அறிவித்தல்



### நாகநாதர் கந்தையா

யாழ். நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், 480, வளநகர் யோகபுரம் மல்லாவியை வதிவிடமாகவும் கொண்ட நாகநாதர் கந்தையா நேற்று (25.12.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதர்-பொன்னம்மா தம்பதியரின் புதல்வரும் வேலுப்பிள்ளை (இலங்கையர்) நாகாத்தையின் அன்பு மருமகனும், தங்கம்மாவின் அன்புக் கணவரும், புண்ணியநாதன், தருமரத்தினம், புஸ்பராணி, சண்முகராசா, மங்களேஸ்வரி, கிருபாகரன், பரமேஸ்வரி, பத்மநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆனந்தரசி, வசந்தி, காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் நடனவாணி, காலஞ்சென்ற அமிர்தலிங்கம், மற்றும் மகேஸ்வரி, ரவிச்சந்திரன், கலையரசி ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற கந்தப்பு, பசுபதி, சுப்பிரமணியம், கதிரவேலு, வள்ளியம்மை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அம்பலவாணர், கந்தையா, இரத்தினம், சுப்பிரமணியம், வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுஜிதரன், கஜந்தினி, மதுரா, புஸ்பலலிதா (பிரதேச செயலகம்- துணுக்காய்), கேசவன், ஜனகன், வற்சலா, சிறிறங்கன், சிந்துஷா (யாழ். பல்கலைக்கழகம்), கஜாலினி, சரண்ராஜ், மயூரன், மயூரிகா, மதுசா, தரணியா, தனுசன், தர்மிகன், கோவிகன், கஜீபன், டிலக்சனா, நேருஜன், நேருஜா ஆகியோரின் அன்புப் பேரனும், சங்கீதனின் அன்புப் பூட்டனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2012) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் பாலியாறு இந்துமயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

இல-480, வளநகர், யோகபுரம், மல்லாவி. (26123)(9.14)


## சமையல் ஆள் தேவை

யாழ்ப்பாணத்தில் நிறுவனம் ஒன்றில் உயரதிகாரியாகப் பணியாற்றும் ஒருவருக்கு வீட்டிலிருந்து சமைத்துக் கொடுத்து,வீட்டைப்பராமரிக்க சமையல் ஆள் ஒருவர் தேவை.சாப்பாடும் தகுந்த சம்பளமும் வழங்கப்படும்.

தொடர்பு:0777711449

(27266)(7)

## ஷாம்சன் இங்கிலீஷ்- 3மாத பயிற்சி நெறி

இன்றுவரை உங்களால் ஆங்கிலத்தால் பேச முடியாதிருப்பதற்கான காரணம் ஆங்கிலம் கடினம் என்பதால் அல்ல, தவறான வழிமுறையில் கொப்பியில் எழுதியும், CD, புத்தகத்தின் வாயிலாக அதை முயற்சித்தலாகும்.

ஆங்கிலத்தை மட்டுமல்ல உலகில் எந்தவெரு மொழியையும் இலக்கணம், CD, புத்தகத்தின் வாயிலாக கற்று சரளமாக பேசவே முடியாது. நீங்கள் கூட தாய் மொழியை அவ்வாறு படிக்கவில்லையே!

எமது பழக்கப்படுத்தல் மூலமான ஆங்கிலப் பயிற்சியானது ஒரு சிறு குழந்தை எவ்வாறு தாய்- தந்தையுடன், அயலவருடன் பேசிப் பேசி மொழியைப் பழகியதோ அதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

நீங்களும் எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சிப் பட்டறையில் (WORK SHOP) இணைய விரும்புகிறீர்களா? அப்படியானால் எதிர்வரும் 30.12.2012 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள். (இம்முறை O/L எழுதும் மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில்புரிவோர், பட்டதாரிகள் மற்றும் 15 வயதுக்கு மேற்பட்ட அனைவரும்)

ஒரு பிரிவில் 20 பேருக்கு மட்டும் அனுமதி

SAAMSON ENGLISH

279, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரி பின்புறம்)
TEL: 0776214567

சனி, ஞாயிறு பிரிவுகள்

பிரிவு I மு.ப. 8-10 பிரிவு III பி.ப. 01- 03

பிரிவு II மு.ப. 10- 12 பிரிவு IV பி.ப. 03- 05

## கபிலா காலணியகத்தில் அதிரடி கழிவு

Bata DSI

புத்தாண்டை முன்னிட்டு பாடசாலை மாணவ மாணவிகளின் காலணி வகைகள் விசேட விலைக்கழிவில் பொறிக்கப்பட்ட விலையிலிருந்து எங்கும் எதிர்பாராத மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்




KABILA SHOE PALACE

24, Kasthuriyar Road, Jaffna.

Branch:
No: 13,
Power House Road,
New Market,
Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தீமை வேறு தீமை
செய்தவன் வேறு
எனும் பாகுபாட்டை
ஒருபோதும் மறக்கக்
கூடாது.
-மகாத்மா காந்தி-

புதன் பொய்கை A

உதயன் டிசெம்பர் 26 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு



"அன்று நீதித்துறையும் அரசும் ஒன்றிணைந்து எஸ்.பி திஸநாயக்கவின் அரசியல் வாழ்க்கையை நாசம் செய்யத் திட்டம் தீட்டின. இன்று ஜனாதிபதியும், நாடாளு மன்றமும் ஒன்றிணைந்து பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் பதவியைப் பறிக்க முயல்வதாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

# அரசியல் சுனாமி எங்கு போய் முடியும்?

சிங்களமூலம்- உபுல் போசெப் பெர்னாண்டோ
தமிழில்-வீஸ்ரீ

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி சுனாமி அனர்த்தம் ஏற்படும் என அதுவரை எவரும் கனவு கூடக் கண்டிருக்க மாட்டார்கள். அன்றைய சுனாமி அனர்த்தத்தின் பின்னரே 'சுனாமி' என்ற வார்த்தையைக் கூடப் பலர் அறிய நேரிட்டது. ஆனால் சுனாமி ஏற்பட்ட தினத்தன்று நிலவிய கிரகநிலை இந்தமாதம் 28 ஆம் திகதியன்றும் நிலவ உள்ளதாக சோதிடர்கள் எதிர்வு கூறி வருகின்றனர். சுனாமி ஏற்படும் எனக் கூறாவிட்டாலும் அதனால் நாட்டுக்குப் பெரும் ஆபத்து ஏற்படலாமென அவர்கள் கூறுகிறார்கள்.

இலங்கை வரலாற்றில் களனிதிஸ்ஸ அரசனின் ஆட்சிக் காலத்தில் களனியில் இடம்பெற்ற கடற்பெருக்கே முதன்முதலான சுனாமி என வரலாற்றுப் பதிவுகளிலிருந்து தெரிய வருகின்றது. களனியில் அந்த வேளையில் ஆட்சி செய்த 'திஸ்ஸ' என்ற அரசனின் மகளான 'தேவி' என்பவள், காவந்தீஸ்ஸ அரசனின் மகாராணியான வரலாற்றின் பின்னணி சுவாரஸ்யமானதொன்று. களனி அரச மாளிகையில் வாழ்ந்த அரச குமாரனொருவனுக்கும் பட்டத்து ராணிக்கும் இடையே நிலவிய நெருக்கமான தொடர்பு வெளிவந்ததால் அச்சமுற்ற அந்த அரச குமாரன் அங்கிருந்து தப்பியோடி தூர இடமொன்றில் வாழ்ந்து வந்தான். இருந்த போதிலும் பட்டத்து மகாராணி மீதிருந்த தீராத ஆசை காரணமாக அவளுக்கு கடிதமொன்றை அனுப்பி வைக்கும் நோக்கில் பொது மகனொருவனைப் பௌத்த துறவியாக உருமாற்றி அவனிடம் கடிதமொன்றைக் கையளித்து பௌத்த துறவிமார் அரச மாளிகையில் தானம் பெறச் செல்லும்போது பௌத்த துறவியொருவருடன் அவனையும் கூடச் சென்று மகாராணியிடம் தனது கடிதத்தை எப்படியாவது சேர்த்து விடுமாறு கூறி அனுப்பிவைத்தான். பௌத்த துறவியுடன் அந்தப் போலி ஆசாமியும் பௌத்த துறவி போன்று மாளிகையில் உள்நுழைந்து தானம் பெற்றுத் திரும்பும்போது மகாராணி காணக்கூடியவாறு அந்தக் கடிதத்தை நிலத்தில் தவறவிட்டான். எதிர்பாராத விதமாக கீழே விழுந்த அந்தக் கடிதம் அரசனின் கண்ணில் பட்டு விடவே அவனது திட்டம் பிழைத்து அரசனுக்கு உண்மை தெரிய வந்தது. கடுங்கோபமுற்ற அரசன், அந்தப் பௌத்த பிக்குவையும், போலி ஆசாமியையும் கொன்று கடலில் வீசி விட்டான்.

உண்மையான பௌத்த துறவியொருத்தரைப் படுகொலை செய்தமையைப் பொறுத்துக் கொள்ள இயலாத கடவுள், களனி அரசையே கடலில் மூழ்கச் சாபமிட்டார். கடவுளின் சாபத்தைத் தடுத்து நிறுத்த உயிர்ப்பலி கொடுக்க வேண்டி ஏற்பட்ட நிலையில் அரசனின் மகளான இளவரசி தேவி, நாட்டை தெய்வத்தின் கோபத்திலிருந்து காப்பாற்றத் தானே கடலில் மூழ்கி உயிர்துறக்க முன்வந்தாள். அரசனும் தங்கச் சிவிகையொன்றில் இளவரசியை இருத்தி கடலில் இறக்கி விட்டான். சினம் தணிந்த கடலன்னையும் சினம் விடுத்து சாந்தமானாள். கடல் நீரில் மிதந்து சென்ற அந்தச் சிவிகை ருகுணுரட்டை பிரதேசத்தின் லங்கா விகாரைக்கு அருகில் கரையேறியது. இந்த அதிசயம் குறித்துக் கேள்விப்பட்ட ருகுணுரட்டை மன்னன் காவந்தீஸ்ஸன், இளவரசி தேவியை நேரில் சந்தித்து விவரம் கேட்டறிந்ததுடன் தனது பட்டத்து ராணியாகவும் ஆக்கிக் கொண்டான். விகாரையொன்றுக்கருகில் கரையேறியதால் தேவி என்ற பெயருடன் 'விகார'மும் இணைந்து விகாரதேவியென இளவரசி பிரபல்யமானாள். காலப்போக்கில் மகா என்ற கௌரவச் சொல்லும் இணைந்து அவள் விகார மகாதேவி எனப் பெயர் பெற்றாள் என்பது வரலாறு.

கடற்பெருக்கெடுப்பிலிருந்து, கடவுளின் சாபத்திலிருந்து நாட்டைக் காக்க கடைசியில் விகாரமகாதேவியையே கடலுக்குக் காணிக்கையாக்க நேர்ந்தது. களனி இராச்சியத்தைக் கடவுளின் கோபத்தினின்றும் காப்பாற்ற விகாரமகாதேவி தானே கடலுக்குக் காணிக்கையாகித் தென்பகுதிக்கு சென்று சேர்ந்தமையாலேயே களனி இராச்சியம் அழிவினின்றும் தப்பிக்க முடிந்தது. காவந்திஸ்ஸ மன்னனுக்கும் விகாரமகாதேவிக்கும் பிறந்தவனே துட்டகைமுனு. எல்லாள மன்னனைப் போரில் தோற்கடித்து நாட்டை ஒன்றிணைத்தவன் துட்டகைமுனுவே. துட்டகைமுனு அவதரிக்க வழியேற்படுத்தி வைத்தது, களனி இராச்சியம் மீதான கடற்பெருக்கெடுப்பே.

2004 ஆம் ஆண்டின் சுனாமி அனர்த்தத்தின் பின்னர் இந்த நாட்டுக்கு புதிய தலைமைத்துவமொன்று உருவாகும் என துட்டகைமுனுவின் வரலாறு தெரிந்தவர்கள் எதிர்வுகூறிவந்தனர். 2004 ஆம் ஆண்டின் சுனாமி அனர்த்தம் நிகழ்ந்த போது அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா வெளிநாடொன்றுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். அந்த வேளையில் நாட்டின் அரச தலைவராக மஹிந்த ராஜபக்ஷவே செயற்பட்டார். அந்த வேளையில்தான் அவர் ஒரு தேசியத் தலைவராக உருவானார். அந்த வேளையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவராயிருந்த பிரபாகரன் கூட சுனாமி அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்து விட்டதாகப் பேச்சு அடிபட்டது.

பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்புடன் சுனாமி நிவாரணக் கட்டமைப்பு ஒப்பந்தம் மேற்கொண்டதன் காரணமாக சந்திரிகா தூரது அதிசய... அதுவரை சந்திரிகா... வளித்து வந்த ஜே.வி.பி அந்த ஒப்பந்தம் குறித்து அதிருப்தியுற்று அரசிலிருந்து விலகிக் கொண்டது. பின்னர் ஜே.வி.பி மஹிந்தவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தது. சுனாமி, சந்திரிக்காவை அதிகாரம் இழக்க வைத்து மஹிந்தவை ஜனாதிபதியாக்கியது இதே விதத்திலேயே ஆகும். மஹிந்தவை ஜனாதிபதி ஆக்கி வைத்தது மட்டுமன்றி விடுதலைப் புலிகளின் அமைப்பை அழித்தொழிக்க பாதையமைத்துக் கொடுத்ததும் இந்தச் சுனாமியே.

சுனாமி அனர்த்த வேளையில் நாட்டின் அரசியலில் முக்கிய இடம்பிடித்த விடயம் எஸ்.பி.திஸநாயக்க கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்ட சம்பவமாகும். அதற்கு எதிராக நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. எஸ்.பி திஸநாயக்கவுக்கு நியாயமற்ற முறையில் அரசும் நீதித்துறையும் தண்டனை வழங்கியதைப் பொறுத்துக் கொள்ளாத இயற்கை கோபம் கொண்டதால் ஏற்பட்ட அனர்த்தமே சுனாமி என எதிர்க்கட்சிகள் விமர்சித்தன. தற்போது மீண்டும் சுனாமி போன்ற இயற்கை அனர்த்தம் இடம்பெறத்தக்க கிரகநிலை நிலவுவதாக சோதிடர்கள் எதிர்வுகூறி வருகின்றனர்.

அன்று நீதித்துறையும் அரசும் ஒன்றிணைந்து எஸ்.பி திஸநாயக்கவின் அரசியல் வாழ்க்கையை நாசம் செய்யத் திட்டம் தீட்டின. இன்று ஜனாதிபதியும், நாடாளுமன்றமும் ஒன்றிணைந்து பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் பதவியைப் பறிக்க முயல்வதாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

மொத்தத்தில் அன்றும் இன்றும், பிரச்சினைக்கு உள்ளான, உள்ளாகியுள்ள விடயம் நீதித்துறை தொடர்பானதே. அன்று எஸ்.பி.திஸநாயக்கவுக்கு சிறைத் தண்டனை வழங்கிய நீதிமன்றத்தின் தீர்ப்பு நியாயமற்றதெனக் கருதி பொது மக்கள் திரண்டெழுந்தனர். இன்றும் பிரதம நீதியரசருக்கு எதிராக நாடாளுமன்றத் தெரிவுக்குழு வழங்கிய தீர்ப்பு நியாயமற்றதென நாட்டு மக்கள் கருதுகின்றனர்.

2004 ஆம் ஆண்டின் டிசெம்பர் மாத, மற்றும் 2012 ஆம் ஆண்டின் டிசெம்பர் மாதத்தின் கிரக மாற்றங்கள் குறித்து வெளியிடப்பட்ட எதிர்வு கூறல்கள் உண்மையோ, பொய்யோ, குறிப்பிட்ட இவ்விரு கால கட்டங்களிலும் இடம்பெற்ற அரசியல் சிக்கல்களுக்கு ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு உண்டு. அதே போன்று 2004 ஆம் ஆண்டின் சுனாமி அனர்த்தத்தின் முன்னர் பூமி அதிர்வு குறித்து பலதரப்பட்ட கதைகள் உலவியமைபோன்றே, இன்றும் வான்வெளி மர்மங்கள்,கிரகங்களின்றும் தோன்றும் ஒளி, வெள்ளப் பெருக்கு, மண்சரிவு போன்ற இயற்கை அழிவுகள் குறித்து தகவல்கள் வெளியாகி வருகின்றன.

களனி இராச்சிய ஆட்சிக்காலத்தின் கடற்கோள் துட்டகைமுனுவை ஆட்சி பீடத்தில் அமர்த்த வழி செய்தது. அது எல்லாள மன்னனின் முடிவுக்கு வழி வகுத்தது. 2004 ஆம் ஆண்டின் சுனாமி மஹிந்தவை ஆட்சிபீடம் ஏற்றி வைத்தது. அது விடுதலைப் புலிகள் அமைப்பினதும் அதன் தலைவரினதும் அழிவுக்குக் காரணமாகியது. இன்று நாட்டில் நிலவும் காலநிலை மாற்றத்தை அவதானிக்கும் போது ஏதோவோர் அனர்த்தத்துக்கு அது கட்டியம் கூறுவதாகக் கருதவேண்டியுள்ளது. அதற்கு சோதிடம் கணிக்கவோ, கிரகநிலை குறித்து அலசவோ வேண்டிய அவசியமில்லை.

2004 ஆம் ஆண்டில் சுனாமி அனர்த்தம் ஏற்படுவதற்கு முன்னர் தென்பகுதிக் கடற்பரப்பு சலனமற்று இருந்தமை போன்ற நிலையிலேயே, பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை கொண்டு வரப்படுவதற்கு முன்னர், மஹிந்தவின் இன்றைய அரசும் சுமுக நிலையில் இருந்து வந்தது. அன்று தென்பகுதிக் கடற்பரப்பை உள்வாங்க வைத்த சுனாமி போன்று இன்று பிரதம நீதியரசருக்கு எதிரான அரசின் குற்றவியல் பிரேரணை விடயம் மஹிந்த அரசை ஆட்டம் காண வைக்கும் சுனாமியாக ஆகிவிடப்போகிறதா?

ஆயினும் 2004 ஆம் ஆண்டில் ஏற்பட்டது கடற்சுனாமியே. இன்று நாட்டில் உருவாகியுள்ளது. அரசியல் சுனாமியாகும். இன்றைய அரசியல் சுனாமியால் ஏற்படப் போகும் மாற்றம் குறித்து அறிய நாட்டு மக்கள் ஆவலோடு காத்திருக்கின்றனர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தைகள் குண்டாக இருந்தால்

## ஆரோக்கியத்துக்கு மிகவும் ஆபத்து!




பெரும்பாலானவர்கள் இன்று தங்களது குழந்தைகள் நல்ல குண்டாக இருக்க வேண்டும் என்பதையே பெரிதும் விரும்புகின்றனர். அப்படி இருந்தால் தான் அவர்கள் ஆரோக்கியமாக இருக்கின்றார்கள் என்று தப்பாக எண்ணுகின்றனர்.


அதற்காக அவர்கள் குழந்தைகளுக்கு பல்வேறு வகையான உணவுகளைக் கொடுக்கின்றனர். அது தவறான ஒரு பழக்கமாகும். குழந்தைகளுக்கு கொடுக்கும் உணவுகள் தொடர்பில் நாம் ஒவ்வொருவரும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு இனிப்பு சுவையுள்ள உணவுகளை வழங்குவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். கொழுப்புச் சத்துள்ள உணவுகள் குழந்தைகளை குண்டாகச் செய்யும். குழந்தைகள் குண்டாக இருப்பது உண்மையாகவே அவர்களின் ஆரோக்கியத்துக்கு ஏற்றதொன்றல்ல. வயதுக்கேற்ற நிறையும் உடல் அளவும் கொண்டிருப்பது தான் மிகவும் சிறந்தது.

# மரக்கறியிலும் இசைக்கருவியா...?



மரக்கறி வகைகளுள் ஒன்றான முள்ளங்கி, மரப்பலகை ஒலிபெருக்கி ஆகியவற்றைப் பயன்படுத்தி இசைக்கருவி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் கருவியிலிருந்து பிறப்பிக்கப்படும் ஒலியை கணினியின் உதவியுடன் பதிவு செய்ய முடியும்.



# இரத்தச் சோகை என்றால் என்ன...?

இரத்தச்சோகை என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? கட்டாயம் நாம் இது பற்றி தெரிந்திருக்க வேண்டும். காரணம் எமது உடலின் சீரான இயக்கம், உற்சாகம் மற்றும் அதன் திடகாத்திரம் என்பனவற்றில் இது பெரும் தாக்கத்தை செலுத்துகின்றது.

அனீமியா என்று சொல்லப்படும் இந்த இரத்தச் சோகையானது எமது கோப உணர்வை அதிகரிப்பதுடன் உடல் சோர்வு, தலைவலி, மயக்கம் போன்ற பல்வேறு வகையான பிரச்சினைகளை எமக்குள் ஏற்படுத்துகின்றது.

எமது உடலில் செங்குருதி சிறுதுணிக்கைகள் எனப்படும் குருதிக்கலன்களில் ஈமோ குளோபின் எனப்படும் இரசாயனப் பதார்த்தம் சுரக்கின்றது. இது நாம் சுவாசிக்கும் ஒட்சிசனைக் குருதியிலிருந்து பிரித்தெடுத்து உடலின் பல்வேறு அங்கங்களுக்கும் கொண்டு செல்கின்றது.

இவ்வாறு செல்லும் ஒட்சிசனானது எமது உடலில் காணப்படும் குளுக்கோசை எரித்து உடம்பின் இயக்கத்துக்குத் தேவையான சக்தியை பிறப்பிக்கின்றது. இந்தச் சக்தியைப் பெற்றே எமது உடம்பு சீராக இயங்குகின்றது. எனவே உடம்பின் இயக்கத்துக்கு அடிப்படையாய் அமையும் இந்த ஈமோகுளோபினின் அளவு குறைவதால் உடலில் ஏற்படும் பாதிப்பே இரத்தச் சோகை எனப்படுகிறது.



இரத்தச் சோகை ஏற்படுமாயின் எமது உடற்கலன்களுக்கு தேவைப்படும் ஒட்சிசனின் அளவில் பாதிப்பு ஏற்படும். எனவே உடல் இயக்கத்துக்குத் தேவையான சக்தி பிறப்பாக்கம் தடைப்படும். இதனால் உடல் சோர்வடைவதுடன் தலைவலி, தலைச்சுற்று என்பனவும் ஏற்படும்.

இந்தநிலைமை அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் மயக்கம் ஏற்படுவதுடன், சில வேளைகளில் பாரதூரமான விளைவுகளையும் ஏற்படுத்திவிடும். இவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தும் இந்த இரத்தச் சோகையானது ஏன் ஏற்படுகின்றது? யாரை இது அதிகளவில் தாக்குகின்றது? அதனை எவ்வாறு தவிர்த்துக் கொள்ளலாம்? என்பது பற்றி இனிப் பார்ப்போம்.

குருதிச்சோகைக்கான பிரதான காரணம் இரும்புச்சத்து மற்றும் விற்றமின் டீ குறைபாடுகள் தான். அத்துடன் உடம்பிலிருந்து அதிகமாக இரத்தம் வெளியேறும் பட்சத்தில் ஈமோகுளோபின் அளவு குறைவடைந்து குருதிச் சோகை ஏற்படலாம்.

அதிகளவில் பெண்களையும், சிறுவர்களையுமே இது அதிகம் பாதிக்கின்றது. இதனைத் தவிர்த்துக்கொள்வதற்கான ஒரே வழி இரும்புச் சத்துள்ள உணவுகளை அதிகளவில் உண்பது தான். கோழி இறைச்சி, மீன் போன்றவற்றில் இரும்புச் சத்து அதிகம் காணப்படுகின்றது.

எமது உடல் மாமிசங்களில் இருக்கும் இரும்புச் சத்தை இலகுவாக அகத்துறிஞ்சும் தன்மை கொண்டது. பெரும்பாலும் மாமிச வகைகளைச் சாப்பிடுபவர்களுக்கு இரத்தச் சோகை ஏற்படுவது குறைவு. அப்படியென்றால் சைவ உணவுகளை சாப்பிடுபவர்களுக்கு இரத்தச் சோகையிலிருந்து விடுதலை இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். மரக்கறி வகைகளைப் பொறுத்த மட்டில் கீரைகளிலேயே இரும்புச் சத்து அதிகமாக இருக்கின்றது. ஆனால் மாமிசங்களைப் போன்று இவற்றில் இருக்கும் இரும்புச் சத்துக்களை உடல் முழுமையாக அகத்துறிஞ்சுவது இல்லை. எனவே சைவ உணவுகளைச் சாப்பிடுபவர்கள் கீரைகளைச் சமைக்கும்போது சிறிதளவு தேசிக்காய் சாற்றை பிழிந்து விட்டு சாப்பிடுவதுடன், சாப்பிட்டதன் பின்னர் புளிப்புச் சுவையுள்ள தயிர் மற்றும் பழங்களை சாப்பிடலாம். இதன் மூலம் உணவில் உள்ள இரும்புச் சத்தை முழுமையாக உடல் அகத்துறிஞ்சுகிறது. உணவில் கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம் என்னவென்றால் கல்சியத்தையும் இரும்புச் சத்தையும் ஒன்றாக உண்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சிக்கான வாசல் கதவுகள்



சர்வேஸ்

மனிதர்கள் எல்லோரும் மகிழ்ச்சியான வாழ்க்கையைத் தான் தங்கள் வாழ்நாள் முழுவதும் எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் எந்த மனிதனுக்கும் வாழ்க்கையின் அத்தனை கணங்களும் முற்றுமுழுதாக மகிழ்ச்சியாக இருந்தது கிடையாது. மனிதர்கள் பலரின் வாழ்க்கையில் இன்பம் துன்பம் இரண்டையும் ஒரு தராசில் இட்டால் துன்பப் பக்கம் தாளாத மனிதர்களைக் காணவே முடியாது.

எனினும் எங்கள் வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் விடயங்களைத் துன்பங்களாகவும் இன்பங்களாகவும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் மனிதர்களுக்கு மனிதர்கள் வேறுபடுகின்றது. சிலர் துன்பமாக நோக்கும் விடயங்களைச் சிலர் இன்பமாக எடுத்துக்கொள்ளும் மனப்பக்குவத்தை உடையவர்களாக இருக்கின்றார்கள்.

இன்பமாக எடுத்துக்கொள்ள வேண்டிய பல விடயங்களையே துன்பங்களாக நினைத்து எதிர்கொள்ளும் பல மனிதர்களையும் நாம் காண்கின்றோம். உதாரணமாக வெளியூரில் இருந்து ஓர் உறவினர் எங்கள் வீட்டுக்கு விருந்தாளியாக வந்து சில நாள்கள் தங்கநேரும் போது சிலர் அதை மகிழ்வாக எடுத்து கொண்டாடி மகிழ்வார்கள். சிலர் அதைச் சுமையாக எண்ணி எப்போது அவர்கள் மீளத்திரும்புவர் என நாள்களை எண்ணுவார்கள். மனிதமனம் விந்தையானது.

உளவியல் அறிஞர்கள் தங்கள் ஆய்வுகளின் முடிவாக ஒன்றைக் கண்டறிந்துள்ளார்கள். எங்கள் வாழ்க்கையில் பத்து வீதமான நிகழ்வுகள் எமது கட்டுப்பாட்டை மீறி நிகழ்வன.

உதாரணமாக நமது பிறப்பு, இனம், மொழி, அங்கவீனக் குறைபாடுகள் போன்றவை. இவற்றை நாம் தீர்மானிக்கமுடியாது. மிகுதி தொண்ணூறு வீதமும் அந்த பத்து வீதத்துக்கு நாம் எவ்வாறு பிரதிபலிப்புக்களை காட்டுகின்றோம் என்பதில் தான் தங்கியிருக்கின்றது. நாம் நமது பிரதிபலிப்புக்களை மகிழ்ச்சியான விதத்தில் காண்பிப்போமாக இருந்தால் வாழ்க்கை மகிழ்ச்சியாகின்றது. பிரதிபலிப்புக்களை எதிர்மறையாக காண்பித்தால் வாழ்க்கை நரகமாகின்றது. இந்த சின்ன மையத்தில் தான் வாழ்க்கையின் அச்சு சுழல்கின்றது. இதை நம்மில் பலர் உணரத் தவறுகின்றோம்.

அன்னை திரேசா தனது ஆதரவற்ற குழந்தைகளுக்காக ஒரு செல்வந்தரிடம் கையேந்தி நின்றார். செல்வந்தச் பணச்செருக்கால் அன்னையின் கரங்களில் காறி உமிழ்ந்தார். அப்போது மிகவும் அமைதியாக அன்னை "ஐயா தாங்கள் தந்த எச்சிலை நான் வைத்துக்கொள்கின்றேன். எனது பிள்ளைகளுக்காக ஏதேனும் தாருங்கள்" என்றாராம். அன்னையின் பிரதிபலிப்பால் மிகவும் குறுகிப்போன அந்த செல்வந்தர் தனது சொத்துக்களில் பெரும் பகுதியை அன்னையிடம் ஆதரவற்ற பிள்ளைகளுக்காக கையளித்தாராம். இவ்வாறு தான் நமது பிரதிபலிப்புக்கள் நம்மை மட்டுமன்றி நம்மைச் சூழவுள்ளவர்களையும் தொற்றிக்கொண்டு பயன்விளைவிக்கின்றன. பிரதிபலிப்புக்களை இன்பமாகத் தரவல்ல மனிதர்களைச் சூழ்ந்திருப்பதற்கே பலர் ஆசைப்படுவார்கள். ஏன் நாம் அத்தகைய மனிதர்களாக இருக்கக்கூடாது என்று நாம் சிந்தித்ததுண்டா?

நம்மில் பலர் நமது உரிமைகள் தொடர்பில் நாளாந்தம் கவலை கொள்கின்றோம். ஆனால் எங்களுள் பலர் தங்கள் கடமைகள் பற்றி கருத்தில் எடுப்பதே கிடையாது. உங்கள் கடமைகளில் இருந்து நீங்கள் ஒதுங்கிக் கொள்வீர்களேயானால் உங்கள் உரிமைகளில் இருந்து நீங்கள் ஒதுக்கப்படுவீர்கள். இது உலக நியதி.

இந்த நியதி யாருக்கும் விதிவிலக்காக அமைந்து விடுவது கிடையாது. அதுமட்டுமன்றி எங்கள் வாழ்க்கையின் மகிழ்ச்சியின் அளவும் இந்த நியதிக்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவத்தில்தான் தங்கியிருக்கின்றது.

குடும்பம் என்று வருகின்ற போது ஒருவன் கணவனாக தனது மனைவிக்கு தான் புரிய வேண்டிய கடமைகளிலும், தந்தையாக இருந்து தனது பிள்ளைகளுக்கு தான் புரிய வேண்டிய கடமைகளிலும் கவனமற்று இருப்பானானால் அவனுக்கு ஒரு கணவனுக்கோ அல்லது தந்தைக்கோ கிடைக்க வேண்டிய உரிமைகள் அந்தக் குடும்பத்தில் கிடைக்காது. அவனது வாழ்க்கையின் மகிழ்ச்சியை அவனே தொலைத்தவனாகின்றான்.

இது போன்றே வேலைசெய்யும் இடத்திலும் நமது கடமைகளை நாம் புறக்கணிக்கின்ற போது எமக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்வதிலும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அது எமக்கான மகிழ்ச்சியான வேலைச் சூழலை ஒரு போதும் உருவாக்கித் தரமாட்டாது. அதுமட்டுமன்றி மகிழ்ச்சியற்ற மனதோடு நாம் பணிபுரிவது மற்றையவர்களுக்கும் மகிழ்ச்சியைத் தரப்போவது கிடையாது.

எனவே, நமது வாழ்க்கையின் மகிழ்ச்சியை மட்டுமன்றி நம்மைச் சூழவுள்ள சூழலையும் மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ளும் ஆற்றல் நமது பிரதிபலிப்புக்களுக்கு உண்டு. நாம் சாதாரணமானவர்கள் கிடையாது.

நமது நேர்த்தன்மையான எண்ணங்கள் ஆயிரம் நன்மைகளை எமக்கு மட்டுமன்றி மற்றவர்களுக்கும் விளைவிக்கக்கூடியன. இந்த தன்மையை உணர்ந்து எமது பிரதிபலிப்புக்களை மகிழ்ச்சிக்கான வாசல் கதவுகளாகத் திறந்து வைப்போம். ★

# தமிழின் பெயரால் அரசியல்

தமிழ் இனம்தான் சர்சைக்குரியது என்றில்லை. தமிழ் என்றுமே சர்ச்சைக்குரியதாகவே இருக்கின்றது. தமிழின் பெயரால் எடுக்கப்படும் விழாக்களுமே சர்ச்சைக்குரியனவாகவே இருக்கின்றன.

நாட்டாமையின் கீழியங்கும் திணைக்களத்தால் தமிழ் மொழியை சிறப்பிப்பதாக எண்ணி, அதனை கொண்டாட முற்பட்டு அரசியல்வாதிகளின் போட்டியால் சீரழித்ததுதான் மிச்சம். பருத்தித்துறையில் குறித்த விழா கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் அனைத்தும் முடிந்த நிலையில், நிகழ்வுக்கான அழைப்பிதழில் படங்கள் பிரசுரிக்கப்படுவதில் ஏற்பட்ட தகராறு காரணமாக இறுதியில் அந்த நிகழ்வையே ஒத்தி வைத்தனர்.

இதன் பின்னர் ஒருவாறு நிகழ்வு தமிழ் இராசதானியின் தலைநகரில் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.




நாட்டாமையின் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட அரசியல் மயப்படுத்தப்பட்ட குறித்த நிகழ்வில், விருது பெறுபவர்களைத் தவிர வேறு எவரும் பங்கேற்கவில்லை. அதனால் பட்டதாரிப் பயிலுநர்களை அழைத்து வந்து கதிரைக் கணக்குக்கு இருத்தியிருந்தார்கள். நிகழ்ச்சி அறிவிப்பாளர் ஒருவராக யாழில் இயங்கும் அரச ஆதரவு தொலைக்காட்சி அறிவிப்பாளரை நாட்டாமை நியமித்திருந்தார். தமது தொலைக்காட்சி நிகழ்வுபோல் மணிக்கொரு தரம் தனது தொலைக்காட்சியை அவர் விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தார்.

இந்த விறுத்தத்தில் மாலை நிகழ்வு 2 மணிக்கு ஆரம்பமாகியது. நாட்டாமையும், தியேட்டர்காரருமே பிரதானமானவர்கள். தமிழே தெரியாத நாட்டாமை 2 மணிக்கு வர நிகழ்வு தமிழ் வரவேற்பு நடனங்களுடன் ஆரம்பமாகியது. நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது 5 மணியளவிலேயே தியேட்டர்காரர் வந்து சேர்ந்தார்.

அவர் வந்ததும் மீண்டும் மேள தாளம் முழங்க வரவேற்பு நடந்தது.

தமிழின் பெயரால் விழா எடுத்து, அதனைத் தங்களது அரசியலுக்கு பயன்படுத்தும் சுயலாப அரசியல்வாதிகள் இருக்கும் வரையில் தமிழுக்கும் விடிவில்லை, தமிழனுக்கும் விடிவில்லைப் பாருங்கோ.....!

நக்கல் நரசிம்மன்.

# உதயனை விமர்சியுங்கள்

உதயன் பத்திரிகையில் நாளாந்தம் வெளிவரும் அனைத்து விடயங்களும் என்னை மிகவும் கவர்வன. எமது பிரதேசத்தில் உள்ள வாசிகசாலைக்குச் சென்றே நான் தினமும் பத்திரிகையை வாசித்து வருகிறேன்.

தற்போது வெளிநாட்டுச் செய்திகளையே உதயன் பத்திரிகை அதிகம் கருவதை அவதானிக்க முடிந்துள்ளது. உள்ளூர் பத்திரிகை என்பதால் எமது பிரதேச செய்திகளையும் அதிகம் உள்வாங்கி வெளிக்கொணர்ந்தால் மக்கள் பயன் அடைவர்.

ஏனெனில் சில அதிகாரிகள் விடுகின்ற தவறுகளை உடனுக்குடன் சுட்டிக்காட்டி அதற்கான தீர்வுகளையும் பெற்றுக் கொடுத்து வருகிறது உதயன் பத்திரிகை.

எனவே வெளியூர் செய்திகளை ஓரளவு குறைத்து உள்ளூர் விடயங்களின் குறை நிறைகளைப் பிரசுரித்து அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். தொடர்ந்தும் உதயன் பத்திரிகையின் பணிகள் தொடர வாழ்த்துகிறேன்.

**அல்லைப்பிட்டி,**
**கவியரசன்**

★ ★ ★

25 வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாணத்தில் பத்திரிகைத் துறையில் மக்கள் மனதில் இடம்பிடித்துள்ள உதயன் பத்திரிகைக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஓர் அரச உத்தியோகத்தராக கடமையாற்றுவதால் உதயனில் வெளிவரும் அனைத்துப் பக்கங்களையும் தவறாது வாசிப்பேன்.

உலக நடப்பு விடயங்கள் உட்பட எமது பிரதேச தகவல்களையும் காலம் தாழ்த்தாது உதயன் பத்திரிகை தருகிறது. இருந்தும் சிறுவர்களுக்கான தகவல்கள் மிகக் குறைவாகவே உள்ளன. சனி, ஞாயிறு தினங்களில் சிறுவர்களுக்கான தகவல்கள் வெளிவருகின்றன.

ஆனால் இந்த இரு தினங்களும் விடுமுறை நாள்கள் என்பதால் மாணவர்கள் அதனைப் பார்க்கத் தவறுவது வழமை. எனவே இதனை வார நாள்களில் பிரசுரித்தால் பாடசாலைகளில் மாணவர்கள் பத்திரிகையை வாசிக்கும் போது இந்தத் தகவல்களையும் உள்வாங்குவார்கள்.

மாணவர்களின் ஆக்கங்களை அதிகளவு உள்வாங்கி தினமும் ஏதாவது ஒரு விடயத்தை பிரசுரித்தால் மாணவர்கள் ஆர்வத்துடன் பத்திரிகையை வாசிப்பார்கள் என்பதே என்னுடைய எதிர்பார்ப்பாகும்.

**வி.மேகலா, ஆசிரியர்**
**கொக்குவில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியும் தேவையா அகங்காரம்?

"தனது மனைவியை விட முக்கியத்துவம் அற்ற ஒருவனாக வாழ்வதாக அவன் தாழ்வு மனப்பான்மை கொள்கின்றான். இது மனைவியுடன் அடிக்கடி கருத்து வேற்றுமை ஏற்படுவதற்கும் வழிவகுக்கின்றது. இத்தகையானோர் மனைவியின் உறவினர்கள் மற்றும் நண்பர்களைச் சந்திப்பதையும் தவிர்த்துக்கொள்வர்.

■ ராஜராஜன்



எந்தவோர் ஆணும் தனக்கு மேல் எந்த நிலையிலும் பெண்ணொருத்தி இருப்பதை ஒரு போதும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வதில்லை. பலர் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இதனை ஏற்றுக் கொள்வதைப் போன்று பாசாங்கு செய்து கொள்கின்றனர்.

ஆனால், சந்தர்ப்பம் கிடைக்கும் போது பெண்களைத் துன்புறுத்துவதற்கு இவர்கள் தயங்குவதில்லை. ஏனென்றால் இவர்களின் அடிமனதில், தான், ஓர் ஆணென்ற அகங்காரம் நிறைந்து காணப்படுகின்றது. இது மேலெழுந்து வரும் போது அதன் உண்மையான சொரூபம் வெளியே தெரிகின்றது. இதனையே Ego என ஆங்கிலத்தில் அழைப்பார்கள்.

உதாரணமாக, ஒரு குடும்பத்தை எடுத்துக் கொள்வோம். மனைவி மெத்தப் படித்தவள். அரசில் உயர் பதவியும் வகிக்கின்றாள். மேன்மேலும் பதவியுயர்வுகள் அவளுக்காகக் காத்திருக்கின்றன. அவளைச் சுற்றியுள்ளவர்கள் அவளை மிகவும் மதிக்கின்றனர். அவளது படிப்புக்காகவும், பதவிக்காகவும் அவளைப் போற்றுகின்றனர்.

அவளது கணவனோ அவள் அளவுக்குப் படிக்காதவன். நிரந்தரமான தொழிலிலும் இல்லை. ஏதோ தான் சும்மா இருப்பது வெளியே தெரியக்கூடாது என்பதற்காக தனது வசதிக்கேற்றவாறு தொழில்களை மாற்றி மாற்றிப் புரிபவன். வருமானமும் அவ்வளவாக இல்லை. மனைவி உழைப்பதால் குடும்பத்துக்குத் தேவையான பணமும் கிடைக்கின்றது.

இந்த நிலையில் வீட்டுக்கு வருபவர்கள் மனைவியின் படிப்பையும், பதவியையும் பற்றி விசாரிப்பார்கள், ஒரு சிலர் அவளது வருமானம் தொடர்பாகவும் துருவுவார்கள். இத்தனைக்கும் அவளது கணவன் ஓர் ஓரத்தில் ஒதுங்கியிருந்து நடப்பது எல்லாவற்றையும் அவதானித்துக்கொண்டிருப்பான்.

வந்தவர்கள் சீக்கிரமே புறப்படமாட்டார்களா என்ற தவிப்பு அவனுள் கிளம்பியிருக்கும். எங்கே தன்னைப் பற்றியும் அவர்கள் விசாரித்து விடுவார்களோ என்ற பயமும் அவனுக்குள் ஏற்பட்டிருக்கும்.

வந்தவர்கள் சென்ற பின்னர்தான் அவனிடமிருந்து நிம்மதிப் பெருமூச்சு கிளம்பும். தான் தனது மனைவியை விட முக்கியத்துவம் அற்ற ஒருவனாக வாழ்வதாக அவன் தாழ்வு மனப்பான்மை கொள்கின்றான்.

இது. மனைவியுடன் அடிக்கடி கருத்து வேற்றுமை ஏற்படுவதற்கும் வழிவகுக்கின்றது. இத்தகையானோர் மனைவியின் உறவினர்கள் மற்றும் நண்பர்களைச் சந்திப்பதையும் தவிர்த்துக்கொள்வர்.

மேலும், சகல விதத்திலும் தனது மனைவிக்குத் தான் தாழ்ந்தவனல்ல என்பதை நிலை நிறுத்துவதிலேயே குறியாக இருப்பார்கள். இதனால் இவர்களது குடும்பத்தில் அடிக்கடி சச்சரவுகள் தோன்றும். பிரிவுக்கும் வழிவகுக்கும்.

இந்த நிலை அரச குடும்பங்களிலிருந்து சாதாரண குடும்பங்கள் வரை காணப்படுகின்றது. பிரிட்டிஷ் மகாராணி இரண்டாவது எலிசபெத் அரசியாக மகுடம் சூட்டி பல தசாப்தங்கள் கழிந்துள்ளன. இவரது மூத்த மகனான இளவரசர் சாள்ஸ் அரசராக முடிசூடிக்கொள்ளும் நாளுக்காகக் காத்திருக்கின்றார்.

ஆனால், இவரது தாயாரின் மறைவுக்குப் பின்ரே இது சாத்தியமாகும். இதேவேளை, எலிசபெத்தின் கணவர் பிலிப் கோமகனும் மகாராணியைக் கைபிடித்த நாள் முதல் அ[illegible] கின்றார். [illegible] மகாராணிக்குத்தான். பிலிப் கோமகனார் வெறும் காட்சிப் பொருளாகவே மதிக்கப்படுகின்றார். இந்த நிலையை அவர் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டிருப்பதாகக் கூற முடியுமா?

இத்தகைய அனுபவம் தான் உயர்ந்த இடங்களை வகிக்கும் பெண்களின் கணவன்மார்களுக்குக் கிடைக்கின்றது. உலகப் புகழ்பெற்ற விளையாட்டு வீராங்கனைகள், திரைப்பட நடிகைகள், பாடகிகள், எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், கல்வியாளர்கள், அரசியல்வாதிகள், உலக அழகிகள் போன்ற பெண்களின் கணவன்மார்கள், அவர்கள் அளவுக்குத் தாம் இல்லாதபோது ஏதோ ஒரு வகையில் விரக்தி ஆட்கொண்ட நிலையில் வாழ்வதைக் காணமுடிகின்றது.

இத்தகையோரில் பலர் இறுதி வரை வெளிச்சத்துக்கு வராமலேயே இருந்து வருகின்றனர்.

அண்மையில் பிரபல பாடகி நித்தியஸ்ரீயின் கணவரான மகாதேவன் ஆற்றில் குதித்து தற்கொலை புரிந்துகொண்டதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இந்தச் சம்பவம் நித்தியஸ்ரீக்கு மட்டுமல்ல அவரது ரசிகைகளுக்கும் கடும் சோகத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் கருத்து வேறுபாடில்லை.

நித்தியஸ்ரீ இந்தியாவில் மட்டுமல்ல இலங்கை உட்பட பல நாடுகளிலும் பரிச்சயமான ஓர் [illegible]ராவார். அவர் சில [illegible] இலங்கைக்கும் வருகை தந்துள்ளார். அவரது கணவரின் மறைவு தொடர்பான சோகம் நித்தியஸ்ரீயின் மீது அவரின் ரசிகர்கள் கொண்டுள்ள அனுதாபத்தின் வெளிப்பாடேயாகும்.

ஏனென்றால் நித்தியஸ்ரீயின் பெயருடன் ஒட்டிக்கொண்ட மகாதேவனின் பெயரை மட்டுமே ரசிகர்கள் அறிவார்கள் இதனைவிட அவரைப்பற்றி ஒன்றுமே அவர்களுக்குத் தெரியாது.

இன்று எல்லா வகையிலும் பெண்கள் ஆண்களுக்குச் சமமாக உயர்ந்து நிற்கின்றனர். விண்வெளியில் பல நாள்கள் தங்கி நின்று ஆராய்ச்சி செய்யுமளவுக்கு அவர்கள் வலிமை பெற்றிருக்கின்றனர். அரசியல் ரீதியிலும் பெண்கள் உயர்ந்த இடத்தை வகிக்கின்றனர். ஆனால் ஆண், பெண் என்ற வேறுபாடு பால் ரீதிக்கு அப்பால் சென்று, பெரும் ஏற்றத் தாழ்வுகளுடன் இன்னமும் காணப்படுகின்றது.

தாம் பெண்களை விட உயர்ந்தவர்கள் என்னும் அகங்காரம் ஆண்களின் மனதிலிருந்து இன்னமும் அகலவில்லை. அவர்களின் மனங்களில் பெண்களின் உயர்வுகளை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் ஏற்படும்வரை இந்த 'ஈகோ' என்கின்ற வியாதியும் தொடரும் என்பதில் ஐயமில்லை- ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Learn from the Leader with world class Certifications
and make your child an **IT Professional**

**Diploma in Microsoft Office**
Course Fee : 3,500/=
Course Duration: 48 Hours

**Diploma in Computer Science**
Course Fee : 3,500/=
Course Duration: 48 Hours

**Graphic Designing & Type Setting**
Course Fee : 3,500/=
Course Duration: 60 Hours

**Computer for KIDS**
Course Fee : 500/= (Monthly)
Course Duration: 6 Months

**Get ICDL in 90 Hrs**



*ICDL is the internaional standard in end - user computer skills. ICDL certification programme consist of modules which define the skills and competencies necessary to be a proficient user of a computer and common computer applications. Each ICDL module provides a practical programme of up-to-date skills and knowledge areas which are validated by a test.*

*The available modules are:*

- Module 1 - Basic Concepts of Information Technology (ICT)
- Module 2 - Using the Computer and Managing Files
- Module 3 - Word Processing
- Module 4 - Spreadsheets
- Module 5 - Databases
- Module 6 - Presentation
- Module 7 - Information and Communication

**Course Fee :**
~~10,500/=~~ **6,500/=**
**(Special Offer for O'Level Students)**

**GATEWAY ICT CENTRE JAFFNA**

Language Centre | IPICT | ICDL | e-Citizen

**JAFFNA** 347, Kasthuriyar Road | **NELLIADY** 55, Pointpedro Road | **CHAVAKACHERI** 1st Fl, New Market Building


## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் கந்தசாமி மனோகரன்



அமரர் மனோகரன் செந்தூரன்

அன்னை மடியில் – 25.07.1960　அன்னை மடியில் – 15.01.1991
ஆழியின் பிடியில்– 26.12.2004

குடும்பத்தின் குலவிளக்கும் குலம் காக்கும் தலைமகனும் ஆழியிலே பள்ளிகொண்டு ஆண்டு எட்டு ஆனதுவோ- கண் விழித்து இனி உமை நாம் காணவே முடியாது என் செய்வோம் எம் இனிய உறவுகளேபன்னிருசெல்வங்களே உமை என்றும் கண் மூடிக்காணுகின்றோம் காளித்தாய் பாதத்தில்.

மில்லேன் ஒழுங்கை, மல்லாகம்.　　திருமதி மனோகரன் மதுரமோகனா, பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
11 . 01 . 1946



இறைவன் அடியில்
07 . 01 . 2012

### அமரர் சுப்பிரமணியம் தம்பிராசா

(K.K.S.பாம் - கிளிநொச்சி)


*எங்கள் அன்பு அப்பாவே!*
*நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு போனாலும்*
*எங்கள் மனம் ஒருபோதும் உங்கள் பிரிவை ஏற்க மறுக்குதப்பா*
*எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்டீர்கள் அப்பா!*

*எம் அன்புத் தெய்வமே! நீரிழிவு நோய் வந்து உங்களை அவசரமாக*
*அழைத்தது ஏனப்பா? காலமெல்லாம் கலங்கி நிற்பதைப் பார்ப்பதற்காகவோ அப்பா!*
*ஆறாது ஆறாது எம்மனம் நீறாகி போகும் வரை ஆறாது அப்பா*
*எங்கள் எல்லோரையும் ஆறாத் துயரில் விட்டுச் சென்றாலும் உங்களை*
*எங்கள் திருநெல்வேலி வைரவர் பாதத்தில் வைத்து மலர் தூவி வணங்குகின்றோம் அப்பா!*

எமது இல்லத்தில் இன்று (26.12.2012) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*'அன்னை இல்லம்',*
*தாளையடி லேன்,*
*திருநெல்வேலி.*

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.


**Australian Government**

**அவுஸ்திரேலியாவுக்கு வீசா இல்லாமல் படகுமூலம் நீங்கள் பயணம் செய்தால்**

- உங்களது விண்ணப்பம் அவுஸ்திரேலியாவில் பரிசீலிக்கப்படாது போகலாம்.
- எனவே, நீங்கள் நவுறு, பப்புவா நியூகினி போன்ற வேறொரு நாட்டிற்கு இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.
- இலங்கையிலுள்ள உங்களது குடும்பத்தினருக்கு அனுப்பவென நவுறுவிலோ அல்லது பப்புவா நியூகினியிலோ நீங்கள் பணத்தைச் சம்பாதிக்க முடியாது.
- விசேட மனிதாபிமான திட்டத்தின் அடிப்படையில் உங்களது குடும்பத்தை உங்களுடன் இணைத்துக்கொள்ளவென உங்களால் விண்ணப்பிக்க முடியாது.

மேலதிகத் தகவல்களை www.youtube.com/user/notopeoplesmuggling என்ற முகவரியில் 'ஆட்கடத்தலுக்கு மறுப்பு' என்ற யூ டியூப் அலைவரிசை மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org